நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமும் ஆனவன்

DR. PAUL ENENCHE
NIGERIA

★ தமிழில் ★

Pr. Romilton

நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமும் ஆனவன்

Dr. Paul Enenche
Nigeria

-------- தமிழில் --------

PASTOR. S.ROMILTON

அட்டவணை

1. இன்றைய முக்கிய செய்தி 04

2. உன் ஊழியத்தின் கூர்மையும் தாக்கமும் 09

3. அபிஷேகப் பெருக்கம்..போராட்டப் பெருக்கம் ! 13

4. நான் உம்மை விடுவதில்லை ! 17

5. அன்றாடம் அதிகரிக்கும் சாத்தானின் ஆதிக்கம் 23

6. நீயே அந்த மனிதன் ! 27

7. முழுக்கட்டுப்பாட்டையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடக்கும் யுத்தம் 30

8. கோதுமையிலிருந்து பதரைப் பிரித்தெடுக்க நடக்கும் ஒரு யுத்தம் 35

9. இழுத்து மூடு ! 38

10. ஒரு வார்த்தை சொல்லு ! 43

11. தேவ இராஜ்யத்தின் தலைப்புச்செய்தி 48

12. நமது கனிகளின் தரம் 53

13. தண்டாயுதம் செய்யப்படும் விதம் 61

14. சீவிச்செதுக்கி தேய்த்து இழைத்து எடுக்கப்பட வேண்டியவை... 69

15. கோடரி முனை 80

16. திறம்படப் பயன்பட வேண்டிய தண்டாயுதம் எப்படி இருக்க வேண்டும் ? 86

இன்றைய முக்கியசெய்தி

CHAPTER - 01

தண்டாயுதம் என்றதும் நமது ஞாபகத்துக்கு வருவது யுத்தம் மட்டுமே!

யுத்தம் என்ற ஒன்று நடக்காத பட்சத்தில் "தண்டாயுதம்" "அஸ்திராயுதம்" போன்ற வார்த்தைகள் புழக்கத்தில் இருக்க வாய்ப்பில்லை.

போர் பிரகடனம் செய்யப்படாத வரை போராயுதங்கள் பற்றி யாரும் சகஜமாகப் பேசப்போவதுமில்லை.

ஒவ்வொரு நாளும் நாம் யுத்த களத்தில் நிற்கிறோம். யுத்தத்துக்கு எல்லை குறிக்கப்பட்டாகி விட்டது. அந்தகார சேனைகளுக்கும் ஒளியின் பிள்ளைகளுக்கும் போர் தொடங்கி விட்டது.

யுத்தத்தில் வல்ல யேகோவா தேவனுக்கும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிக்கும் நடக்கும் இறுதிப்போர் இது!

இதில் வேதனை என்னவென்றால்,மும்முரமாய் நடக்கும் போர்க்களத்தின் நடுவில் நிற்கிற விசுவாசி ஒருவன், போர் என்ற ஒன்று நடக்கிறது என்ற உணர்வே இல்லாமல் இருப்பது தான். அப்படிப்பட்டவன் மதிகெட்டவன் சாகிறது போல செத்துப்போகிறான்.

தீவிர யுத்த களத்தில் நிற்கிறேன் என்ற எண்ணமே இல்லாமல் இந்த உலகத்தில் வாழ்கிறவன் உயிரோடே செத்தவன்.

தாங்கள் யுத்தத்தில் இருக்கிறோம் என்றும், தங்களுக்குக் கொஞ்சக்காலமே உண்டு என்றும் வானமண்டல அந்தகார லோகாதிபதிகளும் பில்லிசூனியக்காரரும் சாத்தானிய இயக்கத்தினரும் நன்றாகவே அறிவார்கள்.

ஆனால் அறியாமையினால் சங்காரமாகிற தேவ ஜனங்களோ,"கர்த்தர் கைவிடமாட்டார்" என்று பாடிக்கொண்ட வாழ்க்கையை enjoy பண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

இதற்கு மத்தியில் போர் மேகங்கள் சூழ்ந்த இந்தக் காலக்கட்டத்தில், தேவன் உன்னைத் தமது " தண்டாயுதமாகவும் அஸ்திராயுதமாகவும்" தனக்காகத் தெரிந்து கொள்ள விரும்புகிறார்..

உன் வாழ்க்கை பிசாசுக்கும் அவனது ராஜ்யத்துக்கும் எரிச்சலை உண்டாக்கப் போகிறது! நீ இருக்கும் இடத்தின் நாலாபக்கமும் நிமிர்ந்து நிற்கிற அவனது கொத்தளங்களும் கோட்டைகளும் நொறுங்கி சரியப்போகிறது!

மேற்கொண்டு நீ படிக்கப்போகும் இந்தச்செய்தி உன் வாழ்க்கையையும் ஊழியத்தையும் தலை கீழாகப் புரட்டிப்போடப் போகிறது!

தேவன் அதை உன்னைக் கொண்டு தான் செய்யப்போகிறர்!

" நீயே தேவனின் போராயுதம் "

" நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன்"

நான் உன்னைக்கொண்டு ஜாதிகளை நொறுக்குவேன்.உன்னைக் கொண்டு ராஜ்யங்களை அழிப்பேன்..

உன்னைக் கொண்டு குதிரையையும் குதிரை வீரனையும் நொறுக்குவேன்.உன்னைக் கொண்டு இரதத்தையும் இரதவீரனையும் நொறுக்குவேன்.." (எரே 51:20,21)

தேவன் தமது பிள்ளைகளையே ஆயுதங்களாக்கி தமது யுத்தத்தை நடத்துகிறார் என்பதை அறிந்து கொள்! நீ ஒரு சாதாரண விசுவாசி அல்ல..நீ தேவனது யுத்த ஆயுதம்!

நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தில் தேவனுடைய ராஜ்யம் தோற்கிறதென்றால்,அதற்குக் காரணம், பிசாசின் வல்லமை பல மடங்கு பெருகி விட்டது என்பது அல்ல.. அல்லவே அல்ல!

தேவனுடைய பிரச்சனையே அவரது ஜனங்கள் தான் - அவருக்கு வேதனையே நீயும் நானும் தான்!

சாத்தானுக்கு எதிரான யுத்தத்தில் ஜெயிக்க வேண்டுமானால்,நாம் யுத்தத்தின் மையத்தில் நின்று கொண்டிருக்கிறோம் என்ற உணர்வும் தீவிரமும் மிக மிக அவசியம் என்று பார்த்தோம்.

அந்த யுத்தத்தில் நீயே தேவனது ஆயுதம்!
யுத்தம் நிச்சயம்..அதில் நீயே அவரது ஆயுதம் -நன்கு புரிந்து கொள்!
தேவன் தமது மக்களையே தனது கைகளில் ஆயுதங்களாக ஏந்தி யுத்தம் செய்கிறார்..

அவரது கைகளில் மிஷின் gun களும்,
AK 47களும் கிரேனேடுகளும் அவரது ஜனங்களே!
பீரங்கிகளும் கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணைகளும் அவரது ஜனங்களே!

நீ ஒரு சாதாரணமான விசுவாசி அல்ல..
கர்த்தரது கரங்களில் மிக வலிமையான ஆயுதம் நீ !

பெலிஸ்தியருக்கு எதிரான யுத்தத்தில் தாவீது என்னும் ஆயுதம் கையில் கிடைக்காதவரை சவுல் நிராயுதபாணியாகத் தான் நின்றான்!

கர்த்தருக்கு பிசாசு ஒரு பொருட்டே அல்ல..
அவருக்குப் பிரச்சனையே அவரது அவசரத் தேவைக்கு ஏற்ற போராயுதங்கள் கிடைக்காத தட்டுப்பாடு தான்..

ஒவ்வொரு தலைமுறையிலும் அவரது போராட்டமே - உன்னையும் என்னையும் போன்ற ஆயத்தமும் கூர்மையுமாக்கப்பட்ட தண்டாயுதங்களும் அஸ்திராயுதங்களும் கிடைக்காத பற்றாக்குறையும் இல்லாமையும் தான்!

அவருக்கு பிரச்சனை பெலிஸ்தியரும் கோலியாத்தும் அல்ல- ஆனால் "தாவீது - போன்ற " முக்கூர் ஆயுதங்கள் இல்லாத திண்டாட்டமே!

அவருக்குப் பிரச்சனை பாகால் அல்ல..
அவருக்குப் பிரச்சனை ஆகாபும் யேசபேலும் அல்ல..
யேசபேல்களையும் அவளது தேவர்களையும் handle பண்ணத் தெரிந்த எலியா என்ற அக்கினியாஸ்திரம் அவரது கையில் கிடைக்கும் வரை அவருக்கு பிரச்சனை தான்!

இது ஒரு வேதனையான உண்மை!

கர்த்தரது இன்றைய மிகப்பெரிய பிரச்சனை,
பாவிகளோ பிசாசோ அல்ல..
இன்றைய நாளில் அவரது மிகப்பெரிய வேதனையே, தனது கையில் சரியான ஆயுதங்கள், உபகரணங்கள் - அதாவது அவர் எதிர்பார்க்கிற ரேஞ்சுக்கு ஒத்துவரக்கூடிய ஊழியக்காரர்களும் விசுவாசிகளும் இல்லையே என்ற வேதனை தான்!

இந்தக் கடைசி நாட்களில் யுத்தத்தில்,தேவ கரங்களில் தங்களையே தத்தம் செய்து அவரது தண்டில் சேவகம்

பண்ண, அவரது கைகளில் ஆயுதங்களாகத் தங்களை ஒப்புக் கொடுக்க ஆண்களும் பெண்களும் இல்லையே என்பதே அவரது வேதனை!

பிரியமானவனே, நீ உன்னையே சாதாரணமான ஒரு மனிதனாய் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து வெளியே வா!
நீ வழக்கமான பத்தோடு பதினொன்று அல்ல..

நடந்து கொண்டிருக்கும் மகா பெரிய யுத்தத்தில் தேவகரங்களில் நான் ஒரு போராயுதம் என்று உன் இருதயத்தில் எழுதிக்கொள்!

உன் ஊழியத்தின் தரமும் வலிமையும் அளவுகோலும் உன் சபையின் விசுவாசிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தோ மிகப்பெரிய பில்டிங்கைப் பொறுத்ததோ அல்ல..

அது நீ வைத்திருக்கும் லேட்டஸ்ட் மாடல் காரைப் பொறுத்ததும் அல்ல..அல்லது நீ போட்டுக் கொண்டு திரியும் கோட் சூட்டைப் பொறுத்தது அல்ல..

அல்லது உன்னிடம் வந்து குவியும் ஊழிய அழைப்புகளோ அல்லது அடிக்கடி நீ பறக்கும் இன்ட்டர்நேஷனல் பயணங்களைப் பொறுத்ததோ அல்லவே அல்ல..

உன் ஊழியத்தின் உண்மையான உரைகல்லும், வலிமையும் சக்தியும் அளவுகோலும் என்ன என்பதை இதோ நான் உனக்குக் காட்டுகிறேன்!

உன் ஊழியத்தின் கூர்மையும் தாக்கமும்

CHAPTER - 02

ஒரு ஊழியத்தின் திறனையும் கூர்மையையும் தாக்கத்தையும் தீர்மானிக்கும் அளவுகோல் எது?

1. தேவ ராஜ்யத்தின் வெற்றிக்காக உனது அர்ப்பணிப்பு, தியாகம், மற்றும் பானபலியாக வார்க்கப்பட்டுப் போகும் சம்பூரண பங்களிப்பின் அளவே உன் ஊழியத்தின் திறனையும் கூர்மையையும் தாக்கத்தையும் நிர்ணயிக்கும் அளவுகோல்..

தேவ ராஜ்யத்தின் உண்மையான, ஆழமான, அகலமான வளர்ச்சிக்காக உன் வாழ்க்கை மற்றும் நீ செய்யும் ஊழியத்தின் பங்கு எந்த அளவு இருக்கிறது?

தேவனாலே ஊழியத்துக்காக நீ எங்கே வைக்கப்பட்டிருக்கிறாயோ, அங்கே தேவனது ராஜ்யம் வெற்றி பெற்று நாலாபக்கமும் வளர்ந்து பெருகிக் கொண்டிருக்கிறதா அல்லது நாளுக்கு நாள் தேய்ந்து தோய்ந்து தோற்றுப் போய்க் கொண்டிருக்கிறதா?

உன்னுடைய தொகுதியில் தேவ ராஜ்யத்துக்கு அங்கே வெற்றியா தோல்வியா?

தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் உன் ஊழியத்தின் முழு மூச்சான பங்களிப்பு எவ்வளவோ, அதுவே, நீ எப்படிப்பட்ட ஊழியன் என்பதையும், நீ கூர்மையும் திறனும் உள்ளவனா என்பதையும், நீ எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்குகிற ஆயுதமாய் கர்த்தருடைய கரத்தில் இருக்கிறாய் என்பதையும் குறிக்கும் அளவுகோல்களாய் இருக்கிறது..

2. இருளின் ராஜ்யத்துக்கு உன் மூலம் ஏற்படும் நஷ்டமும் பாதிப்பும், மரண அடியும் காயமுமே- உன் ஊழியத்தின் திறனையும் கூர்மையையும் தாக்கத்யையும் தீர்மானிக்கும் அளவுகோல்கள்

"நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன்" என்கிறார் கர்த்தர்.

இதை விட்டு விட்டு மாயைகளில் மயங்கித் திரியாதே! மகிழ்ந்து களிகூராதே!

நீ வைத்திருக்கும் காரோ, வசிக்கும் பங்களாவோ, உடுத்தும் விலையுயர்ந்த உடையோ அல்ல - உன் ஊழியத்தின் வெற்றியைக் கணிப்பது..

நீ இருக்கும் ஊழிய ஸ்தலத்தில், நீ அங்கே கால் வைத்திருக்கும் ஒரே காரணத்தினாலேயே அங்கிருக்கும் பிசாசின் ஆதிக்கங்கள் எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன ? எப்படியெல்லாம் அவன் அலைக்கழிக்கப்பட்டுக் கலங்கடிக்கப்பட்டிருக்கிறான்?

நீ ஜெபத்தில் முழங்காலை முடக்கும் போது, அவன் தன் மேல் எப்படிப்பட்ட மரண அடியையும் வலியையும் காயத்தையும் அனுபவித்துக் கதறி அலறுகிறான் ? சொல்!

உன் ஏரியாவிலிருக்கும் மந்திரவாதிகளுக்கும் பில்லிசூனியக்காரருக்கும் விபச்சாரக்காரருக்கும் "ஐயோ ! இவன் வந்து விட்டானே !" என்ற உன்னைப் பற்றிய எண்ணமே பயத்தையும் கலக்கத்தையும் நடுக்கத்தையும் மரண அடியையும் உண்டாக்குகிறதா? சொல்!

இருளின் ராஜ்யத்தைப் பொறுத்தவரை அவர்களது ரெக்கார்டுகளில் நீ எப்படிக் காணப்படுகிறாய்? உன்னைக் குறித்து அவர்கள் என்ன பதிவு செய்து வைத்திருக்கிறார்கள்? உனக்குத் தெரியுமா ?

அவர்களது ஆலோசனைக் கூட்டங்களில் உன் பெயர் அடிபடுகிறதா? அவர்களது ஹிட் லிஸ்ட்டில் நீ இருக்கிறாயா?

உன் ஏரியாவிலுள்ள அந்தகாரத்தின் ஆவிகளை நீ எப்படியெல்லாம் கட்டி, மிதித்து, ரணமாக்கி இரத்தக்களறியாக்கி வைத்திருக்கிறாய்?
சொல்ல முடியுமா?

இருளின் பாளயத்தில், ஆவி உலகில் நீ ஏற்படுத்தி வைத்திருக்கும் தாக்கமும்,அடியும் காயமும் வலியும் அலறலுமே உன் ஊழியத்தின் திறனையும் கூர்மையையும் தீர்மானிக்கிறது!

உண்மையிலே தேவனது கையில் நீ ஒரு தண்டாயுதம் தானா?

தண்டாயுதமும் அஸ்திராயுதமும் ஏதோ விளையாட்டுப் பொருட்கள் அல்ல..

அப்போஸ்தலனாகிய பவுல், " நல்ல போராட்டத்தைப் போராடினேன்..ஓட்டத்தை முடித்தேன்.." என்று சொன்ன போது, இருளின் ராஜ்யம் ஒன்று சேர்ந்து, "ஆமென்" என்று சொல்லியிருந்திருக்கும்.

ஸ்கேவாவின் குமாரருக்குள்ளிருந்த ஆவிகள்," இயேசுவையும் அறிவேன்..பவுலையும் அறிவேன்(அவர்களால் அவைகள் பட்ட அடி கொஞ்ச நஞ்சமல்ல) என்றன..

நீ ஊழியம் செய்யும் ஏரியாவிலுள்ள ஆவிகளும் தேவிகளும் குட்டி தெய்வங்களும், குல தெய்வங்களும் உன்னைப் பற்றியும் உன் ஊழியத்தைப் பற்றியும் என்ன சொல்கின்றன ?

உன் ஊரிலுள்ள, ஏரியாவிலுள்ள எத்தனை மந்திரவாதிகளை, சூனியக்காரர்களை இதுவரை நீ உன் இடத்திலிருந்து ஓட ஓட விரட்டி அடித்திருக்கிறாய்? சொல்!

நீ ஜெபத்தில் நிற்கும் போது இதுவரை எத்தனை பில்லிசூனியக்காரர்கள், குடுகுடுப்பை கோடாங்கிகள், மந்திரவாதிகள் சாகடிக்கப்பட்டு உயிரோடு புதைக்கப்பட்டிருப்பார்கள்?

நீ ஊழியம் செய்கிற இடத்தில் அங்கே நீ இருக்கிற ஒரே காரணத்தினாலேயே, அங்கிருக்கும் எத்தனை விக்கிரக ஆராதனை பலிபீடங்கள் இது வரை தகர்க்கப்பட்டு, இடிக்கப்பட்டு, இழுத்து மூடப்பட்டு மண்மேடாயிருக்கும்? சொல்ல முடியுமா?

நீ பேச எழுந்து நிற்கும் போது, அசுத்த ஆவிகளின் மண்டலத்தில் உன் சத்தம் எவ்வளவு தூரம் எதிரொலிக்கிறது?
அதின் அதிர்வு அலைகள் அவைகளுக்குள் எங்கு வரை எவ்வளவு வேகமாக ஊடுருவிச் செல்கிறது?
உன்னால் துல்லியமாகச் சொல்ல முடியுமா?

இவைகளே உன் ஊழியத்தின் கூர்மையையும் தாக்கத்தையும் திறனையும் தீர்மானிக்கும் அளவுகோல்கள்!

அபிஷேகப் பெருக்கம்.. போராட்டப் பெருக்கம் !
Higher Mantles.. Higher Battles..

CHAPTER - 03

" தாவீதை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்" என்று பெலிஸ்தர் கேள்விப்பட்ட போது,

அவர்கள் எல்லாரும் தாவீதைத் தேடும்படி வந்தார்கள்.அதைத் தாவீது கேட்டபோது,ஒரு அரணிப்பான இடத்துக்குப் போனான்.

பெலிஸ்தரோ வந்து ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பரவியிருந்தார்கள்.."
[2 சாமு 5: 17,18]

உன் தலையில் அபிஷேக எண்ணெய் குறையாமல் நிரம்பி வழிகிறது என்று உன்னைப் பெலிஸ்தர் (உன் சத்துருக்கள்) கண்ட மாத்திரத்திலே, அவர்கள் உன் தலையை வாங்க வருவார்கள்..

பரலோகத்தின் தேவன் உன்னை அபிஷேகம் பண்ணியிருப்பாரானால், அவராலே நீ அபிஷேகம் பண்ணப்பட்டிருப்பாயானால், ஒரு வழியில் இல்லாவிட்டாலும் இன்னொரு வழியிலே பெலிஸ்தன் உனக்குக் குறி வைக்கத்தான் செய்வான்.

ராஜாவின் அபிஷேகம் தாவீதின் தலையின் மேல் வரும் வரை பெலிஸ்தர் அவனைத் தேடவே இல்லை. மற்றவர்களைப் போலவே அவனும் காடு மலை என்று தன்னந்தனியாக அலைந்து கொண்டிருந்தவரை ஒருவனும் அவனைச் சீண்டவும் இல்லை.

ஆனால் அபிஷேக தைலம் அவன் தலையில் இறங்கினவுடனே, காரியங்கள் மிக வேகமாக மாறி மாறி அரங்கேற ஆரம்பித்தன.

உன்னத அபிஷேகம், அக்கினி அபிஷேகம் வேண்டுமென்று ஆண்டவரிடம் போராடி ஜெபிப்பவர்கள், அந்த அபிஷேகத்தோடு கூடவே, போராட்டத்தையும் தங்களுக்கென்று சேர்த்தே கேட்கிறார்கள் - தெரிந்தோ தெரியாமலோ !

வேதம் சொல்கிறது..
" அதைப் பெலிஸ்தர் கேள்விப்பட்ட போது.."

உன்னைப் பற்றி உன் சத்துருக்கள் நிச்சயம் கேள்விப்படுவார்கள், விசாரிப்பார்கள்..

ஒரு தேவ மனிதன், தனது தற்போதைய ஆவிக்குரிய நிலையிலிருந்து அபிஷேகத்தின் அடுத்த படிக்கு, அடுத்த உயர்நிலைக்கு எப்போது நகருகிறான், எப்போது முன்னேறிச் செல்கிறான் என்பதை பிசாசு மோப்பம் பிடித்துக் கொண்டே இருப்பான்..

அவனது சத்துருக்கள் வெகு நுணுக்கமாக அவனைக் கண்காணித்துக் கொண்டே இருப்பதோடு மட்டுமல்லாமல் - இடைவிடாமல் அவனை வேட்டையாடத் தேடுவார்கள், தொடருவார்கள்..

தாவீது அதைக் கேட்டபோது, அரணான ஒரு இடத்துக்குப் போனான்.அப்போது பெலிஸ்தர் வந்து, ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பரவினார்கள்.

தாவீது தேவனிடத்தில் விசாரித்தான் (இது தான் நமது பெலத்தின் ரகசியம்)

இங்கே பார் ! போர்க்களத்தில் ஒரு காட்சி ! பெலிஸ்தர் போர்க்களத்துக்கு தங்கள் ஈட்டிகளோடும் பட்டயங்களோடும் மட்டுமல்ல, தங்கள் தேவர்களின் விக்கிரகங்களையும் பலிபீடங்களோடு சேர்த்தே கொண்டு வந்திருந்தனர்.

நாம் நினைக்கலாம், இது பட்டயத்துக்கும், பட்டயத்துக்கும் துப்பாக்கிக்கும், துப்பாக்கிக்கும் நடக்கும் சண்டை என்று!

ஆனால் அவர்களோ தங்களோடு தங்கள் தெய்வங்களாகிய பிசாசுகளின் சுரூபங்களையும் விக்கிரகங்களையும் பலிபீடங்களையுமே போர்க்களத்துக்குக் கொண்டு போயிருந்தனர்.

நீ ஜனங்களை வெளிப்பிரகாரமாய் பார்க்கிறாய்.சாதரணமாக, சரீரப்பிரகாரமாக அவர்களோடு உன் பேச்சுவார்த்தை நடக்கிறது.ஆனால் உன்னோடு பேசிக்கொண்டிருக்கும் போது அவர்களுக்குள்ளே வேறு ஏதோ ஒன்று கிரியை செய்து கொண்டிருக்கிறது.

சாதாரணமாக வெளியே உனக்குத் தெரிவது நிஜம் அல்ல..
தாவீது சாதாரணமாகத் தான் போர்க்களத்துக்குப் போனான்.
ஆனால் பெலிஸ்தரோ தங்கள் தேவர்களையே அங்கு கொண்டு வந்து நிறுத்தியிருந்தனர்.

கோலியாத் தாவீதை, தன் தேவர்களின் பெயரைக் கொண்டு சபித்தான் என்று வேதம் சொல்கிறது.அவன் வெறும் தன் பட்டயத்தின் பெலத்தோடும் ஈட்டியின் பெலத்தோடும் போகவில்லை.கூடவே தன் தேவர்களையும் போர்க்களத்துக்குக் கூட்டிச் சென்றான்.

ஒரு சிறுவன் எந்த தைரியத்தில் தன் முன் வருகிறான் என்று ஒரு கணம் குழம்பிப்போன அவன், யுத்தத்தை ஆவிகளின் தளத்துக்கு (spirit realm) கொண்டு போய்த் தன் தேவர்களைக் கொண்டு சபித்தான்.

உங்களுக்கு ஒன்று சொல்கிறேன்!

விசுவாசிகளும் ஊழியர்களும் எந்த எச்சரிப்பும் கவனமும் இன்றி, அசட்டையும் ஆயாசமுமாய் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கும் போது - அதே இரவுகளின் பிந்திய நேரங்களில் அவர்களது பெயரைச் சொல்லி அவர்களுக்கு விரோதமாய் மந்திரங்களும் ஏவல்களும், பில்லி சூனியங்களும் செய்யப்படுவது மட்டுமல்லாமல், சத்துரு அவர்களைக் கொன்று போட சகல ஆயத்தங்களையும் கனகச்சிதமாய் செய்து கொண்டிருக்கிறான் என்பதை அறிவீர்களோ?

"இஸ்ரவேலுக்கு விரோதமான மந்திரவாதமும் குறிசொல்லுதலும் இல்லை..என்பதும், இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை" என்ற வார்த்தைகள் விசுவாசிகளுக்குக் கர்த்தரது தரப்பிலிருந்து கொடுக்கப்படும் வாக்குத்தத்தமும் பாதுகாவலுமாக ஒரு பக்கம் இருந்தாலும்,

ஆவிக்குரிய படிகளில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் விசுவாசி ஒருவனுக்கு விரோதமாக கண்ணுக்குப் புலப்படாத யுத்தம் ஒன்று மும்முரமாக, மிகத்தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் அவன் அறிந்து கொண்டு சகலவித போராயுதங்களோடும், ஆயத்தங்களோடும், ஆவிக்குரிய முனைப்போடும் போர்முனையில் நின்றே ஆக வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் !

யுத்தம் மும்முரமாக நடக்கிறது !
விழித்துக் கொள் !

"நான் உம்மை விடுவதில்லை"

CHAPTER - 04

நீ இருக்கும் தேசத்திலோ அல்லது தேவன் உன்னை அனுப்பியிருக்கும் வெளிநாட்டிலோ, நீ ஆற்ற வேண்டிய ஒரு பெரிய பணி உண்டு!
அதில் உனக்கு ஒரு பெரிய பங்கு உண்டு.

உன்னுடைய ஊழியத்தின் கூர்மையையும் திறனையும் தாக்கத்தையும் கணிக்கும் இன்னொரு அளவுகோல், தேவனது வல்லமை, மகிமை, முழுமை - இவைகளுக்குள் நீ மூழ்கி எழும்புவதின் அளவே!

அவரது வல்லமை, மாட்சிமை மற்றும் மகிமையின் தன்மைகளில், கணுக்கால் அளவு அல்ல, முழங்கால் அளவு அல்ல, இடுப்பு அளவு அல்ல,ஆனால் அவற்றின் முழுமையில் மூழ்கி எழும் அளவைப் பொறுத்தே உன் ஊழியத்தின் கூர்மையும் திறனும் இருக்கும்.

நீ இதுவரை ஒரு போதும் கண்டிராத ஆவிக்குரிய சிகரங்களின் உயரங்களை தேவன் உனக்காக வைத்து வைத்திருக்கிறார்.

"நான் அதைக் காணுமட்டும் இது வரை நான் செய்த என் ஊழியங்கள் எல்லாம் எனக்கு ஒன்றுமில்லை.." என்று நீ சொல்லி," நான் அதை அடையுமட்டும் அது எந்த கில்காலாக இருந்தாலும், பெத்தேலாக இருந்தாலும், யோர்தானின் எல்லை வரையும் ஓட வேண்டியிருந்தாலும்,

“நான் உம்மை விடுவதில்லை என்று என் ஜீவனைக் கொண்டு சொல்கிறேன்" என்று சொல்லி, அவரை அமர்ந்திருக்க விடாதிருக்கத் தீர்மானித்துவிடு!

இதைச் செய்து பார்! உன் ஊழியத்தின் கூர் மின்னித் துலங்கத் தொடங்கிவிடும்!

உன்னைச் சுற்றியுள்ள போலித் தீர்க்கதரிசிகளும்,கள்ள அப்போஸ்தலர்களும், உன் தலைமுறையின் சகல கபட வேஷதாரிகளும் உன்னைக் கண்டு, பைத்தியம் பிடித்து ஓடத்தக்கதான ஒரு அபிஷேகத்தையும் வல்லமையையும் தேவ மகிமையையும் நீ சுமந்து திரியும் அளவுக்கு, தேவனது முழுமைக்குள் நீ மூழ்கி எழுந்திருக்கும் வரை "நான் உம்மை விடுவதில்லை" என்று யாப்போக்கின் கரையிலே எத்தனை இரவுகளானாலும், அவரை உன்னை விட்டு நகர விடாமல் பற்றிப் பிடித்துக்கொள்!

உன் ஏரியாவின் பூசாரிகளும் ஜோசியக்காரரும், மந்திரவாதிகளும் இரவோடு இரவாக இடத்தைக் காலி பண்ணும் வரை " நான் உம்மை விடுவதில்லை" என்று அவரை விடாப்பிடியாகப் பிடி !

நாம் ஈடுபட்டிருக்கும் யுத்தங்களில் ஒன்று ஒரிஜினலுக்கும் டூப்ளிகேட்டுக்கும் (அசலுக்கும் போலிக்கும்) உள்ள வித்தியாசத்தைத் தோலுரித்துக் காட்டி நிரூபிப்பது..

கர்த்தருடைய கையில் இது வரை நீ ஒரு சாதாரண கைத்துப்பாக்கியாய் இருந்தால், AK 47 ஆக மாறிவிடு! அல்லது ஏற்கனவே AK 47 ஆக இருந்தால், மிஷின் gun ஆக மாறிவிடு!

அதிலிருந்து இன்னும் முன்னேறிப் போய்க்கொண்டேயிரு! உன் தாரக மந்திரம், "நான் உம்மை விடுவதில்லை" என்பதாகவே இருக்க வேண்டும்..

பரலோக ராஜ்யத்தின் நிபந்தனையே பலவந்தம் பண்ண வேண்டும் என்பது தான். பலவந்தம் பண்ணுகிறவர்கள் மாத்திரமே அதைப் பெற்றுக்கொள்வார்கள்.

"நான் உம்மை விடுவதில்லை" என்ற விடாப்பிடியான ஜெபம், ஏதோ வாரத்துக்கு ஒரு முறை நீ செய்யும் ஜெபம் அல்ல.. தேவனுடைய கரங்களில் நீ ஒரு மரண ஆயுதமாய் மாறும் வரை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும், மூச்சுக்கு மூச்சு நீ செய்ய வேண்டிய பிடிவாத ஜெபம் அது!

கர்த்தருக்குத் தானே ஊழியம் செய்கிறேன் என்றும், கர்த்தருக்காகத் தானே ஓடுகிறேன் என்றும் சொல்லிக் கொண்டு ஊழியத்தில் இருந்து கொண்டே, கர்த்தருக்கே நேரம் கொடுக்காமல் இருக்கும் பரிதாப நிலை பாஸ்டர்களும் உண்டு!

உனக்கு ஒன்று சொல்கிறேன்!
நாள் ஒன்று சீக்கிரமே வருகிறது.தேவ சமுகத்தில் ஜனங்களுக்கு முன் நீ நின்ற மாத்திரத்தில், எந்த வியாதியின் பெயரையும் சொல்லாமலே, வியாதியஸ்தர் மேல் கைகளை வைக்கக்கூட அவசியம் இல்லாமலே, குருடர்களின் கண்கள் திறக்கப்படப் போகிறது!

செவிடர்கள் செவி திறந்து, ஊமைகளின் நாவு கட்டவிழ்ந்து - பிசாசுகள் அலறி, பாவிகள் மார்பில் அடித்துப் புலம்பி, முழங்கால்கள் முடங்கி, நாவுகள் யாவும்" இயேசுவே ஆண்டவர்" என்று அறிக்கையிட்டு, இரட்சிப்பின் பிரவாகம் புரண்டோடப் போகிறது!

தேவன் அதைச் செய்யப் போகிறார்.
அந்த நாளில் அவரது கரங்களில் தண்டாயுதமாய், அஸ்திராயுதமாய் மாற, இப்போதே உன்னை ஆயத்தப்படுத்திக் கொள்!

நீ ஒரு விஷயம் தெரிந்து கொள்ள வேண்டும்

உன் வாழ்க்கையில், ஊழியத்தில், கர்த்தருக்குள் நீ ஏறும் உயரமும், போகும் தூரமும், அடையும் எல்லையும் இந்த, " உம்மை விடுவதில்லை" இரகசியத்தில் தான் இருக்கிறது.

நீ எவ்வளவு பலவந்தம் பண்ணுவாயோ, அவ்வளவு தூரம் போக முடியும்..போய்க் கொண்டே இருக்க முடியும்..

அதுவே உன் ஊழியத்தின் எல்லை.

"நான் உம்மை விடுவதில்லை" என்ற ஒரு முடிவோடு இன்றே இறங்கிவிடு!

உனக்குத் தேவையானது எல்லாமே கர்த்தரிடத்தில் குறைவற இருக்கிறது.
நீ தான் விடாப்பிடியாகப் போராடி மல்லுக்கட்டி இன்னும் அவரை இறுகப் பிடிக்கவில்லை.

சிலர் 10 வருடத்துக்கு முன் எப்படி இருந்தார்களோ, அப்படியே தான் இன்னும் இருக்கிறார்கள்.இன்னும் ஒரு சிலர், அவர்களது இன்றைய நிலையைக் காட்டிலும் 5 வருடத்துக்கு முன் அருமையான அபிஷேகத்தைக் கொண்டிருந்தனர்.

கர்த்தருடைய ஆளுகைத் திட்டத்தில், நமது வாழ்க்கை, அபிஷேகம் மற்றும் ஊழியம் நேற்றை விட இன்று வலிமையாக இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

நம்மில் அநேகர் அபிஷேகம் பெற்றிருக்கிறோம்.ஆனால் ஆரோனுடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு அவனது தாடி,அங்கிகளின் வழியாய்த் தரை மட்டும் வழிந்து கொண்டிருந்த அந்த அளவு நிரம்பி வழியும் அபிஷேகத்தைப் பெறவில்லை.

அவனது தலை முதல் தரை மட்டும் வடிந்து கொண்டிருந்த அந்தப் பரிசுத்த அபிஷேகத் தைலம், அது வடிந்து சென்ற இடமெல்லாம் தன் அபிஷேகத்தை ஊற்றிக் கொண்டே சென்றது. பாளயத்தில் அவன் நடந்து செல்லும் இடமெல்லாம் அது வழிந்து கொண்டே சென்றது.

உன் மேலிருந்து நிரம்பி வழிந்து நீ போகும் இடமெல்லாம் வடிந்து ஓடும் உன் மேலுள்ள அபிஷேகம், நீ ஊழியம் செய்யும் எல்லைகளின் வரைபடத்தையே மாற்றிப்போடும். ஆம் ! அது அப்படித்தான் ஆக வேண்டும் !

உன் மேல் இருக்க வேண்டிய அளவு அந்த அபிஷேகம் இல்லாதவரை, அது உன் வழியாக வழிந்து செல்ல வழியே இல்லை.

உனக்குள்ளிருந்து கலங்கிப் பொங்கி, அது உன்னையே கரைத்துக் கலக்காத வரை, அது உன்னிலிருந்து கரைபுரண்டு ஓட வேறு வழியுமில்லை.

"உன்னைக் கொண்டு ராஜ்யங்களையும் ஜாதிகளையும் அழிப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். ஒரு சிறு வட்டத்துக்குள் உன்னை வைத்திருப்பது கர்த்தரது எண்ணமல்ல.

நம்மில் அநேகர், நம்முடைய குட்டி குட்டி சபைகளையே குறியாக சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்கிறோம்.நமக்கு தேசத்தில் நடக்கும் காரியங்களைப் பற்றி ஏது கவலை?

தேவன் உன்னை வைத்திருக்கும் தேசத்திலோ, அல்லது உன்னை அவர் கொண்டு போயிருக்கும் வெளி நாட்டிலோ, நீ ஆற்ற வேண்டிய ஒரு பெரிய பணி உண்டு! அதில் உனக்கு மிகப்பெரிய பங்கு உண்டு!

"உன்னைக் கொண்டு ராஜ்யங்களை அழிப்பேன்" என்று அவர் சொல்கிறார்.
பூகோள அளவிலுள்ள ராஜ்யங்களை அல்ல..
காலாகாலமாய் சாத்தான் ஆண்டு கொண்டிருக்கும் தேசங்களையும் ராஜ்யங்களையும் உன்னைக் கொண்டு அழிப்பேன் என்பதே அதின் பொருள்!

" என் சபையே எனக்குப் போதும்" என்று சொல்லிச் சொல்லி உன் தலைமுறையை விட்டுவிடாதே!

உன் தேசத்துக்காக எழுந்து நில்!
"உம்மை விடுவதில்லை" என்று விடாப்பிடியாய் அவரைப்பிடி!
விக்கிரகத்தின் கட்டுகள் கூண்டோடு அழியும்.

" கர்த்தரே தேவன் கர்த்தரே தேவன்" என்று தேசம் தேவன் முன் மண்டியிடும்!
அதை அவர் உன்னைக் கொண்டு தான் செய்யப்போகிறார்!

நீயே அவரது தண்டாயுதம் !
நீயே அவரது அஸ்திராயுதம் !

அன்றாடம் அதிகரிக்கும் சாத்தானின் ஆதிக்கம்

CHAPTER - 05

இன்று உலகில் சம்பவிக்கும் அநேக காரியங்கள் அருவருப்புகளும் அசிங்கங்களும் அல்லாமல் வேறல்ல.. அருவருப்புகளுக்கு மேல் அருவருப்புகளே ஒவ்வொரு நாளின் தலைப்புச் செய்திகளாய் நிறைந்து கிடக்கின்றன.

கொலைகளும் கொள்ளைகளும் கற்பழிப்புகளும் தீவிரவாதங்களும் திரும்பத் திரும்ப சொல்லும் செய்தி ஒன்றே - சாத்தானுக்கும் அவனது சேனைகளுக்குமே வெற்றி மேல் வெற்றி ! முழுவதும் முழுவதும் அவனைப் பற்றிய செய்திகளே!

ஒவ்வொரு முறையும் சாத்தானின் செய்திகளையே செய்திகளாகப் படிக்கும் போதெல்லாம், கேட்கும் போதெல்லாம் - அவைகள் தேவராஜ்யத்துக்கு எதிராக அவன் தொடுக்கும் மோதல், யுத்தம், சவால் என்பதை மறந்து போகாதே !

சபையின் நிலை என்ன ?

இன்று, கொலம்பியா, தென்கொரியா போன்ற சில இடங்களில் சாத்தானுக்கு எதிரான யுத்தத்தில், அவனது சத்தத்தை அடக்கிப்போட தேவன் தமக்கென்று ஒரு கூட்ட ஜனத்தை வைத்திருக்கத்தான் செய்கிறார்.

எப்போதெல்லாம், தன் செய்தியையே தலைப்புச் செய்தியாக்க சாத்தான் தீவிரிக்கிறானோ, அப்போதெல்லாம் அவனது சத்தத்தை அடக்கிப்போட தமது ராஜ்யத்தின் செய்தியின் தொனியை உரக்கக் கேட்கப் பண்ணுகிறார் தேவன்..

நீயும் நானும் அப்படி செய்வதையே தேவன் எதிர்பார்க்கிறார்..

யுத்தத்துக்கு யுத்தம்..
சத்தத்துக்கு சத்தம்.. செய்திக்குச் செய்தி என்ற விகிதத்தில் அவனை நாம் மடங்கடிக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார்.

எகிப்தின் அரண்மனையிலே மோசே தன் கோலை தரையிலே போட்ட போது எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் கோல்களை பதிலுக்கு தரையில் எறிந்தனர்.மோசேயின் கோலும் மந்திரவாதிகளின் கோல்களும் சர்ப்பங்களாய் மாறின.

ஆனால் மோசேயின் கோல் மந்திரவாதிகளின் கோல்களின் சர்ப்பங்களை விழுங்கிப் போட்டதே !

இந்தக் காலத்தில் தேவன் தம் சபையின் முன் வைக்கும் சவாலும் இது தான். நாம் எங்கே நிற்கிறோமோ, அங்கே சாத்தானின் வல்லமையை தேவ வல்லமையால், அக்கினியை அக்கினியால் எதிர்கொண்டு, சவால் விட்டு, சாத்தானின் கிரியைகளுக்கு விரோதமாய் ஆயிரமடங்கு தேவ வல்லமையை நிரூபித்துக் காட்டியே ஆக வேண்டும்.

விழித்தெழும்பு !

தேவ ஜனமே, உனது தேசத்தின் கடத்தல்காரர்களும் தீவிரவாதிகளும் சரணடைந்து தங்கள் ஆயுதங்களைக் கீழே போடும் வரை, ஜனங்களை வஞ்சிக்கும் மந்திரவாதிகளும் சாமி சந்நியாசிகளும் தங்கள் தாயத்துக்களையும், பொன், வெள்ளி மூஞ்சூறுக்களைக் குவியலாகக் குவித்துப் போட்டு எரித்துத் தீக்கொளுத்தும் நாள் வரை..

தேசத்தில் எழும்பியிருக்கும் நவீன பாபாக்கள் "இயேசுவே ஆண்டவர்" என்று முழங்கால் முடக்கும் வரை..
தீவிரவாதிகள் தங்கள் தீவிரவாதத்தைக் கைவிடும் வரை..

உன்னைச் சுற்றியிருக்கும் இடத்தையும், ஊரையும், நாட்டையும் தேவனுடைய வல்லமையின் தாக்கத்தால் நீ கதிகலங்க வைத்துவிடு!

எழும்பு !

இது Supremacy என்ற மேலாண்மை அல்லது "மேலோங்கி நிற்பதற்கான" சாத்தானின் யுத்தம். சாத்தான் மேலெழுந்து.. மேலோங்கி தலைப்புச் செய்தியாகிக் கொண்டே போகிறானா அல்லது, சபை மேலோங்கி தேவனுக்காகக் கோலோச்சி, அதுவே தேசத்தின் அன்றாட தலைப்புச் செய்தியாகி வெளிவருகிறதா ? கேள்வி இது தான் !

எங்கு திரும்பினாலும் அவனே செய்தியாகி, அதையே நாம் அன்றாடம் கைகட்டி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் நிர்ப்பாக்கியமான ஒரு வாழ்க்கை வாழத்தான் வேண்டுமா ?

அப்படி ஒரு வாழ்க்கை வாழ்வது, எலியா உயிரோடு இருக்கும் போதே, பாகால், இஸ்ரவேலை உயிரோடு விழுங்குவதற்குச் சமம்.

நோ சான்ஸ்! எலியா என்ற எரிமலை உயிரோடு எரிந்து கொண்டிருக்கும் வரை அப்படி ஒன்று நடப்பது அவனது அகராதியிலே கிடையாது!

அவன் கைகட்டி நின்று, பாகாலின் விக்கிரக ஆராதனை கொடிகட்டிப் பறக்கிறதைப் பார்த்துக் கொண்டிருப்பானோ ?
பாகாலின் பூஜைகளில் நரபலி பிரபலம். முழு தேசமும் இரத்தத்தால் கறைபட்டுக் கிடந்தது.

அப்போதும் அந்த தேசத்தில் தங்களைக் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் என்று சொல்லித் திரிந்தவர்கள் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் அவர்கள், தேசத்தின் சீர்குலைச்சலைக் கண்டும் குலைக்கமாட்டாத நாய்களாக, வாய் கட்டப்பட்டு ஆள் அரவமின்றி இருப்பிடம் தெரியாமல் இருந்தனர்.

“ நான் ஒருவன் மாத்திரம் மீந்திருக்கிறேன்..என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள்.." என்று தேவனிடம் சொன்ன எலியாவுக்கு உண்டான தேவ உத்தரவு இது தான் !

"நான் ஒருவன் மாத்திரம் தான் " என்று சொல்லாதே!
பாகாலுக்கு முழங்காலை முடக்காத ஏழாயிரம் பேர் மறைந்திருந்தாலும்..
நீ ஒருவன் மாத்திரமே தேசத்தில் நடக்கும் அக்கிரமங்களோடு, அவற்றுக்கு எதிராக உன்னையே சம்பந்தப்படுத்தி இணைத்துக் கொண்டவன் !

நீ ஒரே ஒருவன் மட்டுமே தேசத்துக்கு விரோதமாய்க் குரல் கொடுக்கும் தைரியம் உடையவன்! பலவிதமான பட்டங்களோடு உலாவி வரும் மற்றவர்கள் அநேகர் இங்கு உண்டு.

ஆனால் தேசத்தில் நடந்து கொண்டிருக்கும் அக்கிரமங்களுக்கும் தங்களுக்கும் எந்தவித சம்பந்தமுமே இல்லாவர்கள் அவர்கள் !

மைக் பிடித்து வாய் கிழியக் கத்துபவர்கள் அவர்கள் - ஆனால் தேவ ராஜ்யத்துக்கு சற்றும் சம்பந்தமே இல்லாமல் தங்கள் நாட்களை விரயமாய்க் கழிப்பவர்கள் அவர்கள் !

ஆனால் எலியாவே ! தீர்க்கதரிசி என்றால் நீ ஒருவன் மட்டுமே எனது தீர்க்கதரிசி! இந்த தேசத்தில் முதுகெலும்போடு, பிசாசுக்கு விரோதமாய்ப் பைத்தியமாய் எழும்பி நிற்பவன் நீ ஒருவன் மாத்திரமே !" என்றார்..

அது ஒன்றே அவனுக்குப் போதுமானதாயிருந்தது !!

(1 ராஜா 19: 14,18 - paraphrased - பொழிப்புரை)

நீயே அந்த மனிதன் !

CHAPTER - 06

அன்பானவர்களே !

பிசாசுக்குக் குடைச்சல் அல்ல, அவனைக் கடுப்பேற்றி, " போதும் நிறுத்துடா.." என்று சொல்லக்கூடிய அளவு தைரியத்தையும் அபிஷேகத்தையும் முறுக்கையும் உனக்குள் ஏற்றிக்கொள்!

அப்படிப்பட்ட ஆட்களைத்தான் கர்த்தர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். என்ன ஆனாலும் சரி, அதற்கு எப்பேர்ப்பட்ட விலைக்கிரயம் கொடுக்க வேண்டியிருந்தாலும் சரி, பிசாசின் கொட்டத்தை அடக்கியே தீருவேன் என்று கங்கணம் கட்டி எழும்புபவர்களையே தேவன் தேடிக் கொண்டிருக்கிறார்.

அன்றும் இன்றும் வாய் மூடிக்கிடக்கும் மௌன சாமிகளும் ஆசாமிகளும் நிறையவே இருக்கத்தான் செய்கின்றனர்.அவர்களிடம் தீர்க்கதரிசன வார்த்தைகள் உண்டு.ஆனால் அதைச் சொல்ல வேண்டிய தைரியமோ தெம்போ தான் அவர்களிடம் இல்லை.

தங்கள் தலைமுறையின் தலைகளோடு மோதிப் பார்க்கும், முட்டிப் பார்க்கும் தைரியமற்ற அம்மாஞ்சிகள் ! பயந்தாங்கொள்ளிகள்!

தங்கள் தலைமுறையின் அக்கிரமங்களை எதிர்த்துக் குரல் கொடுக்க சொரணை அற்றவர்கள்! அவர்கள் அறியாத உண்மை என்னவென்றால், ஒவ்வொரு தலைமுறையின் தீர்க்கதரிசியும், தானே தனது தலைமுறைக்கு உத்திரவாதி என்பதே !

இந்தத் தலைமுறையின் ஜனத்துக்கு இந்தத் தலைமுறையின் பாஸ்டர்களும் சுவிசேகர்களும் ஊழியர்களுமே உத்திரவாதிகள், பொறுப்பாளிகள் என்பதை நீ அறிந்தே ஆக வேண்டும்.

தேவன் ஒவ்வொரு தலைமுறையிலும் அந்தந்தத் தலைமுறையின் சவால்களை சந்திக்கக்கூடிய, அவைகளை லாவகமாகக் கையாளக்கூடிய மனிதர்களை எழுப்பத்தான் செய்கிறார்.

ஆகவே தான் இந்தத் தலைமுறையில் உன்னை வைத்து வைத்திருக்கிறார்.

எலியாவின் நாட்களையும், ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்தின் நாட்களையும், ஜாண் ஜி. லேக்கின் நாட்களையுமே எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருக்காதே !

இந்தத் தலைமுறையின் ஜாண் லேக் நீ தான்! இன்றைய ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் நீ தான்! இந்த யுகத்தின் " ஜாண் வெஸ்லி " உன்னையல்லாமல் வேறே யார் ?

நீ எழும்பாவிட்டால், நீயே அதற்குப் பொறுப்பாளி, நீயே அதற்கு உத்திரவாதி என்று பரலோகம் உன்னைத் தான் குற்றம்சாட்டும் !

உன் ஆவியில் தேவ வைராக்கியமான வைராக்கியமும், பரிசுத்த உக்கிரமும் வெடித்துக் கிளம்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது!

உன் சந்ததியில் நடக்கும் ஒவ்வொரு அக்கிரமமும் அநியாயமும் உன் முன் மண்டியிட்டே ஆக வேண்டும்.

எலியா தன் மேல் சுமந்து திரிந்த தேவ அபிஷேகத்துக்கு முன்பாக முடங்காத, மண்டியிட்டு வணங்காத எந்தவித அக்கிரமமும் அநியாயமும் அவன் நாட்களில் இருந்ததில்லை.

சத்துருவின் சகல வல்லமையையும் தன் கால்களுக்குக் கீழே மிதித்து நசுக்கி பொசுக்கிப்போட்டவன் எலியா !
ஒரே நாளில் தேசம் முழுவதையுமே தன் தேவனிடம் திருப்பினான் அந்த தேவ மனிதன்!

தானியேலின் நாட்களில் பாபிலோனின் மந்திரவாதிகள் ஒருவனும் அவனுக்கு முன்பாக நிற்க முடியவில்லை.சகல ஜோதிடர்களுக்கும் குறிசொல்லுகிறவர்களுக்கும் மந்திரவாதிகளுக்கும் மேலாக, தலையாக உயர்த்தி வைக்கப்பட்டான் தானியேல்..

மேலாண்மைக்காகவும், மேலோங்கி நிற்பதற்காகவும் அன்று நடந்த சாத்தானின் அதே யுத்தம் இன்றும் நடக்கிறது!

தேவன் ஒருவர் மாத்திரமே எல்லாவற்றிலும் எல்லாவற்றிற்கும் மேலானவர் என்று முற்றும் முடிய நிரூபித்து நிற்கும் நெஞ்சுரம் கொண்ட ஒருவனை இந்தத் தலைமுறையில் தேவன் தேடிக்கொண்டே இருக்கிறார்!

எழும்பி வருவாயா ?

தமது கைகளில் உன்னைத் தனது தண்டாயுதமாய் எடுக்க தேவன் காத்துக் கொண்டிருக்கிறார் !

முழு கட்டுப்பாட்டையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடக்கும் யுத்தம்..

CHAPTER - 07

ஆவிக்குரிய போரின் இரண்டாவது அம்சம், முழுக்கட்டுப்பாட்டையும் தன் கைக்குள், கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடக்கும் சாத்தானின் யுத்தம்.

'கட்டுப்பாடு' என்பது, யார் மீதோ, எதின் மீதோ,ஒரு இடத்தின் மீதோ, ஒரு பிரதேசம் அல்லது ஒரு தேசத்தின் மீதோ செலுத்தப்படும் அதிகாரம் அல்லது சக்தி.

நீ வசிக்கும் இடத்தின் மீதோ, ஊழியம் செய்யும் இடத்தின் மீதோ, நகரத்தின் மீதோ, நாட்டின் மீதோ அதிகாரம் செலுத்தி வரும் மேலான சக்தியும் வல்லமையும் எது என்பது தான் கேள்வி.. அங்குள்ள அதிகாரம், தேவனது ஆளுகையின் கீழ் இருக்கிறதா அல்லது பிசாசின் கட்டுப்பாட்டிலா ?

தங்கள் தேசங்களின் மீதும் நகரங்கள் மற்றும் எல்கைகளின் மேலும் ஆதிக்கம் செலுத்தி வந்த அந்தகார சேனைகளுக்கு விரோதமான யுத்தத்தில், ஜெபித்து ஜெபித்து ஜெயித்து தங்கள் எல்லைகளை தேவ ஆளுகைக்குக் கீழ் தங்கள் காலத்தில் கொண்டு வந்திருந்த அநேக பக்தர்கள் நமக்கு முன் கடந்து சென்ற வரலாறு நமக்கு உண்டு..

ஜெபித்து ஜெபித்து ஸ்காட்லாந்தை ஜெயித்தார் ஜாண் நாக்ஸ். "ஸ்காட்லாந்தைத் தாரும் அல்லது சாகிறேன் " என்ற அவரது விடாப்பிடியான ஜெபம், ஒரு நாள் ஜனங்களை அவரது வீட்டு வாசலைத் தட்ட வைத்து,"நாங்கள் எங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக் கொடுக்க விரும்புகிறோம்.." என்று சொல்ல வைத்தது மட்டுமல்லாமல்,

இரத்தமேரி என்று அழைக்கப்பட்ட ஸ்காட்லாந்தின் ராணியையே, "ஐரோப்பாவின் முழு இராணுவங்களைக் காட்டிலும் ஜாண் நாக்ஸின் ஜெபத்துக்கு நடுங்குகிறேன்.." என்று சொல்லி ஸ்காட்லாந்தை விட்டே ஓட வைத்தது.

Praying Hyde என்று அழைக்கப்பட்ட John Hyde என்ற இந்தியாவுக்கு வந்த மிஷினரி ஜெபித்த அவரது அங்கலாய்த்த ஜெபத்தில், அவரது இருதயமே அவரது இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்துக்கு நகர்ந்து விட்டதாக சொல்கிறது அவரது வாழ்க்கை சரிதை.

தன் காலத்தில் பஞ்சாபின் சக்திகளை தேவனுக்கு முன்பாக மண்டியிட வைத்தார் John Hyde.

ஜெனிவாவில் இருந்த ஜாண் கெல்வின் தன் பாரத்தை ஜெபமாக மாற்றினார். "என் வாழ்நாள் காலத்துக்குள்ளே ஜெனிவாவின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வளாகமும் ஜெபிக்கிற ஒருவரையாவது கொண்டிருக்க வேண்டும்" என்ற அவரது ஜெபம் அவர் மரிக்குமுன்னே கேட்கப்பட்டு, அவரது தரிசனம் நிறைவேறியது.

வளர்ந்த நாடுகளின் வரிசையிலே ஸ்விட்சர்லாந்து முன்னணியில் இருப்பதற்கு அதுவே காரணம்.

இடிமுழக்கத்தோடும் எரிமலையின் குமுறலோடும் இத்தாலியின் Florence ல் பிரசங்கித்து வந்தார் சவனரோலா...அன்று அந்த நகரத்தின் மக்கள் தொகை 14000. ஆனால் அவரது சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையோ 14,500. முழு நகரம் மட்டுமல்ல, அக்கம்பக்கத்து ஊர்களிலிருந்தும் வந்து நிரம்பி வழிந்தது அவரது சபை.

தங்கள் எல்லைகளின் மேலும் தேசங்களின் மேலும் ஆவிக்குரிய யுத்தம் பண்ணி, தங்கள் எல்லைகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தங்கள் எல்லைகளை விஸ்தரித்தவர்கள் இவர்கள்.

இன்று வரை இந்த யுத்தம் தொடர்கிறது..

ஒரு காலத்தில் மிஷினரிகளை அனுப்பும் கிறிஸ்தவ நாடாக இருந்தது சூடான்.வட நைஜீரியாவில் சூடான் இன்ட்டீரியர் மிஷன் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட ECWA வும் அதின் மூலம் நாட்டப்பட்ட சபைகளும் எத்தனை எத்தனை !

திடீரென தன் கட்டுப்பாட்டுக்கான யுத்தத்தை எதிரி அந்த தேசத்தின் மேல் கட்டவிழ்த்துவிட, இன்று சூடான் முழுவதும் அவனது கட்டுப்பாட்டில்..

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இந்தோனேஷியாவில் வெடித்த எழுப்புதலின் தாக்கமே தனி ! (Mel Tarry எழுதிய "Like a mighty wind" என்ற புத்தகத்தைப் படித்துப் பாருங்கள் !)

ஒரு தனி மனிதன், செத்துப்போன நூறு பேரை எழுப்பிக் கொண்டிருந்தான். இயேசுவின் நாட்களைப் போலவே அப்பமும் ரொட்டியும் பலுகப் பலுக, எண்ணில்லாதோர் கண்டனர், உண்டனர்.

அந்த நாட்களில் இருண்ட காடுகளில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் மத்தியில் பரலோகத்திலிருந்து வீசிய ஒரு ஒளி வழி நடத்தியது என்கிறது இந்தோனேஷிய எழுப்புதல் வரலாறு !

இதெல்லாம் 50 வருடங்களுக்கு முந்திய சரித்திரம்! ஆனால் இன்று நிலைமையே வேறு.வேறொரு மதம் அங்கே ஆளுகை செய்கிறது.

சீஷர்கள், கிறிஸ்தவர்கள் என்று முதல் முதலாக அழைக்கப்பட்ட அந்தியோக்கியா இன்று இருப்பது துருக்கியில்.. ஆனால் இன்றைய துருக்கியின் நிலைமையோ பரிதாபம்! பெண்களின் அடிமைத்தனத்தில் இன்று முன்னிலை வகிப்பது துருக்கி !

பெந்தேகோஸ்தே நாளிலே மேல் வீட்டு அறையிலே ஆதி அப்போஸ்தலர்கள் கூடிவந்த போது ஆவியானவர் ஊற்றப்பட்டு அந்நிய பாஷைகளைப் பேசிய போது எருசலேமில் கூடியிருந்து அவற்றைக் கண்ணாரக் கண்டவர்களில் பெரும்பாலானோர் லிபியாவிலிருந்து வந்தவர்களே ! ஆனால் இன்றைய லிபியாவின் கிறிஸ்தவத்தின் நிலை என்ன ?

சபையின் முற்பிதாக்களில் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களைச் செய்து அநேகரைக் கிறிஸ்துவண்டை திருப்பியவர் பிஷப் அத்தனாஸியஸ்.

அவர் காலத்தில் வட ஆப்பிரிக்கா முழுவதும் சுவிசேஷமயமாக்கப்பட்டது.
ஆனால் அதின் இன்றைய நிலை ??

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! சார்ல்ஸ் ஃபின்னியின் எழுப்புதலில் பெருமிதம் கொண்ட அதே அமெரிக்கா, டி.எல். மூடியின் எழுப்புதலைக் கண்ணாரக் கண்ட அதே அமெரிக்கா, நமக்கு ஒரு காலத்தில் சுவிசேஷம் தந்த அதே அமெரிக்காவுக்கு நாம் சுவிசேஷம் கொண்டு செல்ல வேண்டிய பரிதாப நிலை ! கிறிஸ்தவமே காணாமல் போய்க் கொண்டிருக்கும் அமெரிக்கா !

இங்கிலாந்து எப்படி ?
ஜாண் வெஸ்லியின் நாட்களிலும் ஜார்ஜ் ஒயிட்ஃபீல்டின் நாட்களிலும் சார்ல்ஸ் ஸ்பர்ஜன் காலத்திலும் எழுப்புதல் தீயால் பற்றி எரிந்து கொண்டிருந்த அதே Great Britain இன்று குளிர்ந்து உறைந்து செத்துக் கிடக்கிறது. அதே இங்கிலாந்தில் சுவிசேஷம் அறிவிப்பது இன்று குற்றமாய்க் காணப்படுகிறது.

மூடிப் போடப்பட்ட நம் பிதாக்களின் துரவுகளை மீண்டும் தூர் வார்த்துத் தோண்டுவோம் வாருங்கள் !

ஆபிரகாமின் நாட்களின் துரவுகளை ஈசாக்கு மறுபடியும் தூர்வார்த்துத் தோண்டினான் என்று வேதம் சொல்கிறது.

அவன் தகப்பன் ஆபிரகாமின் துரவுகளைத் தங்களுடையது என்று பெலிஸ்தர் வசப்படுத்திக் கொண்டது மட்டுமல்லாமல் அவைகளைத் தோண்ட வந்த ஈசாக்குடன் வாக்குவாதம் செய்து சண்டையிட்டனர்.

ஆனால் அடுத்த தலைமுறையான ஈசாக்கு சொன்னான்.." முடியாது நாம் அவைகளைத் திரும்பக் கைப்பற்றியாக வேண்டும்.." (ஆதி 26:18)

அன்பானவர்களே! நாம் இங்கிலாந்தைக் கர்த்தருக்காகத் திரும்பப் பெற்றாக வேண்டும். அமெரிக்காவை மீண்டும் கர்த்தரிடம் திருப்பியாக வேண்டும்!

ஆதிகாலத்தில் இந்தியாவுக்கு மிஷினரிகளாக வந்து, இன்று அந்நியர் கைவசமாகிப் போன ஜாதி ஜனங்களையும் பிரதேசங்களையும் நம் தேவனுக்காகத் திருப்பிக்கொள்ள வேண்டும்.

எழுப்புதலின் துரவுகளைத் திரும்ப தூர்வார்த்துத் தோண்டும் ஒரு தலைமுறையை தேவன் இந்தக் காலத்தில் எழுப்பத்தான் போகிறார்!

கடந்த காலங்களிலும் சென்று போன நாட்களிலும் தேவன் பலத்த கிரியைகளைச் செய்த பகுதிகளுக்கும் தேசங்களுக்கும் அவர்கள் திரும்பிச் சென்று அந்தந்த நாடுகளையும் பிரதேசங்களையும் எல்லைகளையும் தேவனுக்காகத் திருப்பத்தான் போகிறார்கள் !

கண்டங்களையும் தேசங்களையும் மீண்டும் ஒரு முறை உலுக்கிவிட கவணில் வைத்த கல்லாய் மட்டுமல்ல..கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளாய் தேவன் அவர்களை உபயோகிக்கத்தான் போகிறார் !

கோதுமையிலிருந்து பதரைப் பிரித்தெடுக்க நடக்கும் ஒரு யுத்தம்..

CHAPTER - 08

சபைத் தலைவர்களுக்காகவும் தலைமைத்துவத்தில் உள்ளவர்களுக்காகவுமே எழுதப்படும் செய்தி இது !

ஆண்டவரின் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலரிடமிருந்து, கபட அப்போஸ்தலரையும், தேவனுடைய தண்டாயுதமான உண்மைத் தீர்க்கதரிசிகளிலிருந்து, கள்ளத்தீர்க்கதரிசிகளைப் பிரித்தெடுக்கவும் வேறுபிரித்துக் காட்டவும் யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது..

இதற்குக் காரணம் தேவனுக்காக நிற்கும் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளுக்கு நடுவே, ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு திரியும் ஓநாய்களும் ஒருங்கே காணப்படுவது தான் !

மோசேயின் கோலைப் பொய்யாக்கி விழுங்கக் காத்திருக்கும் பார்வோனின் மந்திரவாதிகளின் மாயவித்தை காட்டும் கோல்கள் இன்றும் புழக்கத்தில் உலாவி வருவதாலேயே இந்தப் போர் ஒன்று நடந்தே ஆக வேண்டிய கட்டாயமாயிருக்கிறது..

தேவனது தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலரும் எங்குமிருந்தாலும், அவர்கள் நடுவே இப்படிப்பட்ட பொய்த்தீர்க்கதரிசிகளும் சுதந்திரமாக உலாவி வருவதால், அசலுக்கும் போலிக்கும் உள்ள வித்தியாசத்தைத் தோலுரித்துக் காட்ட வேண்டிய சவால் நமக்கு முன்னே நிற்கிறது !

மோசேயின் கோலைப் போலவே மந்திரவாதிகளின் கோலும் அற்புதங்களைச் செய்தது. ஆனால் அது அல்ல, தேவனின் கோலும் கரமும்..

உங்களுக்குத் தெரியும், கன்மலையைப் பார்த்துப் பேசச் சொன்னால், அதை அடித்தான் மோசே..தேவன் கோபம் கொண்டாலும் அங்கே தண்ணீர் ஊற்றுண்டு வந்தது. கொஞ்சம் யோசியுங்கள் ! அது தேவனால் அங்கீகரிக்கப்பட்ட அற்புதமோ? அல்ல..

தேவனுடைய அற்புதங்களைப் போலவே தோற்றமளிக்கும் எல்லா அற்புதங்களும் தேவனுடையதும் அல்ல.. தேவனுடைய அங்கீகாரம் பெற்றவைகளும் அல்ல...

உன்னைச் சுற்றியுள்ள மாந்திரீக தாந்திரீகர்களையும் பில்லிசூனியக்காரரையையும், மந்திரவாதிகளையும் பூசாரிகளையும் திரும்பிப்பார் !

தங்கள் மாந்திரீக வித்தைகளால் "தாங்களே தேவனது பெரிதான சக்தி" என்று ஊரை நம்ப வைத்து ஜனங்களை மோசம் போக்கி, மோசடி செய்பவர்களைக் கண்டு ஆவியில் வைராக்கியம் கொண்டு தேவனுக்காக வெகுண்டு எழு !

இது தான் எலியாவை கனலெனச் சினந்து எழச்செய்தது ! தேசமெங்கும் விக்கிரகமும் பில்லி சூனியங்களும் ! தேசமெங்கும் பாகாலின் மந்திரவாதிகள் !

ஆகவே தான் சொன்னான்..
"நான் தேவனுடைய மனுஷனானால்.... அக்கினி இறங்கி.. நான் தேவனுடைய மனுஷனானால்... அக்கினி இறங்கி..."
என்று..

அதனால் தான் சொன்னான்.. ***"என் வார்த்தையின்படியே..பனியும் மழையும் பெய்யாதிருக்கும்..."*** என்று...

" கர்த்தரே தேவன் " என்று நிரூபிக்கும் நாட்கள் இவை ! கூடவே, எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை வெட்டிப் போட்டது போல, உன்னைச் சுற்றியிருக்கிற மந்திரவாதிகளின் மடங்களையும், பாபாக்களின் சத்சங்கங்களையும், கள்ளத்தீர்க்கதரிசிகளின் ஊழியங்களையும் கபட அப்போஸ்தலரின் சபைகளையும் இயேசுவின் நாமத்தினாலே மூடிப்போடு !

இந்த மந்திரவாதிகளும், குருக்களும், பாபாக்களும், அம்மாக்களும் தேசத்தின் ஜனாதிபதிகளையும் பிரதம மந்திரிகளையும் அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் தங்கள் போலிப் பித்தலாட்ட அடையாளங்களாலும் அற்புதங்களாலும் அவர்களை வஞ்சித்து அரசியல்வாதிகளால் தங்கள் காரியங்களை சாதித்துக் கொண்டிருக்கின்றனர்..

இவர்களுக்கு முன்பாக, தேவனுடைய மனிதரும் தீர்க்கதரிசிகளும் இருக்குமிடம் தெரியாமல் சக்தியற்று, வாய்கட்டப்பட்டுப் போய், காரியத்துக்கு உதவாத வைத்தியர்களாய், ஒடுங்கிப்போய் ஓரமாய் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்..

இது தான் என்னால் தாங்க முடியாத, என் எலும்புகளில் அடைபட்ட அக்கினியாய், கந்தகமாய் காந்தலாய் எனக்குள் இடைவிடாமல் எரிகிறது !

கர்த்தரே சகல தேவர்களிலும் உயர்ந்தவர் என்று நிரூபித்து அவனவனை இருப்பிடம் தெரியாமல் துரத்தியடித்தே தீருவேன் என்று கங்கணம் கட்டி காரியத்தில் இறங்கும் ஒரு நிலைக்கு நீ வந்தாக வேண்டும் !

இழுத்து மூடு !

CHAPTER - 09

இன்று பாகாலின் தீர்க்கதரிசிகள் போன்ற கள்ளத்தீர்க்கதரிசிகள் சபைக்குள்ளும் ஊடுருவி இருக்கின்றனர்..தாங்கள் அறியாமலேயே அநேக போதகர்கள் அவர்களைத் தங்கள் சபைகளுக்குள் அழைத்து விடுகிறார்கள் !

ஒரு சபையில் நான் பேச
அழைக்கப்பட்டிருந்தேன்.
கூட்டத்துக்கு இரண்டே நாட்கள் தான் இருந்தன. நானும் என் மனைவியும் ஜெபிக்க ஆரம்பித்தோம். என் மனைவி சொன்னாள்..
"அந்த சபையின் பிரசங்க பீடத்துக்குப் பக்கத்திலேயே இன்னொரு ஆல்ட்டரும் அதின் மேலே ஏதோ விக்கிரக மேடையும் எனக்குத் தெரிகிறது.." என்று.

நான் சொன்னேன்.."நான் ஏற்கனவே வாக்குக் கொடுத்துவிட்டேன்..கூட்டத்தை கேன்சல் பண்ண முடியாது..நான் போய் நின்று அங்குள்ளதை மூடிப்போடுவேன்..நாம் ஜெபிப்போம்.." என்று சொல்லிவிட்டுக் கூட்டத்துக்குப் போனேன்..

பேச எழுந்து நின்ற போது அந்த இடத்தைச் சுற்றிலும் அக்கினி மூடியது ! முழுவதும் அக்கினி ! அக்கினி ! அக்கினி !

நான் பிரசங்கித்து முடித்து இறங்கியதும், என்னைக் கூப்பிட்டிருந்த அந்த பாஸ்டர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான் ! அவன் கடைசிவரை எழும்பவே இல்லை..

நடந்தது என்ன தெரியுமா ? அவன் ஒரு கள்ளத்தீர்க்கன் ! நான் அதை அறியாமலேயே வாக்குக் கொடுத்துவிட்டேன்.

ஆனால் தேவன் அதை வெளிப்படுத்தியதோடு, அன்று அந்தக் கள்ளனின் ஊழியம் என்ற வியாபாரத்தை இழுத்து மூடினேன் - ஜெபத்தால் !

அதற்குப்பின் சபை என்னும் கடைதிறக்க அவன் அங்கே இல்லை !

என்னுடைய நற்பெயரையும் நன்மதிப்பையும் கெடுக்கவும், என்னை அழைத்து கூட்டம் நடத்துவதால், தனக்கு நல்ல பெயர் வாங்குவதோடு, நானும் அவனது கள்ளத்தீர்க்கதரிசன ஊழியத்தை ஆதரித்து, ஆமோதித்து, அவன் செயல்களை அங்கீகரிக்கிறேன் என்று ஊருக்குக் காட்டவுமே என்னை அவன் அழைத்து கூட்டம் வைத்திருந்தான்..

உங்கள் பிரபலத்தையும், நற்பெயரையும் தங்கள் துர்க்கிரியைகளுக்கு மூடலாக அநேகர் உங்களை வைத்துத் தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ள, உங்களை உபயோகித்துக் கொள்ள நீங்கள் அறியாமலே உங்களிடத்தில் வருவார்கள்.. ஜாக்கிரதை !

இங்கே தான் ஞானத்தின் ஆவி உங்களுக்கு வேண்டும். "ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்.." என்று வேதம் சொல்வதின் கருத்து இது தான். இங்கு தான் கணவனுக்கு மனைவியின் உதவியும், மனைவிக்கு கணவனின் உதவியும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது..

என்னைக் கூப்பிட்ட அந்தப் பாஸ்டருக்குத் தெரியும், நான் யார், நான் யாருக்காக வைராக்கியமாய் நிற்கிறேன் என்று..

ஆனாலும் என்னோடுள்ள ஆவியானவரோடு விளையாடி என்னை வெட்கப்படுத்தித் தலைகுனியப் பண்ணுவதே அவனது நோக்கமாயிருந்தது. ஆனாலும் தேவனுடைய நாமத்தில் அங்கு நின்று அவனுடைய பலிபீடத்தையும் அவனுக்குண்டான சகலத்தையும் இழுத்து மூடினேன்!

தன் பெயருக்கு முன்னால் தீர்க்கதரிசி என்ற பட்டம் போட்டுக்கொண்டு, தன்னையே தீர்க்கதரிசி என்று அழைத்துக்கொண்டு திரிந்த இன்னொருவன்...

இவன் வேலை என்னவென்றால், தன்னிடம் ஜெபிக்க வரும் பெண்களிடமெல்லாம், கர்த்தர் உங்களை என் கைகளால் குளிப்பாட்ட வேண்டும் என்று சொல்லுகிறார் என்று சொல்லிக்கொண்டு திரிந்தான். பல வருடங்களாக சபை என்ற பெயரில் வியாபாரம் நடத்திக் கொண்டிருந்த இவனது கடையையும் கர்த்தர் இழுத்து மூடினார் !

தேவனுடைய தண்டாயுதமும் அவரது யுத்தத்தின் போராயுதமும் நீ தான் ! விக்கிரகக் கோட்டைகளையும் ஸ்தம்பங்களையும் ஆசிரமங்களையும் அவர் உன்னைக் கொண்டு நிர்மூலமாக்கி மூடிப்போட்டு மண்மேடாக்குவாராக ! உன்னைக் கொண்டு அவர் சத்துருவைக் கையாலாகாதவனாக்கிப் போடுவாராக !

நீ ஒரு தனி ஆளல்ல..நீ ஒரு ஆயுதம் ! சாதாரணமாய், எல்லாரோடு எல்லாமாய், பத்தோடு பதினொன்றாய் திரிந்து கொண்டிருப்பதை நிறுத்து ! நீ ஒரு பீரங்கி ! நீ ஒரு போர் விமானம் என்பதை மறந்து போகாதே !

யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது !

ஏதோ எதுவோ போல அலைந்து கொண்டு நாளையும் நேரத்தையும் வீணாக்கிக் கொண்டிருக்காதே ! யுத்த ஆயுதம் போல் நடக்க ஆரம்பி !

ஆங்காங்கே கள்ளப் போதகர்களையும், கள்ளத் தீர்க்கதரிசிகளையும் கபட அப்போஸ்தலர்களையும் கூட்டம் கூட்டமாக எழுப்பி, உன் தலையின் மேலிருக்கும் அபிஷேகத்தை நீயே குறைத்து மதிப்பிடச் செய்து, அவர்களுக்கு முன்பாக உன்னைக் வெட்கிக் குனிந்தே நடக்கச் செய்து கொண்டிருப்பான் பிசாசு !

உன் மேலுள்ள அபிஷேக எண்ணெயின் மதிப்பைக் குறைத்து, உன்னை வஞ்சித்து, அந்த எண்ணெயைத் தன் காலின் கீழ் சிந்திச் சிதறடித்து மிதித்துப்போட நினைப்பான் அவன் !

நீ உன் மேல் சுமந்து திரியும் அபிஷேகத்தையும் அதின் பெலனையும் வீரியத்தையும் நீயே மறந்து போகும்படி செய்வான் அவன் !

"அபிஷேகமெல்லாம் என்ன பெரிய விஷயமா ?" என்று உன்னையே சாதாரணமாக நினைக்க வைப்பான் ! ஆனால் நீ போகும் இடமல்லாம் நீ ஒரு யுத்த ஆயுதம் என்ற உன் மதிப்பை நீ எப்போதும் உணர்ந்திருக்க வேண்டும் !

சபிக்கப்பட்ட சாத்தானும், ஆசீர்வதிக்கப்பட்டு அபிஷேகம் பெற்ற நீயும் ஒரே ஊரில் குடியிருப்பது எப்படி ? நீ அங்கே இருக்கும் போது அவனுக்கு அங்கே என்ன வேலை ?

உன் சபைக்குப் பக்கத்திலேயே எவனாவது மந்திரவாதி இருந்தால், அவன் மனம் திரும்பினால் நல்லது..இல்லாவிட்டால் அவனது வித்தையெல்லாம் பலிக்காமல் போகப்பண்ணி, அவன் கதையை முடித்து அவனுக்குண்டான எல்லாவற்றையும் இழுத்து மூடு !

உன்னோடு கூட இருந்து இதை உன்னைக் கொண்டே செய்ய வேண்டுமன்று ஆண்டவர் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் !

எங்கள் நைஜீரியாவில் மட்டுமல்ல, விக்கிரக ஆராதனையும், குறி கேட்குதலும் பரவலாய் உள்ள பல இடங்களில் போதகர்களே தங்கள் சபையின் பெருக்கத்திற்காகவும், அடுத்த பாஸ்டரை குழி தோண்டிப் புதைப்பதற்கும், ஏவல்களும் பில்லிசூனியங்களும் செய்கிறவர்களை நாடிப்போகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமோ ?

தன் சபை ஆட்கள் மற்ற சபைகளுக்குப் போய்விடக்கூடாது என்பதற்காகவும், தங்கள் சபையில் நல்ல வேலை செய்யும் வாலிபப் பிள்ளைகளுக்குத் திருமணம் நடந்து விட்டால் அவர்கள் வேறு சபைக்குப் போய்விடுவதால், அவர்களால் வரும் தசமபாகம் நின்று போய்விடும் என்று அவர்களை ஜெபம் என்ற பெயரில் வேறு ஏதோ ஒன்று செய்து கட்டி, கட்டுண்டவர்களாகவே வைத்திருக்கும் போதகர்களின் அவலங்களை அறிவீர்களோ ?

போட்டி போதகர்களை சாகடிக்க மந்திரவாதிகளிடம் செல்பவர்களை அறிவீர்களோ ?
இன்றைய ஆவிக்குரிய உலகில் நடக்கும் பயங்கரங்களிலும் அவலங்களிலும் மிகச் சிலவே இவை !

இது தான் நாம் இன்று நிற்கும் யுத்த களம் ! அநேக அவிசுவாசிகள் எங்கே போவது, யாரிடம் திரும்புவது என்று அறியாமல் திகைத்துத் திரிகிறார்கள்..

ஆனால் சீக்கிரமே ஊழியம் செய்பவனுக்கும் செய்யாதவனுக்கும், உண்மையாய் தியாகத்தோடு செய்பவனுக்கும், இழிவான ஆதாயத்துக்காகவும் பெண்ணுக்காக ஆடு மேய்ப்பவனுக்கும், அசலுக்கும் போலிக்கும், கோதுமைக்கும் பதருக்கும் உள்ள பாரதூர வித்தியாசத்தை சகல கண்களுக்கும் முன்பாக அவர் துலாம்பரமாய்க் காட்டி சகலத்தையும் உரிந்து நிர்வாண கோலமாக்கிப் போடுவார் !

அந்த வித்தியாசத்தை உன்னைக் கொண்டு தான் காட்டப் போகிறார் !

ஆமென் !

ஒரு வார்த்தை சொல்லு.. !

CHAPTER - 10

பிரியமானவர்களே !

தேவனுடைய ஊழியத்திலும் சபையிலும் தேவ பிள்ளைகளின் வாழ்க்கையிலும் குழப்பத்தையும் பிரச்சனைகளையும் உண்டாக்கும் பிசாசையே நாம் எப்போதும் குற்றம் சாட்டிக் கொண்டும் அவன் மேலேயே எப்போதும் பழியைப் போட்டுக் கொண்டிருக்கவும் முடியாது.

மாறாக, அவனை இவ்வளவு தூரம் நமது சபைக்குள்ளும், குடும்பங்களுக்குள்ளும் வர அனுமதித்து அவனால் ஏற்பட்ட குழப்பத்துக்கும் சொல்ல முடியாத நஷ்டத்துக்கும், நமது தரம் தாழ்ந்த ஆவிக்குரிய நிலையும் வெதுவெதுப்பான செத்துப்போன வாழ்க்கையுமே காரணம் என்பதை வெளிப்படையாக நாம் ஒவ்வொருவரும் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும்.

இந்த அனல் கக்கும் வார்த்தைகளை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும்போதே, நீங்கள் எழுந்து நிமிர்ந்து,"பிசாசே ! நான் ஏதோ ஒரு ஒன்றுக்கும் உதவாதவன் அல்ல.. நான் தேவனது ஒரு போராயுதம்.. நான் யாரென்று உனக்குக் காட்டுகிறேன் பார்.." என்று பிசாசைப் பார்த்து நீங்கள் சொல்லப் போகிறீர்கள் !

மீண்டும் சொல்கிறேன்.. இன்றைய மிகப்பெரிய தட்டுப்பாடே போராயுதங்கள் தான். ஆயுதங்கள் இல்லாத பற்றாக்குறையே இன்றைய மிகப் பெரிய குறை. அதனால் தான் பிசாசு உலகத்தையே விழுங்குவது போல சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறான்.

ஆனால் தேவனோ, போராயுதங்களும், கூராயுதங்களும், அஸ்திராயுதங்களுமான ஒரு பெரிய தலைமுறையையே எழுப்பி, பிசாசைக் கதிகலங்க வைக்கப் போகிறார் !

உங்களுக்கு தெரியுமா ? நடந்த ஒரு சம்பவத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன்.. மெத்தடிஸ்ட் சபை ஸ்தாபகர் ஜாண் வெஸ்லி மரித்து நூறு ஆண்டுகளுக்குப்பின், இங்கிலாந்தின் கார்ன் வால்ஸ் பகுதியில் குதிரையில் சென்று கொண்டிருந்த மனிதன் ஒருவன் ஒரு பாட்டில் விஸ்கிக்காக அந்த ஊரில் கடை கடையாய் அலைந்தான். எல்லா இடமும் ஏறி இறங்கியும் கிடைக்காமல் போகவே, எரிச்சலடைந்த அவன் அங்கு இருந்த அந்த ஊர்க்காரன் ஒருவனிடம் கேட்க, அவன் சொன்னான்.. "ஐயா ஒரு நூறு வருஷத்துக்கு முன்னாடி ஜாண் வெஸ்லி என்ற ஒரு மனிதர் எங்க ஊர்ப்பக்கம் வந்தார்.. அப்போ மூடின பிராந்திக் கடை தான்.. இன்று வரை திறக்கவே இல்லை.." என்று.

ஒரு வருடம் முன்பு அல்ல, பத்து வருடம் முன்பு அல்ல, நூறு வருடம் முன்பு ஜாண் வெஸ்லி என்ற ஒரு ஏவுகணை, ஒரு அஸ்திராயுதம் அந்த ஊரில் வந்து விழுந்து, அங்கிருந்த குடிவெறியின் சாராய சாம்ராஜ்ய அந்தகாரக் கோட்டைகளையே தகர்த்தெறிந்து, அதின் லோகாதிபதிகளைக் கண் காணாமலே போகச் செய்தது. அன்று முதல் அந்த ஊரில் தப்பித்தவறி எவனும் பீர் கூட விற்கவில்லை..

ஜாண் வெஸ்லி ஒரு போராயுதம்.. ஒரு போராளி.. அவர் மரித்து ஆண்டுகள் பல ஆகியும் கூட அவரது மரணத்தின் தாக்கம் இன்றும் மண்ணில் கிரியை செய்து கொண்டே இருக்கிறது..

நீ இன்னும் இங்கே சுற்றி சுற்றி வந்துகொண்டே தான் இருக்கிறாய். ஆனால் யாராவது ஏதாவது ஒரு வித்தியாசத்தை நீ இருக்கிற இடத்தில், நீ இருப்பதால் உணர முடிகிறதா ? இல்லையே !

அப்போஸ்தலனாகிய பவுலைப்பற்றிய சாட்சியும் அதுவே ! அவர் மரித்து நூறு ஆண்டுகளுக்கு பிறகும் எபேசுவிலே ஒரு தெய்வமோ, கோவிலோ, விக்கிரகமோ எழும்பவே இல்லையே ! அங்கே விக்கிரகத்தை வழிபட ஆளே இருந்ததில்லை !

நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன்..!

எங்கள் தேசத்தின் மூத்த தேவ ஊழியர் ஓயேடேப்போ லிபேரியாவில் நடந்த பெரிய கூட்டம் ஒன்றுக்குச் சென்றபோது நடந்த ஒரு சம்பவத்தைச் சொன்னார்..

அவர் அந்தக் கூட்டத்துக்கு சென்று சேருமுன், அருகே உள்ள கடற்கரை நாட்டைச் சேர்ந்த, "அசுத்த ஆவிகளின் ராணி" என்றழைக்கப்பட்ட ஒருத்தியை லிபேரியா வரவேற்று வரவழைத்திருந்தது. அவள் ஒரு கள்ளப் போதகக் கூட்டத்துக்கு தலைவியானவள். "ஆப்பிரிக்க நூபிய ராஜ்யம்" என்ற கல்ட் குரூப்பின் "சேபா ராணி" என்றழைக்கப்பட்டவள் அவள். அரசு விருந்தினராய் லிபேரியாவுக்கு அரசாங்க வேலையாக அவள் அழைக்கப்பட்டிருந்ததால், லிபேரியாவின் ஜனாதிபதி முதல் பெரியோர் அனைவரும் அவளை வரவேற்று உபசரித்தனர்.

இந்தக் காரியங்கள் எதுவும் தெரியாமலேயே தேவ மனிதர் ஓயேடேப்போ லிபேரியாவுக்குள் வந்து சேர்ந்தார். எதிர்பாராதவிதமாக அவர்கள் இருவருக்கும் ஒரே ஹோட்டலில் வெவ்வேறு அறை புக் பண்ணப்பட்டிருந்தது.

அன்று இராத்திரியிலே திடீரென்று ஹோட்டலே தீப்பிடித்தது போல உணர்ந்த அந்தப் பெண், இரவோடு இரவாகத் தன் பெட்டி படுக்கையை எடுத்துக்கொண்டு அரசாங்கத்துக்கு சொல்லாமல் கொள்ளாமலேயே ஏர்போர்ட்டை நோக்கி ஓட்டம் பிடித்தாள்..

அடுத்த நாள் காலை தேசிய நாளிதழ் ஒன்று இப்படி ஒரு செய்தியைத் தாங்கி வந்தது.. "அப்போஸ்தலர் வந்தார்.. அந்தகார அதிபதி அரவமின்றி ஓடிப்போனான்.."

வேதம் சொல்லுகிறது.. "ஒளி இருளிலே பிரகாசிக்கிறது.. இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.."
ஒளி இல்லாததினாலேயே இருளைக் குற்றஞ்சாட்ட வேண்டியுள்ளது.

ஏதோ ஒன்று நடந்தே ஆக வேண்டும் ! உன் வாழ்க்கையையும் ஊழியத்தையும், சபையையும், அதின் சகலத்தையும் சிதறடித்து ஒன்றுமில்லாமல் போகப்பண்ணிக் கொண்டிருக்கும் பிசாசையும் அவனது ஏவல்களையும் கண்டு நீ கொதித்தெழுந்தே ஆக வேண்டும் என்று நான் உனக்குச் சொல்லுகிறேன் !

பிசாசு பார்த்துச் சொல்.."நான் ரொம்ப காலமா அமைதியா இருந்திட்டேன்.. தனியாகவே இவ்வளவு நாள் வேலை செய்திருக்கேன்.. ஆனா இப்ப நா ஒரு ஆயுதமா எழும்பிட்டேன்.. நான் ஒரு மிஷின் கன்னா எந்திரிச்சு வர்றேன்..என் வாழ்க்கையிலே நீ நசுக்கி நாசமாக்கிப் போட்ட, வீணும் விரயமுமாக்கிப் போட்ட, என் எல்லைக்குள்ளே, குடும்பத்துக்குள்ளே, சபைக்குள்ளே, என் வாழ்க்கையிலே நீ செஞ்ச ஒவ்வொண்ணுக்கும் நீ பதில் சொல்லியே ஆகணும்.. அதுக்கான விலையை நீ திருப்பிக் கொடுத்தே ஆகணும்..!"

பிசாசைப் பார்த்துச் சொல் !

உன் சத்தத்தை உயர்த்து ! உன் சத்தம் ஓங்கி ஒலிக்கட்டும் ! நீ ஒரு ஆயுதமாய்க் களமிறங்கி விட்டாய் என்று பிசாசு அறிந்து கொள்ளட்டும் !

உன் ஊழியத்தின் உண்மையான அளவுகோலே அதுதான் ! இதைச் செய்து பார் ! இது நடக்கும்போது உனக்கு செய்தி வரும் !

பிசாசின் பில்லி சூனியக் கலந்துரையாடல்களில், கான்ஃபரன்ஸில் உன் பெயர் அடிக்கடி அடிபடுவதையும், உன்னிமித்தமும், உன் ஊழியத்தினிமித்தமும் அவர்கள் உன் ஏரியாவிலும் ஊரிலும் இல்லாமல் சந்தடியின்றி அடியைக் காலி பண்ணிவிட்டுப் போய் விட முடிவு செய்து விட்டதையும் குறித்த செய்தி உன் காதுகளுக்குச் சீக்கிரமே வந்து சேரும் !

தேவ இராஜ்யத்தின் தலைப்புச்செய்தி

CHAPTER - 11

கர்த்தர் என்னும் பெலவானின் கரத்தில் நீ ஒரு துலக்கமான அம்பாய், கருக்கான பட்டயமாய், புதிதும் கூர்மையுமான பற்களுள்ள எந்திரமாய் இருப்பாயானால், நீ செய்யும் ஒவ்வொரு கிரியையும் ஊழியமும் நீ இருக்குமிடத்தில் தலைப்புச் செய்தியாய் வெளிவந்து கொண்டே இருக்கும்..

பிசாசு பரப்பும் செய்திகளையும் வதந்திகளையும் வாயடைத்து, முறியடித்து மூடிப்போட்டு, தேவ ராஜ்யத்தின் நம்பிக்கையின் செய்திகள் மட்டுமே உன் ஊழியத்தின் மூலம் பரம்பி வெகுதூரம் வரை எதிரொலிக்கச் செய்யப்பட்டு, அதின் அதிர்வலைகள் மாத்திரமே மிக வேகமாய்ப் பரவிச் செல்லுமானால், அதுவே தான் உன் ஊழியத்தின் கூர்மையையும் தாக்கத்தையும் நிர்ணயிக்கும் அளவுகோல் என்பதை ஞாபகம் வைத்துக்கொள் !

இன்னொரு வகையில் சொல்வதானால், உன் ஊழியம், கர்த்தருடைய செய்கைகளைக் கண்முன்னே நடப்பித்து நிரூபித்துக் காட்டுகிற ஒரு ஊழியமாய் இருக்க வேண்டும். அதாவது, ஊழியத்தைப் பற்றிக் கேள்விப்பட, தாக்கம் உண்டாக்கும் நேர்மறைச் செய்தி ஒன்று எப்போதும் இருந்து கொண்டே இருக்க வேண்டும்..

உன்னிடம் நான் ஒன்று கேட்கிறேன்.." உன் ஊரிலோ நகரிலோ மிகப்பெரிய தாக்கம் உண்டாக்கும் நல்ல செய்தி ஒன்று உன் ஊழியத்தின் மூலம் பரவிக்கொண்டே இருக்கிறதா ?"

மத்தேயு 11:4,5 ல் இயேசு சொன்னார்.. "நீங்கள் காண்பவைகளையும் கேட்பவைகளையும் யோவானுக்குப் போய்ச் சொல்லுங்கள்.. குருடர் பார்வையடைகிறார்கள். முடவர்கள் நடக்கிறார்கள்.. குஷ்டரோகிகள் சொஸ்தமாகிறார்கள்.. செவிடர் கேட்கிறார்கள்.. மரித்தோர் எழுப்பப்படுகிறார்கள்..தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது..

"யோவான் ஸ்நானகன் இயேசுவிடம் ஆள் அனுப்பிக் கேட்டான். வருகிறவர் நீர் தானா ? அல்லது வேறொருவர் வரக்காத்திருக்க வேண்டுமா ?" என்று.. அதற்குத் தான் இயேசு இந்த வார்த்தையை பதிலாகச் சொல்லி அனுப்பினார்..

ஒவ்வொரு உண்மையான அபிஷேகிக்கப்பட்ட ஊழியத்திலும், ஜனங்களைத் திரும்பிப்பார்க்க வைப்பதற்கும், அவர்கள் தங்கள் காதைத் தீட்டிக் கேட்க வைப்பதற்கும் நிச்சயமாய் ஏதோ ஒன்று இருக்கும். ஒன்று நீ அட்டைப்படச் செய்தியாவாய் அல்லது காணாமல் போனவர்களின் அறிவிப்புச் செய்தியாய் !

புரட்சியோ புனிதப் போரோ, ஏதோ ஒன்று செய்து விடுவது என்ற முடிவோடு இறங்கிவிடு ! உண்மையிலே தேவனுடைய கரத்தில் துலக்கமான ஒருவனாய் நீ இருப்பாயானால் அவர் உன்னைக் கொண்டு செய்பவைகளைப் பற்றிய செய்திகள், பத்தி பத்தியாய்ப், பக்கம் பக்கமாய், செய்தி மேல் செய்தியாய்த் தீயாய்ப் பரவிக் கொண்டே இருக்க வேண்டும் !

போர் என்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா ? யுத்தமே சத்தம் தான் !யுத்தத்தின் சத்தமும் செய்தியும் நாலாபக்கமும் கேட்டுக்கொண்டே இருக்கும். போரிடும் இரண்டு பக்கத்திலிருந்தும் சத்தம் கேட்கிறது. யார் சத்தம் உரக்கக் கேட்கப்படுகிறது என்பதில் தான் விஷயமே அடங்கியிருக்கிறது. எதிரியும் கொக்கரிக்கிறான்..

நீயும் சத்தமிடுகிறாய்.. ஆனால் யாருடைய சத்தம் மேற்கொண்டு இன்னொன்றை அடக்கிப் போடுகிறது என்பதே கேள்வி !

நான் ஏற்கனவே சொன்னபடி, உலகின் போதை மருந்தின் தலைமையிடமே கொலம்பியா தான். கொலம்பியாவின் காடுகளும் நிழல் உலக மாஃபியாக்களும் பிரபலங்களும் நீங்கள் அறியாததல்ல.. படுபயங்கரமான மனிதர்கள் !

"நாசரேத்திலிருந்து நன்மை ஏதும் வரக்கூடுமோ ?" என்று கேட்டது போல, கொலம்பியாவிலிருந்து அப்படி ஏதும் நன்மை வருமா என்று நீங்கள் கேட்கும் ஓர் இடம் அது ! ஆனால் கொலம்பியாவில் தான் சீசர் கேஸ்ட்டிலனோஸ் நடத்தும் உலகத்திலேயே இரண்டாவது மிகப்பெரிய சபை இருக்கிறது. இதே கொலம்பியாவில் தான் அசாதாரண எழுப்புதல் அக்கினியாய்ப் பற்றியெரியும், தேவன் எழுப்பியுள்ள ரிக்கார்டோ ராட்ரிக்ஸ், அரிய பெரிய காரியங்களை சர்வசாதாரணமாய் நிகழ்த்தி வருகிறார்..

அவரது DVD ஒன்றைப் பார்த்தபோது என்னால் நம்பவே முடியாத தேவ பிரசன்னமும் வல்லமையும் மகிமையும் அந்த இடத்திலிருந்து புறப்படுவதைக் கண்டேன்.

மேற்கத்திய உலகமெங்கும் தலைப்புச் செய்தியாகும் கொலம்பியாவை நோக்கி உலகின் நாலா பக்கங்களிலிருந்தும் ஜனங்கள் படையெடுப்பதைக் காண்கிறேன். காரணம் பிசாசின் செய்திகளைப் பின்னுக்குத் தள்ளி, தேவனின் செய்திகளைத் தலைப்புச் செய்திகளாய்த் தாங்கி வரும் கொலம்பியச் செய்திகள் !

"உன்னுடைய ஒவ்வொரு வகையான துர்ச்செய்தியின் எதிர்மறைகளையும் நுனி ஒடித்து, உன்னை வாயடைக்க வைக்கும் வல்லமையான செய்தி ஒன்று என்னிடம் உண்டு.." என்று பிசாசுக்கு நிரூபித்துக் காட்டும் வாய்ப்பு ஒன்று இங்கே உனக்குக் கொடுக்கப்படுகிறது !

எனக்கு அன்பானவனே ! நான் உனக்குச் சொல்லுகிறேன்.. போ ! செய்தி ஒன்று உன் மூலம் பரவட்டும் ! தலைப்புச் செய்தியாய், நெருப்புப் பொறியாய்ப் பற்றிப் பிடித்துப் பரவாத ஒரு ஊழியம் ஒன்று எனக்கு வேண்டவே வேண்டாம்.." என்று உனக்குள் எழுதிவிடு !

உக்ரைனிலே, "நாட்டின் மிகப்பெரும் மாற்றம் ஏற்படுத்திய மனிதர்" என்ற விருதைப் பெற்றவர், நைஜீரியாவைச் சேர்ந்த தேவ மனிதர் ஒருவர்..நிறவெறி நிறைந்த அப்படி ஒரு நாட்டிலே, அந்நாட்டின் ஜனாதிபதி முதல் சினிமா நட்சத்திரங்கள், கால்பந்து வீரர்கள் வரை ஒரு கறுப்பருக்குப் பின்னால் ஓரணியில் அணி திரண்டு நிற்கும் அந்த அற்புத காட்சியைப் பார்த்திருக்கிறீர்களோ ?

சில காலத்துக்கு முன்னால் வரை "கருங்குரங்கு" என்றும் "சாக்லேட்" என்றும் அழைக்கப்பட்ட மனிதர் அவர்.. இன்னும் என்னென்னவெல்லாம் பெயரிட்டு அழைக்க முடியுமோ அவ்வளவு பட்டப்பெயரையும் பெற்றிருந்தார் அவர்.

ஆனாலும் அந்த மனிதன் களத்தில் இறங்கியபோது தேவனுக்காய் தேசமே அதிர்ந்தது. தேசத்தின் தலைப்புச் செய்திகளும் தலையங்கங்களும் தேவ ராஜ்யத்தின் செய்திகளாகவே தேசத்தின் மூலை முடுக்கெல்லாம் ஊடுருவிச் சென்றன..

"ஆரஞ்சுப் புரட்சி" என்று வர்ணிக்கப்பட்ட அந்த இரண்டு வாரக் கூட்டங்களில் தலைநகரின் சதுக்கத்தில் கூடிய ஐந்து இலட்சம் கிறிஸ்தவர்கள், நாட்டின் ஊழல் அரசாங்கத்தைத் தூக்கியெறிந்தே தீருவோம் என்று வெயிலென்றும் மழையென்றும் பாராமல் செய்த புரட்சி, நாட்டையே புரட்டிப்போட்டு அங்கிருந்த ஊழல் அரசாங்கத்தை ஓட ஓட விரட்டியடித்தது..

நீ ஓரிடத்தில் இருப்பதை ஒருவரும் உணராமலேயே போனால், நீ அங்கே இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதையும் யாரும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளப்போவதே இல்லை.. நீ இல்லாதிருப்பதினால் அங்கே ஏற்படும் ஒரு பெரிய வெற்றிடத்தை அங்கே நீ உருவாக்காமல் போனால், அந்த இடத்தில் நீ ஒரு தேவையற்றவனே ! சொல்லப் போனால், அங்கே நீ, யாருக்கும் தேவையில்லாத ஒருவனாய் சும்மா வெறுமனே இடத்தை அடைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாய் என்பதே உண்மை !

அப்படி இருக்கும் பட்சத்தில், பரலோகமும் தன்னிடம் வைத்திருக்கும் முக்கியத்துவமிக்க முன்னணிக் காரியங்களில் உன்னை ஒரு முக்கியத்துவம் உள்ளவனாகவோ, ஒரு பொருட்டாகவோ கூட எடுத்துக்கொள்வதில்லை என்பதே உண்மை !

உன்னை வெறியேற்றிக் கிளப்பி எழுப்பி விடுவதே என்னுடைய இந்த வார்த்தைகளின் நோக்கம் !
"பட்டங்களையும் சட்டங்களையும் மாட்டிக்கொண்டு காரியத்துக்கு உதவாத வைத்தியனாய், வேலைக்கு ஆகாமல் நாளையும் பொழுதையும் போக்கிக்கொண்டு, இடத்தை அடைத்துக் கொண்டிருப்பவர்களில் ஒருவனல்ல நீ " என்று பிசாசு அறிந்து கொள்ளட்டுமே !

உன்னைப்பற்றி வெளியாகும் நேர்மறைச் செய்திகளே எட்டுத் திசையிலும் தாக்கத்தையும் அதிர்வலைகளையும் உண்டாக்கும் உன் ஊழியத்தின் அளவுகோல்கள் !

நமது கனிகளின் தரம்

CHAPTER - 12

உன் ஊழியத்தின் மூலம் உருவாகிப் பிறந்த விசுவாசிகளின் ஆவிக்குரிய தரமே உன் ஊழியத்தரத்தின் அளவு கோலாகவும், நீ எப்படிப்பட்ட தீட்டப்பட்ட கூர் முனை கொண்ட ஊழியன் என்பதையும் காட்டுகிறது..

உன் ஊழியத்தின் மூலம் உருவாகிப் பிறந்த ஆத்துமாக்களின் ஆவிக்குரிய தரமே, உன் ஊழியம் எப்படிப்பட்ட தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை அளவிட்டுக் காட்டும்.

நீ உருவாக்கும் கிறிஸ்தவர்களின் தரமே, உன் ஊழியத்தின் தரம். ஏனென்றால் ஒவ்வொரு விசுவாசியும் ஏதோ ஒரு ஊழியத்தின் கனியாகவே இருக்கிறான். ஆகவே தான் மீண்டும் சொல்லுகிறேன்.. உன் தனிப்பட்ட வாழ்க்கையும் சாட்சியுமாகிய கனிகளினாலே மட்டுமல்ல, உன் ஊழியத்தில் நீ கொடுக்கும் கனிகளாகிய ஆத்துமாக்களின் தரத்தினாலேயே உன் ஊழியத்தின் தரமும் கண்டறியப்படும்.. கணிக்கப்படும்..

ஒருநாள் ஒரு வாலிபனைப் பார்த்தேன்.. அவன் கார் முழுவதும் ஒரே வேத வசன ஸ்டிக்கர் தான்.. நீங்கள் Praise The Lord சொல்லும் முன்னாலே சொல்லி விடுவான், தான் எவ்வளவு பிஸியாய் ஊழியம் செய்கிறேன் என்று.. அவன் வாய் திறந்தாலே தண்ணீர் உடைந்தோடுகிறது போல பொய்யும் புரட்டும் புரண்டோடும்.

இவன் காருக்கு உள்ளேயும் வெளியேயும் ஒட்டி வைத்திருக்கும் "இயேசு இரட்சிக்கிறார்" "இயேசு நேசிக்கிறார்.." என்ற ஸ்டிக்கர்களாலே அவனுக்கும் அவன் சபைக்கும் வெட்கமே அல்லாமல் யாருக்கு என்ன லாபம் ?

இன்னொரு வாலிபனைக் கண்டேன். இவன் வண்டியிலும் முழுவதும் ஸ்டிக்கர்மயம் தான்..ஆனால் இவன் ஒரு செயின் ஸ்மோக்கர்.. இவனது சபைக்கு இவன் ஒரு வெட்கக்கேடு இல்லையா ?

எப்படிப்பட்ட கிறிஸ்தவர்களை, விசுவாசிகளை நீ உருவாக்குகிறாய் ? உன் ஜனங்கள் பிரச்சனைகளினாலும் பாடுகளினாலும் நெருக்கப்படும் போது அவர்கள் எதை வெளிப்படுத்துகிறார்கள் ? அதை அவர்கள் எப்படிப்பட்ட ஆவியால் தாங்குகிறார்கள் ? அப்படிப்பட்ட நேரங்களில் அவர்களது ரியாக்ஷன் எப்படி இருக்கிறது ?

நீ அவர்களைப் படிப்பித்துப் பயிற்சித்து வளர்த்த தரம் அதில் தான் விளங்குகிறது. பிள்ளைகளின் தரமே பெற்றோரின் வளர்ப்பின் தன்மையைப் பிரதிபலிக்கிறது என்பதே உண்மை. ஆகவே அதுவே உன் ஊழியத்தின் தன்மையின் அடையாளம். நம்மில் அநேகக் கிறிஸ்தவர்கள் பிரச்சினைகளுக்கும் உபத்திரவங்களும் பரீட்சைகளுக்கும் நில்லாதவர்களும் நிற்கக் கூடாதவர்களுமே !

நாலாபக்கமும் நெருக்கப்படும்போது ஏதோ ஒரு பொய் சொல்லித் தப்பிப்பதிலேயே அவர்கள் தீவிரமாக இருப்பார்கள்.. தசமபாகம் தருவதிலும் சபையின் ஏதோ ஒரு ஊழியத்திலும் ஒழுங்காக இருந்தாலும், தாங்கள் வேலை செய்யும் இடத்திலோ தான் ஒரு கிறிஸ்தவன் என்றோ, விசுவாசி என்றோ காட்டிக் கொள்ள விரும்பாதவர்களாய், கிறிஸ்துவுக்காக வைராக்கியமாய் நிற்க மனமின்றி, வெட்கப்பட்டு, கூடுமானவரை எல்லாரோடும் எல்லாமாக எல்லாவற்றிலும் சமரசம் செய்து கொண்டு, சகஜமாய் உலகத்தோடு ஒத்துப்போய் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.. இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் தான் இன்று நாலாபக்கமும் காணக் கிடக்கிறார்கள். நீ உருவாக்கும் விசுவாசியின் ஆவிக்குரிய தரமே உன் ஊழியத்தின் தரம் ! ஞாபகம் வைத்துக்கொள் !

நீ பரலோகம் போய்ச் சேரும் போது, நீ உரைத்த தீர்க்கதரிசனங்களால் எத்தனை பேர் கார் வாங்கினான் என்று அங்கே உன்னை யாரும் கேட்கப்போவதில்லை.. உன் ஊழியத்தின் மூலம் எத்தனை வியாதியஸ்தர்கள் சுகமானார்கள் என்று யாரும் அங்கே உன்னைக் கேட்கப் போவதில்லை.. ஆனால் உன் ஊழியத்தின் மூலம் உண்மையாய் சீஷர்களாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்றும் அவர்களது சீஷத்துவத்தின் தரம் எப்படி இருக்கிறது என்பது மட்டுமே அங்கே உரசிப் பார்க்கப்படும்..

"நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்.." என்பதே பிரதான கட்டளை.

சுகமளிக்கும் ஊழியத்திலோ, "கர்த்தர் உன்னை ஆசீர்வதித்துப் பெருகப் பண்ணுவார்.." என்று பிரசங்கிப்பதிலோ எனக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.. ஆனால் இவைகள் எல்லாமே தேவனிடம் மக்கள் இலகுவாய் நெருங்கிவர அவர்களுக்கு உதவும் ஏதுக்களே தவிர, இவைகளே கிறிஸ்தவ வாழ்வின் எல்லாம் என்பது நிச்சயமாய் அல்லவே அல்ல என்பதே நான் சொல்வது..

" என் மந்தையிலிருக்கும் ஆடுகளை, என் சபையிலிருக்கும் விசுவாசிகளை நான் எதை நோக்கி நடத்துகிறேன்.." "ஒரு மேய்ப்பனாய் எனது நோக்கம் என்ன ?" என்பதே ஒவ்வொரு போதகரும் மேய்ப்பரும் தன்னைத்தானே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி..

சில போதகர்களுக்குக் குறியே பணம் தான் ! அவர்களைப் பொருத்தமட்டில் "ஜனங்களை வெள்ளிப் பணத்தால் விதைக்க வைக்காத வரை" அவர்களுக்குத் தங்களது பிரசங்கமே வேஸ்ட் தான்.. "நீங்கள் விதைத்தால் தான் உங்களுக்கு ஆசீர்வாதம்.." என்று சொல்லிச் சொல்லியே இவன் அறுவடை செய்து கொண்டிருப்பான்..

“இந்த ஆள் ஒரு பணப்பேயன்.." என்று யாரும் உன்னை முத்திரை குத்த விட்டு விடாதே ! இப்படிப்பட்ட ஆட்களைக் கண்டாலே ஜனங்கள் காத தூரம் ஓடுகிறார்கள் என்று உனக்கு தெரியுமா ? இப்படிப்பட்ட ஆட்கள் பிரசங்க பீடத்தில் ஏறுவது தெரிந்தால் போதும்..

பின் வரிசையிலிருந்தும் நடுவிலிருந்தும் நைஸாகத் தங்கள் பைபிளை எடுத்துக் கொண்டு நழுவி விடுகிறவர்களைப் பார்த்திருக்கிறீர்களா ?

நான் ஒன்று சொல்லுகிறேன் ! போதகர்களின் நியாயத்தீர்ப்பு படுபயங்கரமாய் இருக்கும் ! நான் அங்கே பரலோகத்தில் பிரவேசிக்கும் முன்பாகவே சிலர் கர்த்தருடைய கோபாக்கினையின் கண்களைக்கூட நேருக்கு நேர் பார்க்கக்கூடாதவர்களாய் இருப்பார்கள்..

அக்கினி ஜுவாலையான அவரது கண்களைப் பற்றி நான் சொல்லுகிறேன்.. வெளிப்படுத்தின விசேஷத்திலே வேதம் குறிப்பிடும் அந்தக் கண்களைத்தான் சொல்லுகிறேன்.. தாங்கள் ஓடி ஒளிய இடமின்றி வானமும் பூமியும் சுருட்டப்பட்ட தோல் சுருளைப் போல சுருண்டு கொள்ளும். போதகர்களையும் பாதிரிகளையும் நேருக்குநேர் கண்ணில் பார்த்து கேட்பார் அவர்..

“இப்படிப்பட்ட பிரசங்கம் பண்ண வேண்டுமென்று யார் உனக்குச் சொன்னது ? "இப்படியெல்லாம் ஊழியம் செய்.." என்று யார் உன்னை அனுப்பியது?" என்று அவர்களைப் பார்த்து நிர்த்தாட்சண்யமாய்க்கேட்பார் அவர் !

ஆனாலும் இப்படிப்பட்டவைகளால் கறைபடாத, தங்களைக் கறைப்படுத்திக் கொள்ளாத சிலர் இந்தத் தலைமுறையிலேயும் உண்டு..

"நீ ஒருவன் மட்டுமே உன் ஊரில் தன்னந்தனியனாய்க் கத்திக்கொண்டிருந்தாலும் தான் என்ன ? அன்று வனாந்திரத்திலே கூப்பிடும் சத்தமான யோவான் ஸ்நானகனைப் போல ஆண்டவருக்காய் தைரியமாய் நில்!" என்று உனக்குச் சொல்லுகிறேன் ! தங்கள் தேவாலயங்களையும் கதீட்ரல்களையும் விட்டு விட்டு, உன்னோடு கூட இருந்து வசனத்தை அற்புத அடையாளங்கள் மூலம் உறுதிப்படுத்தும் உன் ஆண்டவர் உன்னோடு இருக்கிறார் என்று கண்டு, கடற்கரை மணலத்தனையான கூட்டம் உன்னிடத்துக்குத் திரும்பும் ! ஜாதிகள் உன்னிடத்திற்கு ஓடிவரும் ! அவர் உன்னை மேன்மைப்படுத்துவார் !

ஒரு, தரம் குறைந்த பொருளைத் தன் தலையில் கட்டிவிட்ட ஏமாற்றுக் கடைக்காரனை ஜனங்கள் சபிப்பது போல, நித்தியத்தில் சத்தியத்தை சத்தியமாகத் தங்களுக்குச் சொல்லித்தராத, வேண்டுமென்றே மறைத்துவிட்ட தங்கள் பாஸ்டர்களைப் பற்களைக் கடித்துக்கொண்டு அவர்களது விசுவாசிகள் நித்திய நித்தியமாய் சபித்துக் கொண்டிருப்பார்கள் என்று நிச்சயமாய் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் !

தனது தூக்கு மேடையில் தன் கடைசி ஆசையாகத் தன் தாயை சந்திக்க வேண்டுமென்று சொன்ன அந்த மரண தண்டனைக் குற்றவாளி, தன் தாயே தன் மரணத்துக்குக் காரணம் என்றும், சிறுவயதில் தன்னைக் கண்டித்து வளர்க்காததே, தான் ஒரு திருடனாய், கொலைகாரனாய் மாறியதற்குக் காரணம் என்றும் சொல்லி, தன் அருகில் வந்த அவளின் காதைக் கடித்துத் துப்பியது போல, அநேக விசுவாசிகள் அங்கே நித்தியத்திலே தங்கள் தண்டனைக்குக் காரணம் தங்கள் போதகர்களே என்று அவர்களைக் காறிக்கரித்துத் துப்புவார்கள் !

ஆகவே, நாம் உருவாக்கும் நமது கனிகளின் தரத்தை நாம் சோதிக்கும் நேரமிது ! அவர்களது வாழ்க்கையும் சாட்சியும் எப்படி இருக்கிறது என்று கவனித்து பார்க்க வேண்டிய சமயமிது !

"அவனவனுடைய வேலையும் வேலைப்பாடும் எத்தன்மையுள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும்..

ஒருவன் கட்டினது வெந்து போனால் அவன் நஷ்டமடைவான்..
அவனோ இரட்சிக்கப்படுவான்..

அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும் என்று வேதம் சொல்லுகிறது.. (1 கொரி 3:13-15)

அதாவது அநேகர், அநேக ஆண்டுகள் இங்கும் அங்கும் ஓடி ஓடிச்சென்று செய்த வேலைகள், ஊழியங்களெல்லாம் தேவனுடைய பார்வையின்படியும் அளவின்படியும் அர்த்தமற்றது என்றே கணிக்கப்பட்டு ஒன்றுமில்லாமல் போய், அவர்கள் மட்டுமே வேண்டுமானால் ஒருவேளை தப்புவிக்கப்படும் ஒரு நிலை நிச்சயம் வரும் !

தங்கள் நல்ல அரசாங்க வேலைகளையும், வங்கிகளையும் ராணுவ உத்தியோகங்களையும் கூட உதறிவிட்டு கர்த்தருடைய ஊழியத்துக்கு வந்தவர்கள் உண்டு.

ஆனால் கடைசியில் தங்கள் ஊழியங்களோ உழைப்போ அங்கீகரிக்கப்படாத அட்டவணையில் இருக்கக் காணப்படும் போது, (Rejected List) அதின் பயங்கரத்தை யார் விவரிக்க முடியும் ? "தாங்கள் ஓடிய ஓட்டமும், பட்ட பிரயாசங்களும் கணக்கில் எடுபடாமல் எடுபட்டுப்போயிற்று என்று அவர்கள் காணும் போது ஏற்படும் அங்கலாய்ப்புக்களையும் அலறல்களையும் என்னவென்று விவரிப்பது ?

அதிலும் சிலர் தாங்களும் அடால்ஃப் ஹிட்லர் தூக்கி எறியப்பட்டிருக்கும் அதே அதல பாதாள சிறையின் நரக அக்கினியில் தகனிக்கப்படும் வேதனையில், தங்களையும் அவனோடு கட்டுண்டு கிடக்கக் காணும்போது அந்த வேதனையை யார் விவரிப்பது ?

பிரபலங்களின் பின்னாலும், பிரபலமாக்கப்பட்ட எல்லாவற்றின் பின்னாலேயும் ஓடாதிருப்போம் ! பிரபலமானவர்களும் பிரபலமானவைகள் எல்லாமுமே தேவனுக்குப் பிரியமானவர்களும் பிரியமானவைகளும் அல்ல..

டிவி சேனல்களிலும் சோஷியல் மீடியாக்களிலும் பிரபலமாய் பிரம்மாண்டமாய் பிரகாசிப்பார்களாய்க் காட்டப்படும் நற்செய்தி விளம்பரங்கள் மற்றும் வியாபாரங்கள் ஒவ்வொன்றைக் குறித்தும் எச்சரிக்கையாய் இருப்போம் !

உலகமெங்கிலும் பிரசங்க பீடங்களிலிருந்து பிரசங்கிக்கப்படும் எல்லாச் செய்திகளுமே தேவனிடமிருந்து வருபவைகள் அல்ல..

டிவியில் அவர்களது கிறிஸ்தவ வியாபாரங்களையும் விளம்பரங்களையும் காணவில்லையோ ? "இது சுகமாக்கும் எண்ணெய் ! விலை 100 ரூபாய் மட்டுமே !வாங்கி உபயோகியுங்கள் ! நீங்கள் சுகமாவீர்கள் !" " இதோ !

ஓ !என்னென்ன உத்திகள் ! எத்தனை எத்தனை வித்தைகள் ! எப்படி எப்படி விற்பனை விற்பன்னர்கள் !

இயேசு தன் சவுக்கையை எடுக்குமுன் அங்கே தேவாலயத்தில் கொடி கட்டிப்பறந்து கொண்டிருந்த வியாபாரமே தான் இங்கேயும் இன்று நடக்கிறது..

கொட்டடித்துத் திரிபவன் பின்னாலே போகாதே !

"ஒருமித்த ஏகோபித்த கருத்தோடு முழுக்கிறிஸ்தவ உலகத்தாலும் ஒருமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இவரே!.." என்று ஏதோ ஒருவர் பின்னாலே வாழும் ஒரு வாழ்க்கை வாழாதே ! மாறக, உன் ஆவியோடு தேவ ஆவியும் சாட்சியிடும், தேவ வார்த்தையோடு வாழும் ஒரு தனித்து நில்லும் வைராக்கிய வாழ்க்கைக்காகத் துணிந்து நில் !

உன் அழைப்பும், ஊழியமும், வாழ்க்கையும், பிரயாசங்களும் வீணும் வெறுமையுமாய் வெந்து போகாதபடி, பலனும் கனியும் தரமும் தங்கமுமான ஒரு வாழ்க்கையையே நீ தெரிந்துகொள்

தண்டாயுதம் செய்யப்படும் விதம்

CHAPTER - 13

எல்லா மரமும் இரும்பும் ஏதோ ஒரு ஆயுதமாய், போராயுதமாய் அப்படியே ஆகிவிடுவதில்லை. அது போராயுதமாய் மாறுமுன், அது ஒரு ஆயுதமாய் உருவாக்கப்படவும், உருவேற்றப்படவும், வடிவமைக்கப்படவும் வேண்டிய ஒரு செய்முறையும் வழிமுறையும் உண்டு.

எரேமியா 51:20 "நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன்.நான் உன்னைக் கொண்டு ஜாதிகளை நொறுக்குவேன்..உன்னைக் கொண்டு ராஜ்யங்களை அழிப்பேன்..

ஒரு தண்டாயுதம் எப்படி செய்யப்படுகிறது ? அது எப்படி உருவாக்கப்பட்டு வடிவமைக்கப்படுகிறது ? இதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளும்போது, இந்தக் கடைசிக் காலங்களில் நம்மை நாமே ஆயுதங்களாய் நிறுத்திக் கொள்வது எப்படி என்று இன்னும் ஆழமாய் அறிந்து கொள்ள முடியும்..

முதன்முதலில் தண்டாயுதம் என்பது ஒரு கொடுமையின் கோடாரி. கோடாரிக்கு இரு பகுதிகள் உண்டு. ஒன்று கோடாரிக் கைப்பிடி அல்லது மரக்கட்டைப்பகுதி. இன்னொன்று கோடாரியின் தலைப்பகுதியான கொம்பு அல்லது கொழும்பு. கோடாரியின் கைப்பிடி மரத்தாலும், தலைப்பகுதி உலோகத்தாலும் (இரும்பு) செய்யப்படுகிறது.

தற்செயலாகப் பார்த்தால் மரமும் இரும்பும் இரண்டுமே பூமியிலிருந்து உருவாகிக் கிடைப்பவை. ஒன்று பூமியின் மேற்பகுதியிலிருந்து கிடைப்பது.மற்றொன்று பூமியின் உட்பகுதியிலிருந்து கிடைப்பது.

கோடரியின் கைப்பிடிக்கட்டை, பூமியின் வெளிப்புறத்திலிருந்து கிடைக்கும் மரத்தினால் செய்யப்படுவது.. அதேநேரம், கோடரிக்காம்பான கூரான தலைப்பகுதி, பூமிக்கடியிலிருந்து எடுக்கப்படும் இரும்பினால் செய்யப்படுகிறது.கட்டையும் இரும்பும் இணையும்போது ஆயுதம் உருவாகிறது.

ஆனால் இங்கே தான் விஷயமே அடங்கியிருக்கிறது. மரமும் இரும்பும் கிடைப்பதனால் தன்னாலேயே கோடாரி ஒன்று உருவாகி விடுகிறதில்லை. மரமும் இரும்பும் சேர்ந்து ஒரு கோடாரியாகச் செய்யப்படுவதற்கு முன்பாக அவை இரண்டுமே சில செயல்முறைகளுக்குள்ளும் பணிப்படுத்துதல்களுக்குள்ளும், உட்படுத்தப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது..

கைகளில் கிடைத்த ஒரு பெரிய மரத்துண்டு, கோடாரியைக் கையாடுகிறவனின் கரங்களில் அவனுக்குத் தோதாக, வசதியாக, வாட்டமாகக் கையாளப்படும் அளவுக்கும் பிடிமானத்துக்கும் ஏற்ப வெட்டப்பட்டு, செதுக்கப்படுகிறது.

அதே போல இரும்பும் நெருப்பிலிடப்பட்டு, அடி மேல் அடி அடிக்கப்பட்டு அதற்கு வடிவம் கொடுக்கப்பட்டுக் கூராக்கப்படுகிறது. இந்தச் செயல்முறைகளுக்குள்ளும், உருவேற்றங்களுக்குள்ளும் அவை இரண்டும் தனித்தனியே உட்படுத்தப்பட்ட பிறகே, இரண்டும் ஒன்றாக்கப்பட்டு, கோடாரியாக உருவாகிறது.

அப்படிப்பட்ட கோடாரியோ, மரணாயுதமுமோ போரில் உபயோகப்படுத்தப்படும்போது, அது தண்டாயுதம் என்றும் அஸ்திராயுதம் என்றும் அழைக்கப்பட்டு அது ஒரு போராயுதமாகிறது..

மனித ஆயுதம்

தேவன் மனிதனை பூமியின் மண்ணிலிருந்து படைத்தார். ஆகவே அவர் அவனைத் தனது தண்டாயுதமாகவும், அஸ்திராயுதமாகவும், பிசாசுக்கு எதிரான தன் கொடுமையின் கருவியான கோடாரியாகவும் உருவாக்குமுன், மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட அவனது புறம்பான மனிதனிலும், உள்ளான மனிதனிலும் சில காரியங்களை, செயல்முறைகளை வடிவேற்புக்கழை அவனில் அவர் செய்ய வேண்டியுள்ளது..

மண்ணின் வெளிப்புறம் வளரும் மரத்தைக் கொண்டும், உள்ளே விளையும் உலோகத்தைக் கொண்டும் உருவாக்கப்படும் கோடரியைப் போலவே, மனித ஆயுதமாய், கோடாரியாய் அவர் அவனை உருவாக்குமுன், மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட அவனது வெளிப்புற மனிதனிலும் அவனது உள்ளான மனிதனிலும் ஏதோ ஒரு கிரியையைம், செயலையும் அவர் அவனில் செய்தே ஆக வேண்டியுள்ளது என்பதை நீ மறந்து போகாதே !

பூமியின் மேற்பரப்பிலிருந்து எடுக்கப்படுகிற மரம், புறம்பான மனிதனான இரத்தமும் சதையும் சரீரமுமான மனிதனின் மாம்சத்தையும், பூமியின் அடியிலிருந்து எடுக்கப்படுகிற இரும்பு, உள்ளான மனிதனான ஆவியையும் குறிக்கிறது.

ஆகவே மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட மனிதனின் மாம்ச சுபாவங்களை செதுக்கி செப்பனிட்டுச் சரி செய்து, அவனது உள்ளான ஆவியை அக்கினியில் புடமிட்டு, அக்கினிப் பிழம்பாக்கி அவைகள் இரண்டையும் ஒருசேர ஒன்றிணைத்தே ஒரு கோடாரியாய் அவர் அவனை உருவாக்க வேண்டியிருக்கிறது..

இப்பொழுது இன்னொரு காரியம். பூமியிலே அநேக வகை மரங்கள் உண்டு. அவை எல்லாமே இந்த உபயோகத்துக்கு ஆகிறதில்லை. அதேபோல உலோகங்களிலும் பலவகை உண்டு. எல்லாமே கோடரிக்காம்பாக்கப் பயன்படுத்தப்படுவதில்லை. அதே போல மனிதர்களிலும் பலவகை உண்டு. அவர்கள் தங்களில் மரத்தின் தன்மையையும் உலோகத்தின் தன்மையையும் தாங்கித்திரிந்தாலும், உபயோகிக்கப்படும் அளவு அவர்கள் இன்னும் உருவேற்றப்படாதவர்களாகவும், வடிவமைக்கப்படாதவர்களாகவுமே இருக்கின்றனர்.

சமையலறையில் உள்ள எல்லாத் தட்டுகளும் விருந்தினர்கள் முன் பரிமாறப்பட கொண்டு வரப்படுவதில்லை. இங்கே தான் பிரச்சனையே அடங்கி இருக்கிறது. ஆகவே தான் அநேகர் தேவனது கரங்களில் இன்னும் தண்டாயுதங்களாகவும் கூராயுதங்களாகவும் பயன்படாமலே உபயோகமற்றுக் கிடக்கின்றனர்.

அவர்களது மாம்ச சுபாவங்களில், தான் இடைப்பட்டுக் கிரியை செய்து அதைக் கையாள தேவனுக்கு அவர்கள் மேல் முழு உரிமையும் சுதந்திரமும் இன்னும் கிடைக்கப் பெறாததாலும், அவர்களது உள்ளான ஆவி, அக்கினியால் தகனமாய்த் தகிக்காமல், அவிந்து குளிர்ந்து போய் இருப்பதாலுமே அவர்கள் தேவனால் உபயோகப்படுத்தப்பட முடியாமலே இருக்கின்றனர்.

அவர்களது மாம்சம் கடினமாய் சீவிச் செதுக்கப்படாமலும், அவர்களது நுனித்தோல் வெட்டப்பட்டு விருத்தசேதனம் பண்ணப்படாமலும் இருக்கிறது.உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி ஒரு ஆண்பிள்ளை பிறந்த எட்டாம் நாளிலே, அதின் நுனித்தோல் நீக்கப்பட்டு அது விருத்தசேதனம் பண்ணப்படுகிறது. அந்த விருத்தசேதன முறைமையே அந்தப் பிள்ளையை ஒரு ஆணாக மாற்றுகிறது.

அதைப் போலவே தேவன் ஒரு மனிதனைத் தன் கைக் கோடாரியாய் உருவாக்குமுன், அவனது புறம்பான மனித மாம்ச சுபாவங்களை வெட்டிச் சீராக்கி செதுக்கியெடுத்து, அவனது உள்ளான ஆவியை அனலாக்கித் தழலாக்க வேண்டியுள்ளது. இது ஒரு மிக மிக சீரியஸாக எடுத்தே ஆகவேண்டிய ஒரு காரியம்..

தண்டாயுதத்தின் மரக் கைப்பிடிப்பகுதி

மாம்ச சுபாவங்களை சீவிச் செதுக்கியெடுக்கும் பகுதியை முதலாவது பார்ப்போம்..

இங்கேதான் மிகப்பெரிய பிரச்சனையே இருக்கிறது.
மரக்கட்டை வெட்டியெடுக்கப்பட்டு,
சீவிச்செதுக்கப்படுவது போன்று, மனிதனை
உபயோகப்படுத்துவதற்கு ஆயத்தமாக, தேவன் அவனது
வாழ்க்கையில் அவனது புறம்பான பகுதியை
எப்படியெல்லாம் சீவிச் செதுக்கி செப்பனிடுகிறார்
என்பதை ஒரு பார்வை பார்ப்போம்..

கலாத்தியர் 5 : 19-21 சொல்கிறது..

மாம்சத்தின் கிரியைகளாவன..
விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விககிரக
ஆராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள்,
வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள்,
பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள்,
கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே..

இங்குதான் பிரச்சனையே ஆரம்பிக்கிறது..

மரமும் இரும்பும் இருக்கிறது..
ஆனால் அவைகள் இன்னும் தேவைக்கேற்ப சரி
செய்யப்படாத நிலையிலேயே உள்ளது.

தேவன் தமது கரங்களில் ஆயுதமாய் எடுத்து உபயோகிக்க முடியவே முடியாத அளவு, தேவ பிள்ளைகள், தேவ மனிதர்கள் மற்றும் ஊழியர்களின் வாழ்வில் சரியில்லாத, இன்னும் சரி செய்யப்படாத அநேகக் காரியங்கள் இன்னும் ஆங்காங்கே ஒழுங்கின்றித் தொங்கிக் கொண்டிருக்கின்றன..

"உன்னை நான் உபயோகப்படுத்தும் முன்பாக, நான் உன்னை வெட்டித் திருத்தி, சீவிச் செதுக்க நீ உன்னையே என்னிடம் முழுமையாக ஒப்புக் கொடு.. என்று அவர் சொல்கிறார். "உன்னை முழுவதும் என்னிடம் விட்டுக் கொடு.. நான் உன்னை எப்படியெல்லாம் அளவில்லாமல் அபிஷேகிக்க முடியுமோ அப்படியெல்லாம் அபிஷேகிக்க முடியாதபடி என்னைத் தடைசெய்யும் சில காரியங்களை நான் உன்னிலிருந்து எடுத்துப் போட, உன்னில் கிரியை செய்ய உன்னை முழுவதுமாக எனக்கு அர்ப்பணித்துவிடு !"

"திறம்படச் செயல்பட நீ எனக்குத் தகுதியுள்ளவனாகும்படி, சில காரியங்களை உன்னிலிருந்து நான் வெட்டியெறியும்படி நான் உன்னில் முழு சுதந்திரத்தோடு கிரியை செய்ய உன்னையே நீ எனக்குப் பரிபூரணமாகக் கொடுத்துவிடு !" என்று அவர் உனக்குச் சொல்ல விரும்புகிறார்..

உங்களுக்குத் தெரிந்தபடி வெட்டுவதும் சீவுவதும் செதுக்குவதும் பல நேரங்களில் வலி நிறைந்தது தானே !

கர்த்தர் சொல்லுகிறார்.." நீ விருத்தசேதனம் பண்ணப்படாதவரை, மாம்சத்தோல் வெட்டி வீசப்படாதவரை, நீ இப்போது இருக்கும் இந்த விருத்தசேதனமும் அனலுமற்ற நிலையில் நான் உன்னை உபயோகிப்பது கூடாத காரியம்.."

"நீ ஒரு உபயோகமான ஆயுதமாகும் வரை நான் உன்னை வெட்டிச் சீவி, தேய்த்து சிராய்த்து நெருப்பினூடே நுழைத்து எடுத்துச் செல்வது உனக்கு அவசியத்திலும் அவசியம்.."

கர்த்தர் சொல்லுகிறார்.." இங்கே பார் !ஆயத்தமாயிருக்கும் எல்லாருமே உபயோகிக்கப்படக்கூடியவர்கள் அல்ல.. "இதோ இருக்கிறேன் ஆண்டவரே ! என்னை பயன்படுத்தும்.." என்று சொல்லுகிறவர்கள் அநேகர்..

ஆனால் கர்த்தர் சொல்லுகிறார்.."என் தேவைக்கு நீ இங்கே இருப்பது உண்மைதான்.. ஆனால் உபயோகப்படுத்தப்படும் நிலையில் நீ இருக்கிறாயா ? உன் மேல் நான் என் கைவைக்க.. நான் உன்னைத் தொட.. உன்னில் நான் என்னவெல்லாம் எனக்கு வேண்டியபடி செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து கொள்ள உன்னையே என்னிடம் விட்டுக் கொடுக்க நீ ஆயத்தமா ?" அதுதான் கேள்வி..

ஏசாயா தீர்க்கதரிசி சொன்னான்..

"உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டேன்..அவருயை வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது.." (ஏசா 6:1)

அதே ஏசாயா, பிறகு சொன்னான்..

"ஐயோ நான் அதமானேன்..நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்..

அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத்தழலை எடுத்து.. அதினால் என் வாயைத் தொட்டு: இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி உன் பாவம் நிவிர்த்தியானது என்றான்..(ஏசா 1:5-7)

ஒன்று, அவன் முதலில் சொன்னது.. அடுத்தது அவன் பிற்பாடு, தான் பதப்பட்டுப் பக்குவப்பட்ட பிறகு சொன்னது..

ஆனால் முதல் மூன்று வசனங்களிலும் அவன் ஏற்கனவே தீர்க்கதரிசனம் சொல்லிக் கொண்டே வந்தாலும், எட்டாம் வசனத்தின் இடத்துக்கு வரும்போது தான் "யாரை நான் அனுப்புவேன் ? யார் நமது காரியமாய்ப் போவான் ? என்ற கர்த்தருடைய சத்தத்தை அவன் முதல்முறையாகக் கேட்கிறான்..

நீ ஊழியத்தில் இருக்கிறாய்..உண்மை தான்.. ஆனால் தேவனால் அடையாளம் காணப்படாத, அவரால் அங்கீகரிக்கப்படாத ஒருவனாகவே அவரது பார்வையில் நீ இருக்கிறாய் என்பதை உன்னையே உன்னால் கற்பனை செய்து பார்க்க முடியுமா ?

உன்னைத் தன் ஊழியத்தில் வைத்துக்கொண்டே, உன்னை விட்டு விட்டுத் தமது வேலைக்குத் தன் பார்வைக்கு சரியான வேறே யாரையோ அவர் தேடிக்கொண்டிருக்கும் ஒரு நிலையை உன்னால் நினைத்துப் பார்க்க முடிகிறதா ?

நீ இன்னும் சரி செய்யப்பட்டு புடமிடப்படாததாலேயே, உருவாக்கப்பட்டு சரியாக வடிவமைக்கப்படாததாலேயே அவர் உன்னை விட்டு விட்டு வேறுயாரையோ தேடிக் கொண்டிருக்கிறார்..

எல்லா மரமும் எல்லா உலோகமுமே தேவனின் கரங்களில் போராயுதமாய் ஆகி விடுவதில்லை என்பதை தயவுசெய்து குறித்து வைத்துக் கொள் ! அதற்கு ஒரு பணிப்படுத்தப்படுதலும், உருவேற்றப்படுதலும், வடிவமைக்கப்படுதலும், கூராக்கப்படுதலும் நடந்தே ஆக வேண்டும்..

வெட்டியெறியப்பட வேண்டிய அநேகக் காரியங்களை வேதம் பட்டியலிட்டாலும் அவற்றில் சிலவற்றை மட்டுமே, வரும் அத்தியாயங்களில் நான் குறிப்பிட விரும்புகிறேன்..

சீவிச்செதுக்கி தேய்த்து இழைத்து எடுக்கப்பட வேண்டியவை..

CHAPTER - 14

1. அகந்தையும் ஆணவமும்..

எல்லாராலும் அறியப்படப் போராடாதே ! அறிந்துகொள்ளப் போராடு ! அறிந்து புரிந்து தெரிந்து கொள்வாயானால், தானாகவே அறியப்படுவாய் !
- Dr. Paul Enenche

மாம்சத்திலிருந்து முதலாவது நீக்கப்பட வேண்டிய நுனித்தோல்.. அகந்தையும் ஆணவமுமே !

தேவனுடைய பார்வையில் ஒரு தேவ மனிதனோ, ஊழியனோ உபயோகமுள்ளவனாகக் காணப்பட வேண்டுமானால், மாம்சத்தின் சுபாவங்களான இவை இரண்டும் அவனது வாழ்க்கையிலிருந்து வெட்டியெறியப்பட வேண்டும்.

அன்பானவர்களே ! சுவிசேஷ ஊழியர்களின் வாழ்க்கையில் தான் எத்தனை அகந்தை ! எத்தனை மேட்டிமை ! எத்தனை தற்பெருமை ! எத்தனை தற்புகழ் !

நாம் காணும், கேட்கும் சாட்சிகளில் தான் எத்தனை சுய மகிமையும் சுய தம்பட்டமும் ! "இப்படிப்பட்ட அகந்தையும் ஆணவமும், நெஞ்சு உயர்த்தலும் இருக்கும் வரை நான் உன்னை உபயோகப்படுத்தவே முடியாது.." என்று தேவன் சொல்லுகிறார்..

லூசிபரின் விழுதலுக்குக் காரணமென்ன ? பெருமை !

நேபுகாத்நேச்சாரைப் பூமியின் புல் தின்ன வைத்தது என்ன ? பெருமை !

ராணி வஸ்தி தன் பட்டத்தை இழக்கக் காரணம் என்ன ? "சபையின் முன்னே வா !" என்ற கணவனுக்கு, "வரமாட்டேன்" என்று பதிலளித்த இறுமாப்பு !

அப்சலோமைக் கொன்றது என்ன ? பெருமை !

தாங்கள் கனப்படுத்தப்படவில்லை என்றும், கண்டுகொள்ளப் படவில்லை என்ற காரணத்தினாலேயே கோபத்தின் உச்சிக்குச் செல்பவர்கள் எத்தனை பேர் !

தேவனால் மிக வல்லமையாய் அபிஷேக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட ஒரு ஊழியர் உண்டு. அவர் அபிஷேகத்தில் நிறைந்து ஜெபித்தால் முடக்குவாதம் பக்கவாதம் பறந்து போகும். ஒரு நாள், ஏதோ ஒன்று அவர் தலைக்கு ஏற, "இந்த உலகமே என் காலடியில்.." என்றார் அவர். அதுதான் அவர் நடத்திய கடைசி Crusade. அதோடு அவர் விழுந்ததுதான். அவர் துரத்திய முடக்குவாத, பக்கவாத ஆவிகள் அனைத்தும் ஒருசேர வந்து அவரைத் தாக்க, தானே ஒரு வீல் சேருக்குள் முடங்கிப் போனார்.. பிறகு அந்த மனிதன் எழும்பவே இல்லை..

"வருகிற எலியா நான் தான்" என்று தன்னைப் பிரகடனப்படுத்த, தன் பின்னே ஒரு லட்சம் பேரை சிக்காகோவிலிருந்து நீயூயார்க் நகருக்கு அணிவகுத்து அழைத்துச் சென்ற ஜாண் அலெக்ஸாண்டர் டோவிக்கு நடந்ததும் அதுவே ! அவர் விரட்டியடித்த அத்தனை ஆவிகளும் அவருக்குள்ளே திரும்பப் புகுந்தது போலிருந்தது அவரது பின்னிலைமை !

அங்கீகாரம் பெற அலையாதே ! தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடப்பட ஓடாதே ! கண்டுகொள்ளப்படாத போதும், ஓரங்கட்டப்படும் போதும் குமுறாதே

எல்லாராலும் அறியப்படப் போராடாதே ! அறிந்து கொள்ளப் போராடு ! அறிந்து புரிந்து தெரிந்து கொள்ளும் போது தானாகவே நீ அறியப்படுவாய் !

“தன் மகிமையை வேறு ஒருவனுக்கும் கொடேன்" என்று சொல்லும் தேவன், உன்னை சீவிச் செதுக்க நினைக்கிறார். நீ ஒரு தண்டாயுதமாய் உருவாக்கப்படுமளவும் அவர் உன்னைச் சீவியெடுக்க நினைக்கிறார்..

கர்த்தரிடம் கேள் ! "ஆண்டவரே நீர் என்னை பயன்படுத்த முடியாதபடி என்னில் தடையாய் இருப்பது என்ன ? எவை எவற்றையெல்லாம் என்னிலிருந்து வெட்டி எறியவேண்டுமோ, எல்லாவற்றையும் வெட்டி எறிவீராக " என்று சொல் !

2.பொறாமையும் போட்டி மனப்பான்மையும்

மற்றவர்களுடைய வெற்றியையும் முன்னேற்றத்தையும் கண்டு உன்னால் களிகூர முடியாவிட்டால், தேவனிடத்தில் உனக்குப் பங்கில்லை..
- Dr.Paul Enenche

அடுத்து வெட்டியெறியப்பட்டு செதுக்கப்படவேண்டியது, பொறாமையும் போட்டி மனப்பான்மையுமே !

அதாவது மற்றவர்களை விட மேலானதையும், உயர்வானதையும் அவர்கள் செய்யாததையும், தான் செய்து காட்டி, மற்றவர்களைத் தன்னைவிட குறைவான நிலையிலேயே எப்போதும் வைத்திருக்கத் துடிப்பது..

எனக்குத் தெரிந்த சகோதரர் ஒருவர், தான் பிரசங்கிக்கச் சென்ற போது தனக்கு நேர்ந்த அனுபவத்தை சொன்னார்.. "எல்லாருடைய பேர் புகழையெல்லாம் நீங்களே அள்ளிக்கொண்டு போய் விடுகிறீர்கள்.." என்று அங்கிருந்தவர்கள் தன் மேல் பொறாமை கொண்டு சொன்னதாகச் சொன்னார்..

நமக்குள் தான் எத்தனை போட்டி ! எத்தனை பொறாமை !

புவியியலுக்கும் வேதியியலுக்கும் என்ன போட்டி ? மருத்துவத்துக்கும் வக்கீல் தொழிலுக்கும் என்ன பொறாமை ? அதது அதினதின் வேலையைச் செய்கிறது.. நட்சத்திரமும் நட்சத்திரமும் இடித்துக் கொள்ளும் அளவு வானமும், யானைகள் இரண்டு நெருக்கி உரசி நடந்து செல்லும் அளவு காடும் இத்தனை சிறியதாகிப் போனதோ ?

"உன் சர்ச் பெருசு ! நானும் என் சர்ச்சைப் பெருசாக்குவேன்.. நீ ஒரு கார் வாங்கினியா ? நானும் வாங்குவேன் ! நீ வெளிநாட்டுக்குப் போய் வந்தியா ? நானும் போய்ட்டு வர்றேன் பார் !" இப்படிப்பட்ட நினைப்பே ஊழியத்துக்குக் கேடு !

ஒருவர் சொல்லுவார், "இந்த வாரம் எங்கள் சபையில் தேவன் எஙகளுக்கு ஆயிரம் புதிய ஆத்துமாக்களைத் தந்தார்.. அதைக் கேட்ட அடுத்தவர், " நாங்க கூட இந்த வாரம் பெரிய நிலம் ஒன்றை வாங்கினோம்.." என்பார். அதாவது ஒருவரை விட மற்றவர் தன்னை உயர்த்திக் காட்டிய ஆக வேண்டும் என்ற மனப்பான்மை..

மற்றவர்களுடைய வெற்றியையோ, முன்னேற்றத்தையோ, சந்தோஷத்தையோ, சாட்சியையோ காது கொடுத்துக் கேட்பதைக்கூட அநேகர் விரும்புவதில்லை.. அப்படிப்பட்டவர்களுக்கு ஊழியத்தில் எதிர்காலமுமில்லை.. பிரகாசமும் இல்லை.. தேவனிடத்தில் பங்குமில்லை.. இப்படிப்பட்ட சுபாவம் வெட்டி எறியப்பட்டே ஆக வேண்டும் !

ஒருவருக்கு திருமணம் ஆகிறதா ? இன்னொருவருக்கு முகம் கோணுகிறது.. ஒருவருக்குப் படிப்பில் வெற்றியா ? மற்றவர்களுக்கு அதில் மகிழ்ச்சியில்லை..

1947 வாக்கில் அமெரிக்காவில் ஆரம்பித்த சுகமளிக்கும் எழுப்பதலைக் கொன்றதே இந்தப் போட்டியும் பொறாமையும் தான் ! 1959 வரை நீடித்த அந்த எழுப்புதலுக்குள் இந்தப் போட்டி பொறாமையின் ஆவி என்று உட்புகுந்ததோ, அன்றே அது அதை மென்று தின்று போட்டது. A.A.Allen, வில்லியம் பிரன்ஹாம், ஜேக் கோ, க்ளிஃப்ட்டன் எரிக்சன், வெல் மார் கேட்னர், லிராய் ஜென்க்கின்ஸ், ஓரல் ராபர்ட்ஸ், டாமி ஹிக்ஸ், மற்றும் T.L.ஆஸ்பார்ன் போன்றோரின் நாட்களின் எழுப்புதலை நான் சொல்லுகிறேன்..

ஒருவரது மீட்டிங்கின் கூடாரம் பத்தாயிரம் பேரைக் கொள்வதாக இருந்தால், அடுத்தவர் பத்தாயிரத்து இருநூறு பேர் அமரும்படி கூடாரமடிப்பார்.. யார் கூடாரம் ஊரிலேயே பெரியது என்பது தான் அவர்களுக்குக் கவலை ! கடைசியாக ஆவியானவர் அவர்களது கூடாரங்களை விட்டு சத்தமின்றி வெளியேற, அதிலிருந்த ஒரு சிலரே இவைகளுக்குத் தப்பி, தங்கள் ஓட்டத்தை ஜெயமாய் முடித்தனர்..

தேவனையும் உன்னையும் தவிர, உன்னை நன்றாக அறிந்தவர் வேறு யாருமல்ல. உன்னோடு உடன் இருப்பவரோ அல்லது வேறு யாரோ, அவர்களது முன்னேற்றம் உன்னைக் காட்டிலும் வேகமாக உயர்வதை நீ காணும்போதோ கேட்கும்போதோ உனக்குள் ஏதோ பகை, புகை போல கிரியை செய்வதை உன்னால் உணர முடியும். அதை சாகடித்து விடு !

அந்தக் கசப்பின் வேரை ஜெபத்தில் சுட்டெரித்து அந்த நண்பருக்காக ஜெபிக்க ஆரம்பி !
தன் இலக்கை அவர் அடைய தேவன் அவருக்கு உதவி செய்யும்படி ஜெபி ! வேறொருவர் தன் இலக்கை அடைய நீ ஜெபிப்பாயானால், நீயே உன் இலக்கை அடைய, நீ அறியாமலேயே முன்னேறுகிறாய் என்பதே உண்மை !

இப்போது பார் ! மரம் இருப்பது உண்மை.. அதிலுள்ள கட்டை இருப்பது உண்மை !ஆனால் அதன் கல்லான,கட்டையானகடினத்தனத்தால் அது பிரயோஜனமின்றிக் கிடைக்கிறது. அதைப் போலவே சிலவற்றை தேவன் உன்னில் சீவியே ஆக வேண்டியுள்ளது..

3. கசப்பும் மன்னியாமையும்

மக்களின் மனங்களிலிருந்தும் வாழ்விலிருந்தும் தேவன் நறுக்கி எறிய வேண்டிய மூன்றாவது ஒரு காரியம் கசப்பும் மன்னிக்காத தன்மையுமே !

கசப்பு என்ற மாம்சக்கிரியை அழிக்கப்பட்டே ஆக வேண்டும். சிலர் ஒருவர் ஒருவரோடு முகம் கொடுத்துப் பேசுவதே இல்லை. ஆனால் பாடுவதோ, "வல்லமை தேவை தேவா ! வல்லமை தாரும் தேவா ! இன்றே தேவை தேவா ! இப்போ தாரும் தேவா !"
“ஆவியாலே நிரப்பும் அபிஷேகத்தால் மூடும் ! " என்று குதியாய்க் குதிப்பார்கள்..
ஆனால் அவர்களைப் பார்த்து, " அபிஷேக சால்வை உங்கள் மேல் விழாது " என்று தேவதூதர்கள் வித்தியாசமாய்ப் பாடுவார்கள்..

ஊழியம் செய்பவர்கள் தான்.. பிரசங்கிப்பவர்கள் தான்.. ஆனால் ஒருவரையொருவர் முகத்துக்கு முகம் பார்த்துக் கூடப் பேசிக்கொள்ள மாட்டார்கள்.. இருதயத்தில் கசப்பை வைத்துக் கொண்டு ஒருவரை ஒருவர் பார்க்காத மாதிரி போவார்கள்..

இப்படிப்பட்டவர்கள் வைரம் பாய்ந்த மரம்.. இதை வெட்டி வெட்டிச் சீவி எடுக்க வேண்டும் !

கேட்டால் சொல்வார்கள்.. "அவர் என் சபையின் ஆத்துமாவைக் கொண்டு போய்விட்டார்.. என் ஆட்டைத் திருடி விட்டார்.." என்பார்கள்.

நாம் எத்தனை முறை தேவனைத் துக்கப்படுத்தியிருப்போம் ! எத்தனை முறை அவரது இருதயத்தை உடைத்திருப்போம் ! ஆண்டவர் நம்மை மன்னிக்கவில்லையா ? "எங்களுக்கு மன்னியும்" என்று ஜெபிக்கக் கற்றுத் தந்தாரே !

ஒரு மனிதனுக்கு விரோதமான கசப்பை நான் எனக்குள் கொண்டிருந்தால், நான் அந்த மனிதனுக்கு விரோதமாய் அல்ல, எனக்கு விரோதமாய் நானே கசப்பை வளர்த்துக் கொண்டிருக்கிறேன்..

கசப்பை வைத்துக்கொண்டே ஒருவருக்காக நான் ஜெபித்தால் அந்த ஜெபத்தால் பிரயோஜனமில்லை. ஆனால் மனமகிழ்ச்சியாக ஜெபித்தால் அதுவே என் ஆசீர்வாதத்துக்கு விதையாய் விழுந்து கொண்டிருக்கும்!

ஒவ்வொரு நாளும் தேவ சமூகத்தில் விழுந்து, தேவன் உன் இருதயத்தைக் கழுவும்படியாகவும், வாழ்வின் மறைவிடங்களில் ஒளிந்திருக்கும் அந்த மன்னிப்பின்மையையும் கசப்பையும் உனக்குக் காட்டும்படி ஜெபி !

"ஆண்டவரே, இதோ நான் இருக்கிற வண்ணமாய் என்னைத் தருகிறேன்.. என் நுனித்தோலை, என் வாழ்வில் தேவையற்றவைகளை நீக்கி, ஆங்காங்கே நீட்டிக்கொண்டிருக்கும் செதில்களையும் பட்டைகளையும் செதுக்கியெடுக்க எனக்கு உதவி செய்யும் !" என்று ஜெபியுங்கள்.

ஒருவேளை, இப்போது நீ சிலரோடு ஒப்புரவாக வேண்டியிருக்கலாம். உன்னையும் அறியாமல், நீ செய்வது எல்லாமே சரி என்று நீ நினைத்துக் கொண்டிருக்கலாம். ஒப்புரவாக வேண்டியவர்களோடு ஒப்புரவாகி, சரி செய்ய வேண்டியவைகளை உடனடியாக சரி செய்து உன்னை நீயே விடுவித்துக்கொள் ! தேவ கரங்களில் வல்லமையான கருவியாய் இருப்பாய் !

4. உண்மையும் நேர்மையின்மையும், மற்றும் இரண்டகமும் மாய்மாலமும்..

ஜனங்களின் வாழ்விலிருந்து இழைத்துச் செதுக்கி எடுக்க வேண்டிய நான்காவது ஒரு பகுதி, அவர்களிலுள்ள உண்மையும் நேர்மையுமின்மை மற்றும் இரண்டகமும் மாறுபாடுமான மாய்மாலத் தன்மையே !

இது உங்கள் மாறுபாடுள்ள பேச்சு அல்லது கூட்டிக் குறைத்துப் பேசும் தன்மை..

ஒருவேளை நீங்கள் சொல்லும் ஒரு காரியம் பொய்யாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அது மிகைப்படுத்தப்பட்டுச் சொல்லப்படுவதால், அதுவும் பொய்யே ஆகும்.

யாரோ ஒருவர் உங்களை,"சாப்பிடுங்க பிரதர் !" என்று சொல்ல, நீங்களோ, "இப்ப இல்ல.." என்று சொல்ல.. அவர் கேட்கிறார்," நீஙகள் உபவாசமா ?" "ம் ம்.." என்று சொல்லி நீங்கள் மழுப்ப, நீங்கள் உபவாசம் பண்ணவுமில்லை.. அதே நேரம் அடுத்தவரை நீங்கள் உபவாசம் இருப்பது போல உங்களையே ஆவிக்குரியவர்களாக அவர்களிடம் காட்டிக் கொள்ள நினைக்கிறீர்கள். இது ஒரு பொய் ! மாய்மாலம் !

"உங்களைப் புகழ்ந்து பேசும் ஒருரே உங்களைப் பற்றி அவதூறு கிளப்பி விடுவார்" என்றார் ஆபிரகாம் லிங்கன். "உங்களைப் போல ஒருத்தரை நான் பார்த்ததே இல்லை.." என்று சொல்லும் நபரே உங்களைக் குறித்து தூற்றிக்கொண்டும் திரிவார் என்பதை மறவாதீர்கள்.

தேவ ஆவியானவர் சத்தியத்தின் ஆவியானவர். சரியில்லாத விபரங்களையோ, காரியங்களையோ சாட்சியாகச் சொல்லாதிருங்கள். தேவன் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

சபையிலுள்ள தேவை ஒன்றுக்காக ஜனங்களிடம் நீங்கள் கேட்க வேண்டுமானால், " கர்த்தருடைய ஆவியானவர் இதை உங்களிடம் சொல்லச் சொன்னார்.." என்றெல்லாம் சுற்றி வளைக்காமல் உள்ளதை உள்ளபடி உள்ளத்தில் உள்ளபடி சொல்லுங்கள். உங்கள் எண்ணங்களையும் செயல்களையும் சீர்துக்கிப் பார்க்கும் தேவன், நீங்கள் உங்கள் ஜனங்களோடு செய்பவைகளையும் நிறுத்துப் பார்க்கிறார் !

5. ஒழுக்கக்கேடும் பரிசுத்தக்குலைச்சலும் அநாகரீக அசுத்தங்களும்..

தன்னிலே ஏதோ ஒரு பெலவீனத்தைக் கொண்டிருந்து, தேவன் தன்னை விடுதலையாக்க மாட்டாரா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் மனிதன் ஒருவன், தன் பெலவீனத்தை ஒத்துக்கொண்டு அதிலிருந்து விடுதலை பெற வேண்டும்..
-Dr.Paul Enenche

கடைசியாக, ஒரு மனிதனிலிருந்து வெட்டி எறியப்பட வேண்டியது ஒழுக்கக்கேடும் பரிசுத்தக்குலைச்சலும் அநாகரீகமான அசுத்தங்களுமே !

இதில் பல்வேறு விதங்கள் உண்டு. மணமானவரோ ஆகாதவரோ, மணமானவரோடோ மணமாகாத ஒருவரோடோ தவறான உறவு கொள்வது விபச்சாரம். ஆணோடு ஆண் அவலட்சணமானதை நடப்பித்து,பெண்கள் தங்கள் சுபாவ அநுபோகத்தை சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றி, தங்களைப் போல பெண்களோடே நடப்பிப்பது விபச்சாரத்திலும் விபச்சாரம்.. அபச்சாரம்.இதைத் தவிர, தங்களுக்குத் தாங்களே அனுபவித்துக் கொள்ளும் சுய இன்பமும் இதில் அடங்கும்.

இதைச் செய்பவர்கள் அசுத்த ஆவிகள் தங்களுக்குள் புகுந்து கொள்வதற்குத் தங்களை அறியாமலேயே இடம் கொடுக்கிறார்கள். இது தவிர ஆபாச படங்களும் இன்டர்நெட்டும் கணக்கிலடங்கா..

"நான் உன்னை எடுத்து உபயோகப்படுத்த நீ விரும்புவாயானால், இவைகள் உன்னிலிருந்து வெட்டி வீசி எறியப்பட வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்..

தன்னிலே ஏதோ ஒரு பெலவீனத்தைக் கொண்டிருந்து, தேவன் தன்னை விடுதலை இயக்க மாட்டாரா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் மனிதன் ஒருவன், தன் பெலவீனத்தை ஒத்துக் கொண்டு அதிலிருந்து விடுதலை பெற வேண்டும்..

அநாகரீகமாய், அடுத்தவருக்கு இடறலாய்த் தங்கள் உடலைக் காட்டி உடை உடுத்துவது அடுத்த ஒழுக்கக்கேடு. அவர்கள் விபச்சாரம் செய்யாமல் இருக்கலாம், ஆனால் மற்றவர்களுக்கு இச்சையைத் தூண்டி அவர்களை இடறப்பண்ணி விபச்சாரத்தில் விழ வைக்கும் கண்ணியாய் அவர்கள் இருப்பது வெட்டவெளிச்சம்.

நீ இப்படி ஒரு கவர்ச்சிகரமான ஆடை அணிந்தாய்.. யாரோ ஒருவன் உன்னை இச்சித்தான்.. அவனால் உன்னோடு பாவம் செய்ய முடியாமல், வேறு யாருடனோ உன்னை நினைத்துக் கொண்டே பாவம் செய்தான்.. ஆகவே அவனது பாவத்துக்கு நீயும் உடன் பங்காளியாயிருந்தாய் ! அவனது விபச்சாரத்துக்கு நீயும் துணை போனாய் !

மணமான ஆண்கள் அடுத்தவர் மனைவியோடு பழகுவதில் மிகுந்த கவனம் தேவை. மணமாகாதவர்களும் மணமாகாதவர்களோடே மணமானவர்கள் போல தவறாக நடக்கவே கூடாது.

மற்றவர்கள் உன்னை வேறு விதத்தில் தொட்டுப் பேசுவதை அனுமதியாதே ! நீயும் உனக்கு இடம் கொடாதே ! மற்றவர்களின் பார்வையாலே அறியலாம், யார் எப்படிப்பட்டவரென்று !

பாலியத்துக்குரிய இச்சைகளிலிருந்து விலகி ஓடு !

இன்றே அறிக்கையிடு !
"ஆண் புணர்ச்சி, பெண் புணர்ச்சி,
சுய புணர்ச்சியின் ஆவியே ! ஆபாசப் படங்கள்,
வீடியோக்கள் மூலமாய்க் கிரியை செய்யும் ஆவியே !
சகல அதிகாரத்தோடும் இயேசுவின் நாமத்தில் உன்னை
சபிக்கிறேன் ! "போ, இயேசுவின் நாமத்தில் " என்று சொல் !

கோடாரி முனை

CHAPTER - 15

உனக்குள்ளே இல்லாத ஒன்று உனக்குள்ளிருந்து வெளிவர வாய்ப்பில்லை.. இருதயத்தின் நிறைவினால் மட்டுமே வாய் பேசும் ! உன் ஆவி அக்கினியால் தகதகத்துக் கொண்டிருக்குமானால், உன் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அபிஷேகிக்கப்பட்ட தீக்கங்குகளாய், நெருப்புத் துண்டங்களாய் வெளிவந்து விழும் !
Dr. Paul Enenche

நாம் ஏற்கனவே பார்த்தபடி, கோடாரியின் முதல் பகுதியான மரம், சீவிச் செதுக்கப்பட்டு சரி செய்யப்பட வேண்டும். அதே நேரத்தில் அதின் இரண்டாவது பகுதியான இரும்பு, நெருப்பிலிடப்பட வேண்டும்..

நீ தேவனுடைய அபிஷேகத்தை என்ன நோக்கத்துக்காகப் பெற்றுக்கொள்ள விரும்புகிறாய் என்றும், அது தேவனுக்குப் பிரியமில்லாத, தவறான ஒரு நோக்கமாய் இருந்தால் அப்படிப்பட்ட யாவற்றையும் சுட்டெரித்து, உன் ஆவியை நெருப்புப் பந்தாக்கும் அக்கினி ஸ்நானம் ஒன்று உனக்கு அவசியத்திலும் அவசியம் !

தேவனுடையது அல்லாதது எது எதுவோ அவை எல்லாவற்றையும் அது பொசுக்கிச் சுட்டெரித்து உன்னைப் புது சிருஷ்டியாக்கும் !

1. தேவன் உன் ஆவியை அனலாக்கும்போது, ஒரு தெய்வீக வேட்கையும், தேவனுக்கேற்ற ஒரு பரிசுத்த வெறியும் உன்மேல் இறங்கும் !

தேவன் உன் ஆவியை அனலாக்கும்போது, நீ ஊழியம் செய்யும் விதத்திலும், சுவிசேஷம் அறிவிக்கும் பாணியிலும், உன் அன்றாட கிறிஸ்தவ வாழ்வை நீ வாழும் விதத்திலும் ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட பரிசுத்த அனலையும், அலையையும், வேட்கையையும் நீயே காண்பாய் !

அக்கினி பிறப்பிக்கும் அக்கினியின் உற்பத்தி அதுவே ! வேட்கையும் வெறியும் வேகமுமே அக்கினியின் உடன்பிறப்புக்கள் !

அதாவது இந்த வேட்கையும் தாகமும் உத்வேகமும் எங்கே இல்லையோ, அங்கே தண்டாயுதம் தயாரிப்பது இயலாத காரியம் !

2. தேவன் உன் ஆவியை அனலாக்கும் போது ஒரு உற்சாக ஆவியை அவர் உன்மேல் ஊற்றுகிறார்..

"பிரசங்கிக்கும் ஊழியனே ! நீ பிரசங்கிக்கும் பிரசங்கத்தின் மீது உனக்கே ஒரு உள்ளான உற்சாகம் இல்லாதிருக்குமானால், அப்போதே நீ பிரசங்க மேடையைக் காலி செய்துவிட்டுக் கீழிறங்கி விடலாம்.." என்றார் சார்ல்ஸ் ஃபின்னி..

தேவ அக்கினி உற்சாக ஆவியை உன்னில் இறக்குகிறது.. தீயாய் நிற்கும் ஒருவன், துடிப்பும் துள்ளலும் துரிதமுமாய் இருப்பான் ! அவனது நம்பிக்கையே அலாதியானது! "ஒருவேளை இப்படி இருக்கலாம், அப்படியும் இருக்கலாமென்று யோசிக்கிறேன்.." என்றெல்லாம் அரைகுறையாய்ப் பேசிக்கொண்டிராமல், "உடனே போய் அத்தேசத்தை சுதந்தரித்துக் கொள்வோம்.." என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்லுவான் !

மனச்சோர்வோ, மன உளைச்சலோ அவன் அகராதியிலே கிடையாது. அப்படி ஒன்று இல்லாத அளவு, அவனது அக்கினி, நெருப்பு நாவுகளாய்ப் பற்றியெரிந்து கொண்டிருக்கும் ! அவனது ஆவி, தேவ அக்கினியால் நெருப்பிலிடப்பட்டுக் கனன்று கொண்டிருக்கிறபடியால், அவன் உற்சாகத்தாலும், உத்வேகத்தாலும் தன் ஆவியில் தகித்துக் கொண்டிருப்பான் !

3. தேவன் உன் ஆவியை அனலாக்கும் போது அது உன்னை ஓய்ந்திருக்கவோ, அமர்ந்திருக்கவோ, அயர்ந்திருக்கவோ விடவே விடாது !

ஒரு மனிதன் மேல் தேவ அக்கினி இறங்கும் போது, அது அவனை சும்மாயிருக்கவோ, சோம்பியிருக்கவோ, உட்கார்ந்திருக்கவோ ஒட்டாமல், ஒரு பரிசுத்த இளைப்பாறுதலின்மையையும் (restlessness), ஓய்வின்றி ஓடும் உந்து சக்தியையும் அவனுக்குள் உள்ளிறக்கிக் கொண்டே இருக்கும் !

உன் ஆவியில் உண்டான இளைப்பாறுதலின்மையால் (restlesness) நீ அயர்ந்து, குளிர்ந்து, தேங்கி, ஊறி நாறிக் கிடக்க மாட்டாய் ! ராஜ்ய மேன்மைக்காக ஏதாவது ஒன்றை செய்து கொண்டே இருப்பாய்!

இயேசு சொன்னார்.. "பரிசுத்த ஆவி உங்கள் மேல் வரும்போது நீங்கள் பெலனடைந்து.... சாட்சிகளாய் "இருப்பீர்கள்"..!"

நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையாலும் அபிஷேகித்த போது அவர் செய்தது என்ன? சோம்பி உட்கார்ந்தாரோ ? அவர் நன்மை செய்கிறவராய் "சுற்றித் திரிந்தார்.." அவருக்குள் இருந்த இளைப்பாறுதலின்மை அவரை அமர்ந்திருக்க விடவில்லை..

ஐஸ் கட்டியைத் தண்ணீராய் மாற்றுவது எது ? வெப்பம் ! வெப்பமூட்டப்படும் போது அல்லது சூடு ஏறும் போது, அதிலுள்ள நீர்க்கூறுகளின் அசைவற்ற தன்மையில் ஏதோ ஒரு அசைவு உண்டாகி, அவைகள் திட உருவிலிருந்து உருகித் திரவமாய் மாறுகிறது..

அந்தத் தண்ணீரை இன்னும் சூடேற்றுங்கள்.. அந்தச்சூடு அதின் உட்கூறுகளைக் கொதி நிலைக்குக் கொண்டு வந்து நீராவியாய் மாற்றி காற்றோடு கலந்துவிடச் செய்கிறது. இன்னும் அதைச் சூடேற்றுங்கள்.. அவற்றுக்குள் இன்னும் இன்னும் என்று ஏதோ ஒரு வேதியல் உருமாற்றம் கொண்டு அவை எலக்ட்ரான்,நியூட்ரான், ப்ரோட்டான் என்று கரைந்து அணுக்களோடு அணுக்கமாகி விடுகிறது.. இதே தான் அனலூட்டப்பட்ட மனிதனுக்குள்ளும் நடக்கிறது !

நீ சுமந்து திரியும் அக்கினியின் அளவே உன் பரிசுத்த படபடப்பையும், கட்டுக்கடங்கா வேகத்தையும் நிர்ணயிக்கிறது. அதே படபடப்பும் வேகமும் ஓய்வின்மையுமே உன் ஊழியத்தின் தாக்கத்தை நிர்மாணிக்கிறது !

நம்மைச் சுற்றி எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவே முடியாத அளவு, நம்மில் அநேகர் வெதுவெதுப்பாயும், ஆவிக்குரிய அறிதலோ தெரிதலோ புரிதலோ அறிவுமோ கிஞ்சித்துமின்றி, பிசாசு நம்மைக் கண்டு கைகொட்டிச் சிரிக்குமளவு வேடிக்கைப் பொருளாய் ஆகிப்போயிருக்கிறர்கள் !

நான் உனக்கு சவால் விட்டு உன்னை உந்தியெழுப்ப விரும்புகிறேன் ! அப்போது இதுவரை நீ கண்டிராத ஒரு இளைப்பாறுதலின்மையையும், "கர்த்தரின் பாரத்தால்" நிறைந்த அபிஷேக ஸ்நானத்தையும் நீ பெற்றுக்கொள்வாய் !அது உன் இலக்கையே மாற்றிவிடும் !

ஓய்வின்மையும், தேவனுக்கேற்ற உள்ளான உளைச்சலும், பரிசுத்த இளைப்பாறுதலின்மையுமே உன்னுள் வேகத்தை உண்டாக்கும் கிரியா ஊக்கிகள் !

அந்த வேகம் சாதாரண ஒரு வேகமல்ல..
"தீ" மிதி வேகம் அது ! தீ மிதிப்பவன் அடிமேல் அடிவைத்து அன்ன நடை நடப்பானோ ? அது அவன் காலைப் பொசுக்கி விடாதோ ? அப்படிப்பட்டவன் நெருப்பை மிதித்து ஓடுவான் ! அவனை யாரால் பிடிக்க முடியும் ?

4. தேவன் உன் ஆவியை அனலாக்கும் போது உன் தீவிரம் பல மடங்காய்ப் பெருகும் !

அக்கினியினால் ஸ்நானம் பெறும் ஒருவன், யாரும் சொல்லாமலே உபவாசத்திலும் ஜெபத்திலும் இறங்குவான் ! அவனது ஜெபத்தின் தீவிரம் பிசாசையே ஆச்சரியத்தால் மெய்மறக்கச் செய்யும் !

ஜெபத்திலும் உபவாசத்திலும் காணப்படும் தீவிரத்தில் பல வகைகளும் படிகளும் உண்டு என்பது நீங்கள் அறிந்ததே ! சிலர் தங்களுக்குள்ளாக மௌனமாய் ஜெபிப்பதுண்டு.. சிலர் "அப்பா அப்பா" என்ற வார்த்தைகளோடு ஆவியில் ஜெபிப்பதுண்டு.. சிலர் தாகமாய்த் தவிப்பது போன்ற சில குறிப்பிட்ட வார்த்தைகளோடு மூச்சு வாங்கி இளைக்க இளைக்க ஜெபிப்பதுண்டு !

ஆனால் இன்னும் சிலர் ஆவியில் நிறைந்து அக்கினியான அந்நியபாஷையோடு பரிசுத்த ஆவிக்குள் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு ஜெபிப்பதுண்டு !

உனக்குள்ளே இல்லாத ஒன்று உனக்குள்ளிருந்து வெளிவர வாய்ப்பில்லை.. இருதயத்தின் நிறைவினால் மட்டுமே வாய் பேசும் !

உன் ஆவி அனலாய், அக்கினியாய் தகதகத்துக் கொண்டிருக்குமானால், உன் வாயினின்று புறப்படும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அபிஷேகிக்கப்பட்ட தீக்கங்குகளாய், நெருப்புத் துண்டங்களாய் வெளிவந்து விழும் !

நீ எப்படியோ எனக்குத் தெரியாது.. ஏதோ ஆலோசனை கொடுப்பது போன்ற பிரசங்கமெல்லாம் பண்ணிப் பண்ணி நான் இளைத்துப் போனேன்.. சொற்பொழிவுப் பிரசங்கங்கள் எனக்கு வெகு தூரம் ! உபதேசத்துக்கு மேல் உபதேசமோ, அறிவூட்டும் போதனையோ அல்லது வேதபாடமோ எதுவானாலும், அது, எது ஒன்றாலும் தடுத்து நிறுத்த முடியாத ஒரு வேகத்தோடும் வீச்சாற்றலோடும் பிரசங்கிக்கப்பட வேண்டும் !

5. தேவன் உன்னைப் பாடுகள், நெருக்கங்கள், வேதனைகள் என்னும் சோதனைகளான நெருப்பிலிடும்போது..

இவைகள் மாத்திரமல்ல.. இரும்பு நெருப்பிலிடப்பட்டு அடி மேல் அடிக்கப்பட்டு கோடாரிக் காம்பாய் உருவேற்றப்பட்டு வடிவமைக்கப்படுவது போல, தேவன் நம்மை அக்கியினியிலிட்டு சோதனைகளாலும் நெருக்கங்களாலும் பாடுகளுக்கு உட்படுத்தி நம்மை வடிவேற்றி உருவாக்கித் தீட்டியெடுக்கிறார் !

நீ நெருப்பினுள் இருக்கும் கால அளவே, உன் கூர்மையையும் பளபளப்பையும் நிர்ணயிக்கிறது !

திறம்படப் பயன்பட வேண்டிய தண்டாயுதம் எப்படி இருக்க வேண்டும் ?

CHAPTER - 16

தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையை விஞ்சிய இடைவிடா ஊழிய ஓட்டத்தில் வீழ்ச்சி, தவிர்க்க முடியாததே !
Dr.Paul Enenche

நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன். உன்னைக் கொண்டு ஜாதிகளை நொறுக்குவேன்..உன்னைக் கொண்டு ராஜ்யங்களை அழிப்பேன்.. (எரே 51:20)

ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது..அவன் : "ஐயோ ! என் ஆண்டவனே ! அது இரவலாக வாங்கப்பட்டதே.." என்று கூவினான்..(2 இரா 6:5)

இருப்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, ஒருவன் அதைத் தீட்டாமல் போனால் அதிக பெலத்தைப் பிரயோகப்படுத்த வேண்டியிருக்கும்..(பிர 10:10)

ஒரு தண்டாயுதமோ, கோடாரியோ மிகத் திறம்படப் பயன்பட வேண்டுமானால், மூன்று காரியங்கள் இன்றியமையாதது.

1.கோடாரியின் திறனும் உபயோகமும் அதின் திடத்தன்மையிலும் ஸ்திரத்தன்மையிலும் இருக்கிறது. (solidarity)

முதலாவது கோடாரியின் திடத்தன்மையும் ஸ்திரத்தன்மையுமே அதன் பயன்பாட்டை திறமை மிக்கதாக்குகிறது.

திடத்தன்மை என்று நான் சொல்வது அதின் கட்டை அல்லது கைப்பிடிக்கும் இரும்புக் கொம்புக்கும் இடையேயான இணக்கம் அல்லது உறுதி. உறுதி எனப்படுவது கோடாரியின் கைப்பிடியோடு அடித்து இணைத்து இறுக்கப்பட்டிருக்கும் இரும்புக் காம்பின் இறுக்கம்.

ஒன்றோடு ஒன்று இரண்டுக்கும் உள்ள இறுக்குப்பிடி. கோடரி முனை லூசாகவோ, ஆடிக்கொண்டோ, தளர்வாகவோ இல்லாமல், கைப்பிடியோடு இறுக்கமாய்க் கெட்டியாக இறுகியிருத்தல்..

கட்டையுடன் கோடரித்தலையின் அந்தக் கல்லான இறுக்கமும் உறுதியுமே, கோடாரி மிகத் தீவிரமாய் திறமையாய்ப் பயன்படுத்தப்படுவதைத் தீர்மானிக்கிறது..

கோடாரியின் கைப்பிடி, நமது புறம்பான வாழ்க்கையையும், அதின் தலைப்பகுதி, நமது உள்ளான வாழ்க்கையையும் குறிக்கிறது. இரண்டுமே பூமியிலிருந்து எடுக்கப்பட்டவைகளே ! மரக்கட்டையாய் செதுக்கப்பட்ட கைப்பிடி, பூமியின் மேற்புறத்திலுள்ள மரத்திலிருந்தும், தலைப்பகுதியான கோடாரிக் கொம்பு, பூமியின் அடியிலிருந்து எடுக்கப்பட்ட உலோகமான இரும்பிலிருந்தும் செய்யப்படுகிறது. பூமியின் உள்ளிருந்து எடுக்கப்பட்ட இரும்பும் பூமியின் மேலிருந்து எடுக்கப்பட்ட மரமும் இணைக்கப்பட்டு உருவாகிறது கோடாரி.

கோடாரியின் இரும்புமுனை, உள்ளான ஆவிக்குரிய வாழ்க்கையையும், அதன் கைப்பிடி புறம்பான வாழ்க்கையையுமே காட்டுகிறது.

ஆகவே நாம் ஒரு திறமையான தண்டாயுதமாய், அஸ்திராயுதமாய், தீட்டப்பட்ட கோடாரியாய் உபயோகப்பட வேண்டுமானால் நமது புறம்பான ஊழியத்துக்கும் நமது உள்ளான தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் ஒரு நெருங்கிய, ஆழமான, உறுதியான இணக்கமும் இறுக்கமும் இருப்பது அவசியம்.

இன்னொரு விதத்தில் சொல்வதானால், கோடாரி மிகத் திறமையாகவும் பிரயோஜனமாகவும் கையாளப்பட வேண்டுமானால், நமது ஊழியத்தில் வெளிப்படையாகவும் புறம்பாகவும் காணப்படக்கூடிய செயல்பாடுகள், நமது உள்ளான ஆவிக்குரிய தன்மைக்கு அடங்கிக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

வெளியான செயல்பாடுகள் ஆவிக்குரியவற்றின் மீதே அஸ்திபாரமிடப்பட்டுக் கட்டப்படவேண்டும். ஆவியின் கட்டுப்பாட்டை மிஞ்சிய இருபத்திநான்கு மணிநேர இடைவிடா ஓயா ஊழியமும் ஓட்டமும் விழுந்து நொறுங்குவது உறுதி.

உள்ளான ஆவிக்குரிய காரியங்களான ஜெபம், வேத தியானம், தேவனோடு தனிமையில் அதிகமாய் நீண்டநேரம் செலவழிப்பது போன்றவற்றை மீறிய வெளியான ஊழிய ஓட்டங்களும் செயல்பாடுகளும் ஒருநாள் விழுந்து நொறுங்குவது தவிர்க்கவே முடியாதது !

உன் உள்ளான வாழ்வைக் காட்டிலும் உன் புறம்பான ஓட்டசாட்டங்கள் ஓங்கிக் காணப்பட்டால், உன் ஊழியத்தின் வீழ்ச்சி திண்ணம் !

இன்னொரு வகையில் சொல்வதானால், உன் ஆழத்தை விட உன் உயரம் ஓங்கி வளர்ந்து கொண்டே போகுமானால் உன் எதிர்காலமே காணாமல் போய்விடும். அது விழுந்து நொறுங்குவதை யாராலும் தவிர்க்க முடியாது. தேவனோடு ஆவியில் இணைந்து ஆழமாய் வேர்விட்டுச் செல்லும் ஒரு ஆவிக்குரிய வாழ்வு இல்லாமலேயே, வெளியே "ஓகோ" என்று செழிப்பாய் வளர்ந்து காணப்படும் ஒரு ஊழியத்தைச் செய்வது மிகச்சுலபம் ! ஆனால் அதின் முடிவு அழிவு !

மீண்டும் சொல்லுகிறேன்..உன் ஆவிக்குரிய ஆழத்தை விட உன் ஊழியத்தின் உயரம் அதிகமாகிக் கொண்டே போனால், நீ விழுந்து போவது நிச்சயம்.

ஆகவே ஆழத்துக்கும் உயரத்துக்கும், ஊழிய செயல்பாடுகளுக்கும் உண்மையான ஆவிக்குரிய தன்மைக்கும், உள்ளான வாழ்க்கைக்கும் புறம்பான வாழ்க்கைக்கும் இடையேயான ஒரு மாறாத கோட்பாடும், இணக்கமும் உறுதியும், ஒரு பரஸ்பர விகிதாச்சாரமும் பங்கும் இருந்தே ஆகவேண்டியது கட்டாயத்திலும் கட்டாயம். இதுதான் இணக்கமும் இறுக்கமுமான உறுதித்தன்மை என்று அழைக்கப்படுவது..

அநேக போதகர்கள் தங்கள் ஆவிக்குரிய பெலனுக்கு மிஞ்சின காரியங்களையும் செயல்களையும் செய்து முடித்து சாதிக்கப் போராடுகிறார்கள். தங்கள் ஆவிக்குரிய அபிஷேகத்துக்கும் சக்திக்கும் மீறிய செயல்களில் கையிட்டு, தலையிட்டு, ஊழியம் என்றும் சேவை என்றும் எதையெதையோ சொல்லிக் கொண்டு தங்களுக்கு அடாத செயல்களில் ஈடுபட்டு தங்கள் ஊழியத்தையும் ராஜ்யத்தையுமே கட்ட படாதபாடு படுகிறார்கள். அதின் முடிவு தோல்வியும் வெட்கமும், அவமானமும் கடன் சுமையுமே ! கடைசியில் அது சோர்விலும் மனமடிவிலும் தளர்ச்சியிலும், ஏன், மரணத்திலுமே முடிகிறது !

2. கோடாரியின் திறனும் உபயோகமும் அதின் கூர்மையைப் பொறுத்தது..

நீ ஒரு திறமையான தண்டாயுதமாக உபயோகமாக உபயோகிக்கப்பட விரும்பினால்.. உன்னையே கூர்தீட்டிக் கருக்காக்கிக்கொள் !

(A) முதலாவது தேவனுடைய வார்த்தையினால் உன்னையே நீ கூர்மையாக்கிக் கொள் !

உன்னைக் கூராக்க நீ செய்ய வேண்டிய முதல் காரியம், நீ தேவனோடு போதிய நேரம் செலவிடுதல் ! ஊழிய செயல்பாடுகளுக்கு மிஞ்சி முந்தி நிற்க வேண்டியது, தனிப்பட்ட உள்ளான ஆவிக்குரிய வளமும் வாழ்வும் ! இந்த வரிசை பிரளவும் கூடாது ! பிசகவும் கூடாது !

1 யோவான் 1:3 சொல்லுகிறது..

"நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம். எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது.."

"நாங்கள் படித்ததை" என்றோ, நாங்கள் "நகல் எடுத்ததை" என்றோ, என்று யோவான் எழுதாமல், "நாங்கள் கேட்டதும் கண்டதும் நோக்கிப் பார்த்ததும்,எங்கள் கைகளினால் தொட்டதுமான ஜீவ வார்த்தையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.." என்று அவன் எழுதி வைத்தான்.

"நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே !" என்றனர் அப்போஸ்தலர், அப்போஸ்தலர் 4:20 ல்..

கேள்வி இது தான்..நாம் பிரசங்கிப்பதை எதிலிருந்து எடுத்துப் பேசுகிறோம் ? நாம் அந்தச் செய்தியை யாரிடமிருந்து பெற்றோம் ? அதை எங்கே பார்த்தோம் ? எதிலிருந்து படித்தோம் ? ஏனென்றால் எழுத்து கொல்லும்.. ஆவியோ உயிர்ப்பிக்கும் !

தேவனுடைய வார்த்தையினாலே நீ உன்னைப் பட்டை தீட்ட வேண்டும். அதின் ஆழங்களில் நீ பார்ப்பதையும், ஆவியின் சத்தம் கொண்டு கேட்பதையும், அதின் முழுமையினால் உன்னில் பொங்கி வழிவதிலிருந்துமே நீ பிரசங்கிக்க வேண்டும் !

"பிரசங்கம் பண்ண வேண்டுமே !" என்று அங்கேயும் இங்கேயும் தேடி, கூகுளிலும் யூ-டியூபிலும் பார்த்து அதே சரக்கைக் கொண்டுபோய் சபையில் கொட்டுவதல்ல பிரசங்கம் !

யூ-ட்யூபிலும், இன்டர்நெட்டிலும் வீடியோ ஆடியோ CD DVDக்களிலும் யாருடைய செய்தியையாவது கேட்பது தவறல்ல.. அது உனக்குள் கிரியை செய்து, உன்னை அனலாக்கி, உன் வாழ்க்கையை மாற்றி, அது யாருடைய செய்தியோ அதை நீ குறிப்பிட்டு, அதிலிருந்து நீ பிரசங்கிப்பது வேறு விஷயம். அது தவறல்ல..

ஆனால் சில போதகர்கள் உண்டு. சனிக்கிழமை இராத்திரி வரை வாரம் முழுவதும் எங்கெங்கோ ஓடி விட்டு, அங்கும் இங்கும் பாய்ந்து விட்டு சனிக்கிழமை இரவு வந்தபின், "ஐயையோ, நாளைக்குக் காலை என்ன பேசுவேன் ?" என்று அவசர அவசரமாக நெட்டைத் தடவி கொண்டிருப்பவர்களைப்பற்றிச் சொல்லுகிறேன்.

ஒரு தலைமுறையின் தலையெழுத்தே உன் கையில் இல்லையோ ? அவர்கள் தங்கள் பிதாவாகிய தேவனின் சத்தத்தை உன் மூலமும், உன் பிரசங்க வார்த்தைகளின் மூலமும் கேட்கும் சிலாக்கியத்தைப் பறித்துக் கொள்ள நீ யார் ?

பிரியமானவனே ! "நான் அறிவிக்கிறது, நான் பார்த்ததின், கேட்டதின் வெளிப்பாடே.." என்பான் யோவான்.

நீ பார்க்க வேண்டிய தூரம் பார்த்தும், கேட்க வேண்டிய அளவு கேட்டும் இருந்தால், உன்னிலிருந்து நிரம்பி வழிந்து நீ பேசுவதை யாராலும் தடுத்து நிறுத்தவே முடியாது ! அது உடைத்தெறிந்து வரும் ! வேகத்தோடு அக்கினியாய் சீறி வரும் !

தேவனிடத்திலிருந்து நீ பார்த்ததும் கேட்டதும் அப்படியாய் இருந்தால் எந்தப் பிசாசோ ஆவியோ, மந்திரவாதியோ நீ பேசுவதைத் தடுத்து நிறுத்தவே முடியாது ! காரணம் நீ பேசும் வார்த்தைகள் உன் இருதயத்தின் நிறைவிலிருந்து வெளிப்படுவதல்லவோ ?

(B) அடுத்து, உபவாசத்தாலும் தீவிர ஜெபத்தாலும் உன்னையே கூராக்கித் தீட்டிக்கொள் !

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புது பெலனடைந்து கழுகுகளை போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்.." (ஏசா 40 :31)

இதுவும் முதலாவது மாதிரி தேவனோடு நேரம் செலவழிப்பதோடு சம்பந்தப்பட்டதே ! ஆனால் இதில் செய்ய வேண்டிய வேலை கொஞ்சம் அதிகமுண்டு ! மூன்று நாள், ஏழு நாள் என்று நாள் ஒதுக்கி தண்ணீர் மட்டும் உட்கொண்டு தேவ சமுகத்தில் காத்திரு !

இந்த உபவாசத்தில் மாம்சத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தும் போது தான் ஆவி விடுதலையாகிறது. வாட்ச்மேன் நீ இதைத்தான் "ஆவியின் விடுதலை" என்பார். மாம்சம் சாகடிக்கப்படும்போது ஆவி விடுதலையாய்த் தன்னை தேவகரத்தில் ஒப்புவித்து, அவர் அவனில் என்னவெல்லாம் செய்ய விரும்புகிறாரோ, அவ்வளவும் அவர் விடுதலையோடு செய்ய அவனது ஆவி தேவனுக்கு விடுதலை அளிக்கிறது..

தன் தேசத்தையே தேவனுக்காகப் பற்றி எரிய வைத்த ஒரு மனிதனைப் பற்றிக் கேள்விப்பட்டேன். தன் ஊழியத்தின் முதல் 10 ஆண்டுகள், வருடத்தின் ஒவ்வொரு மாதமும் முதல் பத்து நாட்கள் உபவாசித்து ஜெபிக்க தனியே சென்று விடுவாராம். அந்நாட்களில் யாரையும் அவர் பார்ப்பதில்லையாம். தேசத்தையே தேவனுக்காகத் திருப்பிய மனிதர் அவர் !

நம்மில் அநேகர் நினைப்போம்.. "உண்மையிலேயே கொடுத்து வைத்த மனிதர் இவர்.."என்று. அவர் கொடுத்து வைத்தவரோ, ராசியானவரோ அல்ல - அத்தனைக்கும் பின் அவரது உழைப்பு ! உபவாசம்! வியர்வை! கண்ணீர்!

ஒரு போதகனாய் வாரத்துக்கு ஒரு நாளோ இரண்டு நாட்களோ உன்னையே உபவாசத்திலும் ஜெபத்திலும் ஒளித்துக் கொள் ! அதுவே உன்னைத் தீட்டிக்கூராக்கும் இடம் ! அந்த நாளில் ஏதோ ஒன்றுக்காக தேவனிடம் மன்றாடி நிற்பதல்ல.. அந்த நாட்களில் தேவன் உன்னைத் தீட்டியெடுக்கும்படியாய் உன்னையே அவரது கரங்களில் முற்றுமாய் ஒப்படைத்துவிடும் நாட்கள் அவை !

தீயாய் வெளிவரும்படி உன்னையே நீ தீட்டிக்கொள் ! உன்னிலே நீ தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளும், தகதகக்கும் தட்பவெப்பத்தை உன் ஜனங்கள் உன்னிலே உணரட்டும் !

C. மூன்றாவது, உன்னைவிட ஆவிக்குரிய நிலையில் உயர்ந்தவர்களோடோ அல்லது நல்ல ஆவிக்குரிய நிலையில் உள்ளவர்களோடோ நீ கொள்ளும் ஐக்கியமே உன்னைத் தீட்டிக் கூர்மையாக்கி பளபளப்பாக்குகிறது !

இரும்பை இரும்பு கருக்கிடும் ! (நீதி 27:17)

அதாவது இரும்பு தான் இரும்பைக் கூராக்கும். மரமோ பிளாஸ்டிக்கோ அல்ல.. இரும்பைக் கூராக்குவது ! இரும்பு மாத்திரமே இரும்பைக் கருக்கிக் கூராக்கும் ! நீ யாரோடு பேசிப் பழகித் திரிந்து ஐக்கியம் வைத்திருக்கிறாய் என்று கவனித்துப் பார் ! நண்பர்கள் என்று நீ அழைக்கிறவர்களை கவனி !

இன்று தாங்கள் இருக்கும் நண்பர் வட்டத்துக்குள் நுழையுமுன் ஒரு காலத்தில் சில போதகர்கள் அக்கினியாய் இருந்தது உண்மை !

ஊழியத்தில் பணம் பார்த்தே பழகினவர்களோடும், காசின் மீதே கண்ணாயிருப்பவர்களோடும், இரவும் பகலும் உலகத்துக்காகவே வாழும் இப்பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷம் தரித்தவர்களோடும் சிக்கிக் கொள்ளும் வரை சில போதகர்கள் பரலோகவாசிகளாகவே இருந்தனர்..

இப்படிப்பட்டவர்களால் அல்லது இப்படிப்பட்ட ஒரே ஒரு நண்பரால் அல்லது "ஆவிக்குரிய தகப்பன்" என்று சொல்லிக்கொள்ளப்பட்ட ஒருவரது தாக்கத்தால் வசப்பட்டு வசியப்பட்டு, தங்களையும் தங்கள் செய்தியின் பொருளையும், செய்தியை முன்வைக்கும் விதத்தையும், தங்கள் நிலைப்பாட்டையும், ஏன், விசுவாசத்தையுமே விற்றுப்போட்டவர்கள் ஏராளம் !

யாரை நீ "ஆவிக்குரிய தகப்பன்" என்றும் "மேன்மைக்குரிய ஐயா" என்றும் ஏற்றிருக்கிறாய் என்பதில் ஜாக்கிரதையாயிரு !

தீர்க்கதரிசிகளின் புத்திரர், "எலியாவின் ஆவி எலிசாவின் மேல் இறங்கியிருக்கிறது.."(2 இரா 2:15) என்று சொன்னதாக வேதம் சொல்லுகிறது. இதையே வேறு விதமாகச் சொல்வதானால், தவறான ஆவியுடைய ஒரு மனிதனுக்கு சேவகம் பண்ணத் தன்னை சேவகம் எழுதிக் கொண்டவன் மேலும், அவனது எஜமான் மேலுள்ள தவறான ஆவி இறங்குவதில் சந்தேகமில்லை.. அந்தத் தவறான ஆவி இரட்டிப்பாக அவன் மேல் இறங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை..

நேரடியாகவே சொல்லுகிறேன்.. கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டுமே தவிர வயதுக்கு அல்ல.. நம்மை ஒப்புவிக்க வேண்டியது அபிஷேக சால்வைக்குக் கீழே அன்றி, ஒரு ஸ்தாபன போர்டுக்குக் கீழே அல்ல..

இரும்பு இரும்பைக் கருக்கிடும். ஆகவே யாரோடு இணைந்திருப்பதால் நீ உன்னையே கூராக்கிக் கொள்ள முடியும் என்று நீயே தேடிப் பார் !

யாரை நீ நண்பன் என்று சொல்லுகிறாய் என்பதில் எச்சரிக்கையாயிரு ! நட்பு என்பது தெரிந்தெடுத்தலில் உள்ளதே தவிர, திணிக்கப்படுதலில் அல்ல.. நட்பு என்பது ஜாலிக்காக அல்ல.. சீரியஸான எதிர்காலத்துக்காகவே !

1970, 80 களில் விசுவாசிகள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும்போது அவர்களின் வாழ்த்துதலே இப்படித்தான் இருக்கும்..

"எப்படி இருக்கிறீங்க பிரதர் ? வேல்ஸ் ரிவைவல் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீங்களா ? ஈவன் ராபர்ட்ஸ் பற்றி ஏதாவது படிச்சிருக்கீங்களா ? உங்களுக்கு தெரியுமா பிரதர் ? மனுஷன் 13 வருஷம் ஜெபம் பண்ணியிருக்கிறார்.. பின்ன வேல்ஸ்ல அக்கினி இறங்காம என்ன செய்யும் ?

பாருங்க ! வருகையின் தூதன்ல (Herald of His Coming) ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் பற்றி செய்தி ஒண்ணு படிச்சேன் பிரதர்.. என்னைய அப்படியே உலுக்கிருச்சி பிரதர் !"

மட்டுமல்ல..

உங்களுக்குத் தெரியுமா ? ஜாண் ஹைடின் ஏக்கப் பெருமூச்சுகளின் ஜெபத்தினாலும் கண்ணீராலயும் அவரது ஜெப அறையின் சுவரே கறைப்பிடித்துப் போயிருக்குமாம் !இன்னொன்றும் படிச்சேன் பிரதர் ! மரியா உட்வொர்த் எஸ்தர் ஒரு இடத்துக்குப் பிரசங்கம் பண்ணப் போனா, அவுங்க போய் சேர 50 மைலுக்கு முன்னாலேயே அங்கிருந்த ஜனங்கள் அபிஷேகத்தால் நிரம்பி விழுந்தாங்களாம் ! உங்களுக்குத் தெரியுமா? ஐஸ்கட்டிக் குகைக்குள்ளே டேவிட் பிரெய்னார்ட் ஜெபம் பண்ண ஆரம்பிச்சா அது உருகி ஓட ஆரம்பிக்குமாம் ! அதுவும் கடுங்குளிர்ல !
நம்புவீங்களா பிரதர் ?

இப்படித்தான் எங்கள் பேச்சு வார்த்தைகள் அந்த நாட்களில் இருந்தது.. அதைக் கேட்கும் போதே அக்கினி பற்றி எரியும் ! யாரோ ஒருத்தர் சொல்லுவார்.. "அதைப் படிச்சுட்டு 10 மணி நேரம் நான் போய் கதவை மூடிக்கொண்டு தேவ சமூகத்தில் விழுந்தேன் !" இன்னொரு ஆள் சொல்லும்.. "பத்து மணி நேரமா ?" "சரி சரி.. நான் உங்களை பிறகு பார்க்கிறேன்.." என்று அவரும் போய் கதவை மூடிக் கொள்வார்.

இன்னொரு ஆள் சொல்லும் "அய்யோ நான் இங்க என்ன செய்து கொண்டிருக்கிறேன் ? எவ்ளோ நாள் வேஸ்ட் பண்ணிட்டேன்.." என்று தலைதெறிக்க ஜெபிக்க இடம் தேடி ஓடுவான்.. இப்படித்தான் நாங்கள் அந்நாட்களில் ஒருவரை ஒருவர் கூர்தீட்டிக் கொண்டோம். இரும்பு இரும்பைக் கூராக்கும் !

நாங்கள் இரட்சணிய சேனையின் வில்லியம் பூத்தைக் குறித்துக் கேள்விப்பட்டோம்.. தன் குதிரையில் சென்று கொண்டிருந்த சார்ல்ஸ் ஃபின்னி ஏதோ ஒரு ஊருக்கு செல்கிறார்..அங்கு ஊரே பாவ உணர்வினால் மார்பில் அடித்துப் புலம்புகிறது.. அந்த மனிதன் ஒரு தொழிற்சாலைக்குப் போனால் அங்கு வேலை செய்பவர்கள் பாவ உணர்வடைய, அங்கே ஜெபம் ஆரம்பிக்கப்படுகிறது.. தொழிற்சாலையே மூடப்பட்டு உற்பத்தி நிறுத்தப்படுகிறது.

தேவன் தனக்காய் உபயோகப்படுத்த யாரோ ஒரு மனிதனைத் தேடுகிறார்.. "யாருக்குப் பேரும் புகழும் வரும் ? என்றெல்லாம் சிந்திக்க நேரமில்லாத ஒரு மனிதன்" என்று நாங்கள் டி.எல்.மூடியைப் பற்றிப் படிப்போம்.. காலணிகள் செய்யும் கடையில் வேலை செய்த மூடி சொல்கிறார்.. "தேவ கிருபையால் நான் ஏன் அந்த மனிதனாய் இருக்கக்கூடாது? என்று..

செருப்புத் தைக்கும் தொழிலாளியாக இருந்து, தன் கடையில் இந்திய வரைபடத்தை மாட்டி வைத்து அன்றாடம் இந்தியாவுக்காக அழுது புலம்பி ஜெபித்துத் தன்னை மிஷனரியாக ஒப்புக்கொடுத்து இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குச் சென்ற வில்லியம் கேரி பற்றி படிப்போம்..

43 மொழிகளில் வேதத்தை மொழி பெயர்த்தவர், குறைந்தது 43 முறையாவது வேதத்தைப் படித்திருக்க வேண்டும் ! அவரது பிரிண்ட்டிங் பிரஸ் எரிந்து சாம்பலானது. என்ன செய்யப்போகிறார் என்று எல்லாரும் நினைத்தபோது அவர் சொன்னார்.. தீப்பிடித்ததற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் ! எல்லாப் பிழையான மொழிபெயர்ப்பையும் கர்த்தர் கொளுத்திப் போட்டார் ! ஸ்தோத்திரம் ! திரும்ப எழுதுவோம் என்றார்.. மறுபடியும் 8 வருடத்தில் இன்னும் சிறப்பாக மொழிபெயர்த்து முடித்தார் !

இதெல்லாம் படிக்கும்போதே இருதயம் பற்றி எரியும்.. அல்லது படித்த யாரோ சொல்லும்போதே தீப்பற்றிக் கொள்ளும் ! இப்படித்தான் நாங்கள் ஒருவரை ஒருவர் கூர்தீட்டிக் கருக்காக்கிக் கொண்டோம் !

ஆனால் இன்று நிலைமையே வேறு ! இன்று இரண்டு பாஸ்டர்கள் சந்தித்துக்கொண்டால் பேசிக்கொள்வது என்ன ? "என்ன பாஸ்டர், எப்படி இருக்கீங்க ? சர்ச் வேலையெல்லாம் முடிஞ்சுதா ? பில்டிங் வேலை எந்த நிலையில் இருக்குது ?

"பாஸ்டர், உங்க neck tie சூப்பரா இருக்குது..எங்க வாங்கினீங்க பாஸ்டர் ? "இந்த வாட்ச் எந்த கம்பெனியிது ? லாஸ்ட் டைம் ஃபாரின் போனப்போ வாங்கினதா பாஸ்டர் ?" "இந்த கார் எப்ப வாங்கினீங்க ? சூப்பர் வண்டி பாஸ்டர் ! எனக்கும் கொஞ்சம் சொல்லுங்க நானும் என் வண்டியை மாத்தணும்.."

" உங்க கோட் கலக்கலா இருக்கு பாஸ்டர்.. எங்க பாஸ்டர் உங்களுக்கு இதெல்லாம் கிடைக்குது ?"

இந்த மாதிரி ஒன்றுக்கும் உதவாத உரையாடல்களைத் தான் இன்று பாஸ்டர்ஸ் மீட்டிங்ல நாம் கேட்கிறோம். எந்த வகையிலும் நித்தியத்திற்குப் பைசா பிரயோஜனமில்லாத பேச்சுகள் !

இப்போதெல்லாம் யாரையோ ஒருவரை சந்தித்து விட்டு ஆவியில் உற்சாகமடைந்து போகிறது எல்லாம் மலையேறிப்போய்விட்டது ! யாரோ ஒரு தேவ மனிதனை சந்திக்கப் போகிறோம்.. அந்த மனிதனை சந்தித்த பிறகு எல்லாமே தலைகீழாய் மாறிவிட்டது என்று சொல்லும் அளவிலான காரியங்கள் எல்லாம் இன்று காணக் கிடைக்காத அரிதாகிவிட்டது !

அந்த நாட்களுக்காக என் மனம் ஏங்குகிறது.. அந்தக் கல்லூரி நாட்களின் எழுப்புதல்களில் அவ்வப்போது பல நாட்கள் எங்களையே அறைக் கதவுகளுக்குள் அடைத்துக்கொண்டு ஆகாரம் தண்ணீரின்றி ஜெபத்தில் விழுந்து கிடப்போம்.. யாரோ ஒருவர், தான் படித்த ஒரு புத்தகத்தின் பகுதியைப் படித்துக் காட்டுவார்.. நெருப்பு பற்றிக் கொள்ளும் !

ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்தின் "விசுவாச அப்போஸ்தலன்" (Apostle of Faith) படித்திருக்கிறீர்களா ? நீங்கள் படிக்கவேண்டும்! ஜாண் ஜி. லேக்கின் Adventures in God, லியோனார்ட் ரேவன்ஹில்லின் "எழுப்புதல் தாமதிப்பது ஏன் ?" மற்றும் Sodom had no Bible, படிக்க வேண்டும் ! இ.எம்.பவுண்ட்ஸ் எழுதிய "ஜெபத்தின் வல்லமை," சார்ல்ஸ் ஸ்பர்ஜனின் "The power in us".. E.W.Kenyons எழுதிய "Two kinds of faith" மற்றும் A.W.Tozerன் "In pursuit of God" ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்தின் "தேவன் பயன்படுத்தும் மனிதன்.." இந்த மாதிரி புத்தகங்கள் தான் நாங்கள் எங்களுக்குள் exchange பண்ணிப் படித்துக் கொண்டது.. இவைகள் தான் எங்கள் வாழ்க்கையையே மாற்றியது !

ஆனால் இன்றைய நிலைமை என்ன ?

இன்றைய போதகர்கள் எவ்வழியோ.. விசுவாசிகளும் அவ்வழியே ! இன்றைய ஊழியர்களின் கூட்டம் எப்படியோ அப்படியே இன்றைய விசுவாசிகளின் தலைமுறையும் !

ஆலயத்தின் பெஞ்சுகளும் நாற்காலிகளும் பிரசங்கபீடத்தை விட உயர்ந்திருக்க வாய்ப்பில்லை. நான் உங்களை உற்சாகப்படுத்தட்டும் ! முந்தின பாராவிலே எழுதிய புத்தகங்களை வாங்கி வாசியுங்கள் ! ஒருவேளை நீங்கள் ஊழியத்துக்கு வருமுன்னால் இவைகளைப் படித்திருக்கலாம்.. அப்போது படித்ததற்கும், ஊழியத்தில் இப்போது இருக்கும்போது படிப்பதற்கும் உள்ள பெரிய வித்தியாசத்தை நீங்கள் பார்ப்பீர்கள் !

இது என் அனுபவத்திலே நான் சொல்லுகிறேன்.. இவைகள் உங்கள் வாழ்க்கையையும் ஊழியத்தையுமே மாற்றிப்போடும் !

எழுப்புதலுக்கான புத்தகங்களைத் தேடி வாசியுங்கள்..எழுதியவர்கள் இன்று உயிரோடு இல்லாவிட்டாலும், தேவனோடு ஒன்றோடு ஒன்றாகிப்போன இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவத்தில் எழுதிய அவர்களோடு நீங்களும் உங்களைத் தீட்டிக் கூர்மையாக்கிக் கொள்ள முடியும் !

அவர்களது எழுத்துக்கள் உங்களைக் கருக்கிப் பளபளப்பாக்கித் துலக்கியெடுக்கும் ! புத்தகங்கள் மாத்திரமல்ல, எழுப்புதல் வீரர்களின் எழுப்புதல் செய்திகள் அடங்கிய பதிவுகளும் உங்களைக் கூர்மையாக்கும் ! அது உன்னை சவால் விடும் ! உன்னை உருவாக்கி வனைந்து, உனக்குள்ளிருக்கிற ஏதோ ஒன்றைத் தட்டி எழுப்பி விடும் !

உன்னைக் கூர்மையாக்குவது யார் ?

ஏற்கனவே உன் கையிலிருக்கிற இந்தப் புத்தகம் உன்னை தீட்டிக் கூர்மையாக்கிக் கொண்டிருக்கிறது..இது உன்னைக் கூர்மையாக்கும் ஒரு செய்தி ! இன்னும் மூன்றே மாதங்களுக்குள் உன்னைக் காணும் பிசாசு, உன்னை முற்றிலும் வித்தியாசமான, வேறு ஒரு நபராய்ப் பார்ப்பான் !

எழுப்புதல் சம்பந்தப்பட்டதும், அடையாள அற்புதங்கள் சுவிசேஷம் மற்றும் மிஷனரி வாழ்க்கை வரலாறுகளையும் செய்திகளையும், பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக இறங்கிக் கிரியை செய்யும் கூட்டங்களையும் பாருங்கள் !படியுங்கள் ! தேவ பிரசன்னத்தை அனுபவத்தில் அனுபவிக்கும் அனுபவங்கள் இவை ! இவைகள் தவிர வேறு ஒன்றும் என்னைப் பரவசப்படுத்துவதில்லை !

இந்தப் பிரசன்னம், மோசே பிரவேசித்த பிரசன்னம் ! அவன் அதிலிருந்து வெளியே வரும்போது வேற்று மனிதனாய் வெளியே வந்தான் ! திக்குவாயும் மந்த நாவும் கோழையுமான அவன், பார்வோன் முன் நின்றபோது முற்றும் வேறு ஒருவனாகவே நின்றான் !

உன்னையே கூர் தீட்டிப் பதமாக்கி, பட்டைதீட்டி, பளபளப்பான துலக்கமாக்கிக்கொள் !

3. கடைசியாகத் தண்டாயுதத்தின் திறனும் உபயோகமும், அது தன்னையே முழுவதுமாய், சம்பூரணமாய்த் தன்னைக் கையாடுபவனின் கைகளில் ஒப்புவித்து விடுவதிலேயே இருக்கிறது !

உன் சமர்ப்பணமும் அர்ப்பணமும், முழுமையுமான ஒப்புவித்தலுமே, தேவ கரங்களில் உன் உபயோகத்தின் அளவைக் குறிக்கும் அடையாளங்களாகும் !
Dr.Paul Enenche

மிகத் திறமையான தண்டாயுதமாய், அஸ்திராயுதமாய், கூராயுதமாய் ஒரு ஆயுதம் இருக்க வேண்டுமானால், முதலாவது, ஆயுதம் திடமாகவும், இரண்டாவது அது கூர்மையாகவும், மூன்றாவது கையாடுகிறவன் கையில் அது தன்னை முழுவதுமாக விட்டுக்கொடுத்து ஒப்புவித்து விட்டதாகவும் இருப்பது அதற்கு அவசியத்திலும் அவசியம் !

தன்னைக் கையாடுகிறவன் கையில் கோடரி, தன்னை அவன் எப்படியாவது பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று முழுவதுமாக விட்டுக் கொடுத்துவிட வேண்டும். இதில் முக்கியமாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டிய இரகசியம் என்னவென்றால், கோடரி தானாகவே தன்னை உபயோகப்படுத்திக் கொள்ள முடியாது. திறம்பட அது கையாளப்படுதலின் இரகசியமே, அது தன்னைப் போர்வீரனின் கையில், அவனது இஷ்டத்துக்கு விட்டுவிடுவது தான். அது தன்னைத் தானே சுமந்து செல்லாது.. தான் எங்கே உபயோகப்பட வேண்டுமென்று தன் இருப்பிடத்தை அது தானாக நிர்ணயிப்பதில்லை. அதைக் கையாளும் வீரனே அதை நிர்ணயிக்கிறான்..

ஏசாயா 10:15 சொல்கிறது..

"கோடரியானது தன்னால் வெட்டுகிறவனுக்கு விரோதமாய் மேன்மை பாராட்டலாமோ ? வாளானது தன்னைக் கையாடுகிறவனுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டலாமோ ?

தண்டாயுதமே ! தயவுசெய்து உன்னைக் கையாளும் போர் வீரனோடு போர்செய்யாதே ! நம்மைத் தமது கரங்களில் பிடித்திருப்பவருக்கு விரோதமாய்ப் போராடாதிருப்போமாக !நமது எஜமானையே நாம் எதிர்த்து நின்றால் நாம் உபயோகிக்கப்படுவது எப்படி ?

தேவனோடு போராடுவதைப் போல, அவரோடு மல்லுக்கு நிற்பதைப் போல வேதனையானது ஒரு மனிதனுக்கு வேறு ஒன்றுமில்லை ! ஊழியத்துக்குப் போக மாட்டேன் என்று அடம் பிடிப்பது.. இன்னாரைப் போலத்தான் ஊழியம் செய்வேன் என்று பிடிவாதம் பிடிப்பது.. அழைப்புக்கு சம்பந்தமில்லாத வேலையில் இறங்குவது.. இதெல்லாம் தேவனுக்கு விரோதமாய் எதிர்த்து நிற்பதல்லாமல் வேறென்ன ?

போதக அழைப்புப் பெற்றவர்கள், சுவிசேஷகர்களாகவும், தீர்க்கதரிசன வரம் இல்லாதவர்கள் மற்றவர்களைக் காப்பியடிப்பதும், இவர்களால் தேவராஜ்யத்துக்கு நஷ்டமேயல்லாமல் மகிமை எங்கே ?

ரெயினார்ட் போங்க்கே ஒரு யூனிவர்சிட்டியோ சபையோ கட்டவில்லை. ஆனாலும் இந்தத் தலைமுறை அவரை மறக்காது ! ஓரல் ராபர்ட்ஸ்க்கு ஒரு சபைக் கட்டிடமும் கிடையாது. ஆனாலும் இந்தத்தலைமுறை அவரது ஊழியத்தை மறக்கவே முடியாது !

மறுபடியும் சொல்லுகிறேன்.. கோடாரி தன்னைத்தானே உபயோகப்படுத்தாது. அதைக் கையாளும் இடத்தையும் சந்தர்ப்பத்தையும் முடிவு செய்பவன் அதைக் கையாடுபவனே!

"தேவன் பொற்பாத்திரங்களையும் வெள்ளிப் பாத்திரங்களையும் அல்ல.. தன்னை முழுவதும் ஒப்புவித்த பாத்திரங்களையே தேடுகிறார்.." என்றார் கேத்தரின் கோல்மன்..

"நீங்கள் என்னவாக வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?" என்று மதர் தெரசாவைக் கேட்டபோது, அவர் சொன்னார்.."நான் விரும்புவதெல்லாம் ஆண்டவர் கரங்களில் ஒரு பென்சிலாக இருப்பதையே ! அவர் இந்தப் பென்சிலைக் கொண்டு தமது அன்பின் சித்திரம் ஒன்றை வரையட்டுமே !" என்றார் அவர்..

உன்னுடைய சமர்ப்பணம் மற்றும் ஒப்புவித்தலின் தன்மையையும் அளவையும் பொறுத்தே தேவன் உன்னைத் தண்டாயுதமாய் உபயோகப்படுத்தும் அளவும் இருக்கிறது. உன் ஒப்புவித்தல் மற்றும் விட்டுக்கொடுத்தலின் அளவு அதிகரிக்கும்போது உன் உபயோகமும் கூடிக்கொண்டே போகும் ! உன் அர்ப்பணிப்பு கூடும்போது ஊழியத்தில் தேவ மகிமையின் வெளிப்படுதலும் கூடிக்கொண்டே போகும் !

பேரும் புகழும் கொண்ட பிரபலமானர்களைப் போலவே ஆகவேண்டும் என்ற உன் ஏக்கமும் பேராசையும் குறையும்போது, நீ நீயாகவே உயர்த்தப்படும் கிருபை உன் மேல் பெருகும் ! நீ என்ன செய்கிறாய் என்பதல்ல..எப்படிப்பட்ட மன உண்மையோடு செய்கிறாய் என்பதே காரியம் ! வரங்களும் வல்லமையும் வெளிப்படுவதின் அடிப்படையில் அளிக்கப்படுவதல்ல பிரதிபலன்.. ஆனால் வெளிப்படும் தேவ மகிமைக்கு நீ எவ்வளவு உண்மையாக இருக்கிறாய் என்பதைப் பொறுத்தே தரப்படுவது அது !

காரணம், வரங்களின் மூலகாரணனும், முக்கியஸ்தனும், முதலாளியும் நீ அல்ல ! தேவனே !

யாரோ ஒருவர் சொன்னார்.. "தேவன் இரண்டு தேவதூதர்களை, ஒருவனை உலகிலேயே ஏழை நாடு ஒன்றின் தெருக்களைப் பெருக்கவும், இன்னொருவனை பணம் கொழித்த நாடு ஒன்றின் மிகப் பெரிய ஆலயம் ஒன்றில் பிரசங்கம் பண்ணவும் அனுப்பினால், யார் எங்கே போகிறார்கள் என்பது அல்ல அவர்களுக்குக் காரியமாம்.. அனுப்புகிறவர் தேவனல்லவா என்ற சிலாக்கியமே சந்தோஷமாய் அவர்களுக்குள் மேலோங்கி நிற்குமாம் !

பிரியமானவர்களே ! தேவன் தரும் செய்திக்குள் உங்களை தாழ்த்தி ஒப்புக்கொடுத்து விடுங்கள்.. பிரபலமான செய்திகளுக்குள் அல்ல.. தேவன் தரும் செய்தியின் பொருளுக்குள்ளும், வாழ்க்கையின் அர்த்தத்துக்குள்ளும், அவரது அழைப்புக்குள்ளும் உங்களை முழுவதுமாய்த் தந்து அவரது பலத்த கரத்துக்குள் அடங்கி விடுங்கள் ! அவரது ஆவிக்குரிய அதிகாரத்துக்கும், அவர் நியமிக்கும் அதிகாரங்களுக்கும், தெய்வீக சித்தத்துக்குள்ளும் உங்களையே தந்து விடுங்கள் !

தேவன் மனிதரை எழுப்ப மனிதரையே உபயோகிக்கிறார் !
அவர் ஆயுதங்களையும் கருவிகளையும் வடிவமைக்கத் தேர்ந்த கொல்லர்களையே உபயோகிக்கிறார் !

இந்த தேவனற்ற தலைமுறையிலே தமது சித்தத்தை நிறைவேற்ற உன்னை ஒரு உபயோகமான, திறமையான தண்டாயுதமாய், அஸ்திராயுதமாய், கூரான கோடாரியாய் தேவன் தன் கரத்தில் உன்னைக் கண்டுபிடிப்பாராக ! ஆமென்.

வருகையில் எடுத்துக் கொள்ளப்பட நீ ஆயத்தமாய் ஆசீர்வாதமாய் இருப்பாயாக !

DR. PAUL ENENCHE
NIGERIA

தமிழில்
அடைபட்ட அக்கினி
Pr. Romilton, Delhi
9810646981

நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமும் ஆனவன் ...

--------- தமிழில் ---------

PASTOR. S.ROMILTON